மண்ணும் மக்களும்

பண்பாட்டு ஆய்வு மாத இதழ்

www.aatrupadai.com

ஜூலை-2024 இதழ்-07 ஆனி - ஆடி



மண்ணும் மக்களும் – பண்பாட்டு ஆய்வு மாத இதழ்

ஆற்றுப்படை வெளியீடு

(2024 – **ஜூலை** – இதழ் – 07)

ஆக்கம்

வே. பார்த்திபன்

தொகுப்பு

பா. பிரபாகரன்

அ.சி. நடராஜன்

ஆற்றுப்படை குழு

தொடர்புக்கு - 97900 76772 / 90255 16415

பொருளடக்கம்

பொருளடக்கம்





மலைச்சிட்டான்




சரவணமணியன்.ப.அ

பொறியாளர்

சூழலியலாளர், வரலாற்று ஆர்வலர்,

காளையார்கோவில்





BLACK CAPPED BLACKBIRD - INDIAN BLACKBIRD - TURDUS MERULA - EURASIAN BLACKBIRD

CONSERVATION STATUS: LEAST CONCERN (POPULATION STABLE)

TAMIL NAME - இரவிகுளம் தேசிய பூங்காவிற்கு சென்று விட்டு திரும்ப மூணார் வரும் வழியில் தேயிலைத் தோட்டங்களுக்கு நடுவே ஓர் பறவை சத்தம் எழுப்பி தனது சகாக்களுடன் ஏதோ பேச்சுவார்த்தை நடத்தி கொண்டிருந்தது. வழக்கம்போல குரல் (**சூர்ர்.. சுக் சுக் சுக் னு எச்சரிக்கை ஒலி எழுப்புறாப்ள நம்மல பார்த்ததும்**) வந்த திசை நோக்கி தேயிலைத் தோட்டத்துக்குள்ள நுழைந்து வந்து பார்த்தா சற்று தொலைவில் காய்ந்த தேயிலை இலைகளை சுவைத்து கொண்டிருந்தாப்ள நம்ம **மலைச்சிட்டான்**.



INDIAN BLACKBIRD என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இதனை மொழிபெயர்ப்பு செய்றேன்னு இந்திய கரும்பறவை-னு வைக்காம விட்டாங்களே. அதுவே பெரிய விஷயம் தான். ஆமாங்க இது இந்திய **மலைச்சிட்டான்ங்க**. இவருக்கு **கரும்குருவி**, **கரிக்குருவி**, **சோலைப்பாடி** னு பல பெயர்கள் உண்டு. **பூங்குருவி** வகைகள்ள இவரு வருவாப்ள.

நம்ம இப்ப பார்க்குறது ஆண் மலைச்சிட்டான். பெண் மலைச்சிட்டான் சற்று மங்கிய நிறத்துல இருக்குது. பெரும்பாலும் தன்னோட ஜோடியோட உட்கார்ந்து பலவித பாஷைகள்ள பேசுவாப்ள.

பல குரல் மன்னன் இவரு. மத்த பறவைகள் மாதிரி குரல் கொடுத்து நம்மல ஏமாத்த பார்ப்பாப்ள. விடுவமா என்ன!! ஒரு வழியா பார்த்து படவிய எடுத்து படம்புடுச்சாச்சு.



கருந்தலையும், கருஞ்சாம்பல் நிறத்துல உடம்பையும், **ஆரஞ்சு தோய்ந்த மஞ்சள் நிறத்துல கண் வளையத்தையும், அதே வண்ணத்துல கால்களையும்**, **ஆரஞ்சு வண்ண அலகினையும்** பெற்று அழகாய் உருவான பறவை தான் இந்த மலைச்சிட்டான்.

பெரும்பாலும் நீலகிரி, கொடைக்கானல், மூணார் பக்கம் வரும்போது தான் இவர பார்க்க முடியுது. தரைல கிடக்குற காய்ந்த இலைகளையும், சருகுகளையும் தனது அலகினால் ஒரு புரட்டு புரட்டி போட்டு புழு பூச்சிகள தனது இரையாக்கிக்காறாப்ள. அப்பப்ப பழுத்து உதிர்ந்த பழங்களையும் ருசி பார்க்குறாப்ள.

இவ்வளவு நேரம் நமக்கு காட்சி கொடுத்தாப்ளயே நன்றி சொல்லி டாட்டா காட்டுவோம்னு கைய தூக்குனேன் பறந்துட்டாப்ள. சரி நெக்ஸ்ட் மீட் பண்றேன்னு கிளம்பியாச்சு.

இவருக்கு கருந்தலை மலைச்சிட்டான் - கரும்குருவி - கரிக்குருவி - கரிம்கிளி - மலைச்சிட்டான் - இந்திய மலைச்சிட்டான் என தமிழில் பல வட்டார வழக்கு பெயர்கள் உண்டுங்க.

காப்பு நிலை - தீவாய்ப்புக் கவலை குறைந்த இனம்

அன்பன்,

ப.அ.சரவண மணியன்



கரும்குருவி

கரிக்குருவி

சோலைப்பாடி



கருந்தலை

மலைச்சிட்டான்

கரும்குருவி

கரிம்கிளி



மலைச்சிட்டான்

இந்திய மலைச்சிட்டான்

அடியார்க்கும் அடியேன்





முனைவர் ப. காளீஸ்வரன்,
இளநிலை அறிவியல் அலுவலர்,
வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகம்,
மதுரை.

வரலாற்றினை அறிய முற்படுவதில் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் மிக முக்கியமான பங்கினை வகிக்கின்றன. கல்வெட்டுகள் கோவிலுக்கு வழங்கப்பட்ட கொடைகள் மட்டுமல்லாது, திருக்கோவில்களில் அந்தந்த காலங்களிலே எவ்வகையான வழிபாடுகள், எவ்வகையான வழிபாட்டு முறைகள், எப்படி வழிபாடுகள் நடைபெற்றன, யார் யாருக்கெல்லாம் வழிபாடு நடைபெற்றது என்ற பல்வேறு செய்திகளை தாங்கி நிற்கின்றன. இக்கட்டுரையிலே குறிப்பிடப்பட்டுள்ள **திருப்பனந்தாள் மற்றும் திருக்குவளை கல்வெட்டானது நாயன்மார்கள் வழிபாடு தொடர்பான செய்திகளை தாங்கி நிற்கின்றது**.

அடியாருக்கும் அடியார் ஆன **சுந்தரமூர்த்தி நாயனார்,** நாயன்மார்களின் திறத்தை வரிசைப்படுத்தி **திருத்தொண்டர் தொகையிலே பாடுகிறார்**. அந்த திருத்தொண்டர் தொகை பாடப்பட்ட நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றினை **பெரிய புராணம்** மிக விரிவாக எடுத்துரைக்கின்றது. அப்படி குறிப்பிடப்பட்டுள்ள நாயன்மார்களின் பெருமை அறியப்பெற்று திருக்கோயில்களில் அவர்களுக்கு சிலைகள் எடுக்க பெற்று வழிபாடு நடத்தப்பட்டு இருக்கின்றது. **திருப்பனந்தாளில் குங்கிலிய கலைய நாயனார், கண்ணப்ப நாயனார்க்கும், திருக்குவளை திருத்தலத்தில் அதிபத்த நாயனருக்கும் அடியார்களால் சிலை எடுக்க பெற்று வழிபாடு நடத்தப்பட்டது**. அதனையே இக்கட்டுரை விவரிக்கிறது.

திருப்பனந்தாள் குங்கிலிய கலய நாயனார் கல்வெட்டு:

திருப்பனந்தாள் - கும்பகோணத்திற்கு அருகில் இருக்கக்கூடிய தலம். கும்பகோணத்தில் இருந்து காட்டுமன்னார்குடி செல்லும் பேருந்துகள் இவ்வழியாகத்தான் செல்லும். மயிலாடுதுறையிலிருந்தும் நிறைய நகரப் பேருந்து வசதிகள் இத்திருக்கோயிலுக்கு உள்ளது. **பனைமரத்தை** தலைமரமாகக் கொண்ட



திருத்தலங்களில் திருப்பனந்தாள் திருத்தலமும் ஒன்று.

இக்கல்வெட்டு **மூன்றாம் குலோத்துங்க சோழனின் எட்டாவது ஆட்சி ஆண்டிலே திருப்பனந்தாள் செஞ்சடையப்பர் கோவிலில் எடுக்கப்பெற்ற கல்வெட்டாகும். கிபி** *1185* ஆம் ஆண்டை சேர்ந்த கல்வெட்டு ஆகும். கல்வெட்டுக்கும், குங்கிலிய கலய நாயனாருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. குங்கிலிய கலய நாயனாருக்கும் இந்த திருக்கோவிலுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அத்தொடர்பு என்ன? அவர்களோடு தொடர்புடைய இந்த கல்வெட்டுக்கும், இத்திருக்கோயிலுக்கும் உள்ள தொடர்பினையும் காண்போம்.

குங்கிலிய கலயர், திருக்கடையூர் திருத்தலத்திலே அவதரித்தார். அவர் இறைவனுக்குத் தினந்தோறும் குங்கிலியம் சமர்ப்பித்து திருப்பணி செய்து கொண்டிருந்தார். அவரை வறுமை பீடிக்க சொத்துக்கள் எல்லாம் விற்று தீர்த்தும், இறைவனுக்கு குங்கிலியம் இடும் பணியை செவ்வனே செய்து வந்தார். அவருடைய மனைவியார் தன் தாலிக்கயிற்றில் இருந்த பொன்னை அவிழ்த்து எடுத்து அதனை விற்று பிள்ளைகளின் பசியாற்றுவதற்காக நெல் வாங்கி வருமாறு கூறுகிறார். இதைக் கண்டு பதறிய குங்கிலிய கலயரிடம் சமாதானம் சொல்லி

தன்னுடைய தாலிக் கயிற்றில் இருந்த பொன்னைக் கொடுக்கிறார். கலையரும் அதனைப் பெற்றுக்கொண்டு சந்தைக்குச் செல்கிறார். செல்லும் வழியிலே குங்கிலிய பொதியினைக் கொண்டு வரக்கூடிய ஒரு வண்டியைக் காண்கிறார். அதைக் கேட்டு தான் கொண்டு வந்திருந்த பொன்னைக் கொடுத்து அந்த குங்கிலியம் அத்தனையையும் வாங்கிக் கொண்டு அதனை ஆலய பண்டாரத்திலே சேர்ப்பிக்கச் செய்கிறார்.

இப்பணி எல்லாம் செய்து முடித்த பிறகு தான் அவருக்கு ஞாபகமே வருகிறது மனைவி கொடுத்து அனுப்பிய பொன் தனது வீட்டில் குழந்தைகள் பசியாற நெல் வாங்க கொடுத்து அனுப்பியது என்று, பதறிப் போன கலையர் திகைத்து கோயில் மண்டபத்திலேயே அமர்ந்திருந்தவர், அசதியில் உறங்கிப் போனார். கணவர் வீட்டிற்கு வருவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த மனைவியும், பிள்ளைகளும் அதிக நேரம் வரை எதிர்பார்த்து நடுநிசி தாண்டி தூங்கிவிட்டார்.

தன் குடும்பம் உயிர் வாழ்வதற்காக கொடுத்து அனுப்பிய தங்கத்தையும் தனக்கு குங்கிலியம் இடுவதற்காக கொடுத்த அந்த பக்தன் படும் இன்னலை அறிந்த **அமிர்தகடேஸ்வர சுவாமி** கலையரின் வீட்டிலே பொன்னும், மணியும், நெல்லுமாகக் குவியச் செய்தார். கலையரின் கனவிலும் தோன்றி வீட்டிற்குச் சென்று பசியாறு என்று உத்தரவிடுகிறார். கலையருக்கு எழுந்து செல்ல மனமில்லை. இருப்பினும் இறைவன் கட்டளை, வீட்டிற்குச் செல்கிறார். தன் வீடு தானா எனும் அளவுக்கு அங்கே அவர் கண்ட காட்சி உண்மையிலேயே திடுக்கிட வைத்தது. அவர் பூசைக்கு கிடைத்த பலன், அமிர்தகடேஸ்வரரின் அருள் என்று எண்ணி மகிழ்ச்சி கொண்டு இருந்த காலத்திலே, திருப்பனந்தாள் கோவிலிலே ஒரு நிகழ்வு நடைபெறுகிறது.

திருப்பனந்தாள் கோவிலுக்கு **தாடகை ஈஸ்வரம்** என்ற ஒரு பெயரும் உண்டு. பெருமாளுக்குத் **திருத்தாடகை ஈஸ்வரமுடையார்** என்று ஒரு பெயரும் உண்டு. கல்வெட்டுக்கள் பெரும்பாலும் திருத்தாடகை ஈஸ்வரமுடையார் என்றே குறிப்பிடுகின்றன. **செஞ்சடையப்பர்** என்ற அழகு தமிழ் சொல் தற்பொழுது **அருணாஜடேஸ்வரர்** என்று பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஏன் இவ்வாறு திருத்தாடகை ஈஸ்வரமுடையார் என்று தலத்து இறைவன் அழைக்கப்படுகிறார் என்றால், அது ஒரு பக்தைக்காக இறைவன் செய்த செயலால் அவ்வாறு அழைக்கப்பட்டார். தாடகை என்னும் ஒரு பெண். இந்த தாடகையும் ராமாயணத்தில் வரும் தாடகையும் வேறுவேறு. இறைவனுக்குத் தினந்தோறும் நீர் கொண்டு வந்து நீராட்டிச் சென்றார். அப்படி ஒரு நாள் அவர் இறைவனுக்கு நீராட்டிக் கொண்டிருக்கும் பொழுது அவருடைய உடை நழுவவே, அதனை பிடிக்கும் பொருட்டு சற்று கையை இறக்கினார். ஆனால் கையை இறக்கினால் இறைவனுக்கு நீராட்ட முடியாது என்ற எண்ணமும் அவரை சேர்ந்து கொண்டது.



உடுக்கை இழந்தவன் கை போல இடுக்கண் களைவதாம் நட்பு என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். திருக்குறளை மெய்ப்பிக்கும் விதமாக அங்கே ஆண்டவன் தாடகைக்கு அருள் புரிகிறார். அவரின் நிலையறிந்து குனிந்து நீராட்டம் பெறுகிறார். தன்னுடைய சடையை தாழ்த்தி அம்மையின் அன்புக்கு அடிபணிகிறார். அம்மையும் மகிழ்கிறார். இப்படி சற்று சாய்ந்திருந்த சிவபெருமான், தன் பக்தைக்கு அருளிய திருக்கோலத்தை உலகோருக்கு எடுத்துக்காட்ட அவர் நிமிராது அதே நிலையிலேயே இருந்து விட்டார். அப்படி சாய்ந்த திருமேனியை நேரான நிலையில் வைக்க வேண்டும் என்று சோழ மன்னர் முயற்சி செய்தார். யானைகள் கட்டி இழுத்தும் இறைவன் நேரான நிலைக்கு வரவில்லை.

இதைக் கேள்விப்பட்டு கலையர் திருப்பனந்தாள் சென்று, அத்தகைய அரிய காட்சியினை கண்டு வர வேண்டும் என்று மன உந்துதலால் திருப்பனந்தாள் செல்கிறார். அவருக்கு அதுவரை சாய்ந்து இருந்த சிவபெருமான் தன்னால் நேராகப் போகிறார் என்று எண்ணம் இல்லை. அங்கே சென்று இறைவனை கண்டு வழிபடுகையிலே குங்கிலிய கலைய நாயனாரின் பெருமையை மீண்டும் உலகுக்கு எடுத்துக்காட்ட எம்பெருமான் சித்தம் கொண்டார் போல, குங்கிலிய கலைய நாயனார் கழுத்திலே கயிறு கட்டி இழுக்க சாய்ந்த நிலையில் இருந்த இறைவனின் முடியானது, தாடகைக்காக சாய்ந்த இறைவனின் திருமுடியானது குங்கிலிய கலைய நாயனருக்காக நேரானது. இவ்வளவு பெருமையையும் பெற்ற அந்த இறைவன் அழகுத் தமிழால் செஞ்சடையப்பர் என்று அழைக்கப்பட்டு, இன்று அருணாஜடேஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார்.



பெருமை மிகுந்த குங்கிலிய கலைய நாயனாரின் பெருமையை இந்த உலகோர்க்கும் பறைசாற்ற வேண்டும் என்று மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்திலே வாழ்ந்த ஓர் அடியவர் விருப்பம் கொண்டார் போலும். அவர் குங்கிலிய கலய நாயனார் மட்டுமின்றி கண்ணப்ப நாயனார் மற்றும் சில நாயன்மார் பெருமாளுக்கும் சிலைகள் அமைத்து அவற்றின் வழிபாட்டுச் செலவிற்காக நில தானம் அளித்துள்ளார்.

விருதராஜ பயங்கர வளநாட்டு மண்ணி நாட்டு திருப்பனந்தாள்... என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறது. மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்திலே இந்த இறைவன் திருத்தாடகை ஈஸ்வரமுடையார் என்று அழைக்கப் பெற்றிருக்கிறார். இக்கல்வெட்டிலே

> **"திருத்தாடகை ஈஸ்வரமுடையாரை செவ்வே எழுந்தருள்வித்த திருக்கடவூர் குங்கிலியக் கலையர் சீபாதத்துக்குப் பணி செய்து இருக்கும்...."**

என்று சொல்லப்படக்கூடிய அடியில் இருந்து சாய்ந்திருந்த சிவபெருமானை நேராக எழுந்தருளுவித்த திருக்கடவூர் குங்கிலியக்கலையர் என்ற செய்தியை இந்த கல்வெட்டு தாங்கி நிற்கிறது என்பதனை நம்மால் அறிய முடிகிறது.

குங்கிலிய கலையநாயனாருக்குப் பணி செய்து இருக்கக்கூடிய அடியவர் பெயர் தீயிலும் பிரியாதான் அழியா விரதங் கொண்டானான **குங்கிலிய கலையநேன்** என்பவராகும். அவருடைய பெயரையே இவருக்கும் சூட்டி அவருடைய பெற்றோர்கள் மகிழ்ந்திருக்கிறார்கள் அல்லது அவரே பின்னாளில் குங்கிலிய கலைய நாயனாரின் பெருமையை அறிந்து தன் பெயரையும் மாற்றி இருக்கக்கூடும். அவர் குங்கிலிய கலைய நாயனாருக்கு அடியாராக இருந்துள்ளார். இந்த வேளையிலே சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய அடியார்க்கும் அடியேன் என்ற பாடல் தான் நினைவிற்கு வருகிறது. அந்த குங்கிலிய கலையநேன் என்பவர் குங்கிலிய கலையநாயனாருக்கும், **திருவேட்டுவப் பெருமாள்** என்று சொல்லக்கூடிய கண்ணப்ப நாயனருக்கும் மற்றும் சில நாயன்மார்களுக்கும் சிலைகள் எழுப்பி அவற்றின் வழிபாட்டுச் செலவிற்காக ஒரு வேலி நிலத்தையும் அளிக்கிறார்.

நாயன்மார்களிலேயே **வேடுவர் குலத்தைச்** சேர்ந்த ஒரே ஒருவர் கண்ணப்ப நாயனார் மட்டுமே. இந்தக் கல்வெட்டிலே குறிப்பிடப்படக்கூடிய திருவேட்டுவப் பெருமாள் என்பவர் கண்ணப்ப நாயனாராக தான் இருக்க முடியும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கிறது. இப்படி ஒரு வேலி நிலத்தை தானமாக அளித்த பாங்கானது அவருக்கு இறைவன் மீதுள்ள பற்றினால் ஏற்பட்டதாகும். அவருக்கு தானம் அளிக்கப்பட்ட நிலமானது உடையார் திருத்தாடகை

ஈஸ்வரமுடையார் தேவதானம் ராஜேந்திர சோழ நல்லூரில் அமைந்திருக்கின்றது. அந்த ஊரிலே அமைந்த ஒரு வேலி நிலத்தையும் தீயிலும் பிரியாதான் அழியா விரதம் கொண்டானான குங்கிலிய கலையன் கோவிலுக்கு தானமாக அளிக்கிறார். அப்படி அவர் தானமாக அளித்ததை கல்வெட்டிலே பலரும் அறிவேன் என்று பெயரிடுகிறார்கள்.

அவர்களுடைய பெயர்கள் சில கீழையிலுடையான், திருப்பாந்தாளுடையானேன், ஆதனுடையானேன், நாற்பத்தெண்ணாயிர பட்டன் பாந்தாளுடையான் பிரியாதானேன், வீதி விநாயகர் பிச்சனேன்,

திருப்பாந்தாளுடைய சர்வகிருது நாராயண பட்டன், பரமேஸ்வர பட்டன்,

ஸ்ரீபராந்தகன் எறுகேச பட்டன், நச்சிநர்க்கிநி பட்டன், காட்டூர் வரதராசப்பட்டன், அழகிய சோழ பிரம்மராயன், சிரிபட்டன், வட்டமண் சூரிய பட்டன், அருளாளப் பட்டன், தானதரப்பட்டன், நாங்கூரான் வரதராசபட்டன், வடுகக் குடையான், திருமிகைச்சூர் திருவிடை மருதூர் உடையான், புங்கனூர் கிழவன், செம்பியன் கோன், இளைய கண்ணங்குடையான், வடுகக் குடையான், காஞ்சிரம் பட்ட உடையான், குருகுலராயன், தென்னவதராயன், எழுமண்டலம் கொண்ட வேளாண்,

திருப்பாதம் காங்கேயன், கவுண்டப்பரத காலிங்கராயன், வைகாவூருடையான், சிவந்த பெருமாள், கனகசுப்ரபாத பட்டன்.

இந்த பெயர்களில் சில குறிப்பிட்ட பெயர்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அவை **ஸ்ரீபராந்தகன் என்ற பட்டம் கொண்ட ஒரு பெயர், அழகிய சோழ பிரம்மராயன் என்று பிரமராய பட்டம் பெற்ற பெயர், செம்பியன்** போன்றவை எல்லாம் முக்கியத்துவம் வாய்ந்த பெயர்களாக காணப்படுகின்றன. இவர்கள் அப்பகுதியிலே வாழ்ந்த அதிகாரிகளாக இருந்திருக்கலாம். மேலும் ஒரு பெயரில் எழுமண்டலம் கொண்ட வேளாண் என்று வருகிறது, இவரும் அப்பகுதியில் வாழ்ந்த சோழ தேசத்துப் போர்படை அதிகாரிகளில் ஒருவராக இருக்கலாம்.

இப்படி நாயன்மார்களின் செய்தியைத் தாங்கி இருக்கக்கூடிய ஓர் கல்வெட்டையும், அந்த நாயனாருக்குப் பணி செய்த ஓர் அடியாருடைய பெருமையைப் போற்றக்கூடியதாக இந்த குலோத்துங்க சோழனுடைய காலத்துக் கல்வெட்டு இருக்கிறது என்றால் அதனைத் தெரிந்து கொள்வது மட்டுமன்றி, நாமெல்லாம் அந்த கல்வெட்டை பார்க்கவும் பாக்கியம் செய்திருக்க வேண்டும்.

திருக்குவளை அதிபத்த நாயனார் கல்வெட்டு:

'விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற்கு அடியேன்'


என்று திருத்தொண்டர் தொகையில் அதிபத்த நாயனாரின் பெருமையை ஒரு வரியில் எடுத்து இயம்பிய சுந்தரமூர்த்தி நாயனாரின் இவ்வரிகளுக்கு விளக்கம் சேர்க்கும் விதமாக பெரிய புராணத்திலே அதிபத்த நாயனாரின் வரலாற்றை விரிவாகவே சேக்கிழார் பெருமான் தருகின்றார்.

அதிபத்த நாயனாரின் பெருமை அறிந்து அவருடைய இனத்தில் வந்த ஓர் பெரியவர் திருக்குவளை என்ற திருத்தலத்திலே அவருக்கு சிலை ஒன்றினை செய்கிறார். மூன்றாம் ராஜராஜனின் நான்காவது ஆட்சியாண்டு அதாவது கிபி 1220 ஆம் ஆண்டு ஓர் மார்கழித் திங்களிலே இந்த திருப்பணியை அவர் செய்கின்றார்.

திருக்குவளை திருத்தலம் திருக்கோளிலி என்று அழைக்கப்பட்டிருக்கின்றது. இத்திருத்தலத்தில் வழிபடுபவர்களுக்கு நவக்கிரகங்களால் ஏற்படும் எவ்வித தொல்லைகளும் வராது. இத்திருத்தலத்தில் ஒன்பது கிரகங்களும் ஒரே நேர் வரிசையில் நிற்கின்றன. இத்திருத்தலத்தில் தான் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு குண்டையூர் கிழாரிடம் இருந்து, நெல் மலையை இறைவன் பெற்றுத் தந்தார். **இத்திருத்தலம் சப்தவிடங்க தலங்களில் ஒன்றாகும். தியாகராசர் எழுந்தருளியிருக்கும் ஏழு தலங்களில் இந்த திருத்தலமும் ஒன்று. பெருமை மிகுந்த இந்த**

திருத்தலம் அருகே திரு வாய்மூர் எனும் சப்தவிடங்க தலமும் உள்ளது. அருகருகே அமைந்திருக்க கூடிய சப்தவிடங்க தலங்களில் நாகப்பட்டினத்திற்கு அருகிலேயே இத்திருத்தலமும் அமைந்துள்ளது. திருவாரூரில் இருந்தும் திருக்கோவிலை அடையலாம். அதிபத்த நாயனார் நாகப்பட்டினத்தில் தான் வாழ்ந்து வந்தார்.

சிவன் படவர் இனத்தைச் சார்ந்த **ஆலன்** என்பவர் அதிபத்த நாயனாரை திருக்கோளிலி எனும் திருக்குவளை திருத்தலத்திலே எழுந்தருளுவிக்கிறார். இத்திருத்தல இறைவன் **திருக்கோளிலி உடையார்** என அன்று அழைக்கப்பட்டிருக்கிறார். சிவன் படவர் என்பது செம்படவர் என்ற வார்த்தையை குறிக்கலாம் என்பது கல்வெட்டு ஆய்வாளர் குடவாயில் பாலசுப்பிரமணியன் ஐயா அவர்களின் கருத்தாகும். இந்த சிவன் படவர் இனத்தில் வந்த ஆலன் என்பவர் அவர்களுடைய இனத்தை சார்ந்தவர்களிடம், தான் எழுந்தருளுவித்த அதிபத்த நாயனாருக்கு திருப்படி மாற்றுக்காக 2,100 காசுகளை இரந்து கேட்டு பெறுகிறார். அவ்வாறு அவர் பெற்ற 2,100 காசுகளை இத்திருக்கோவில் ஐய்யனையப் பட்டன் மகன் தாமோதர பட்டன் என்பவரிடம் பொலிசையாக இக்காசினை கொடுத்து திருப்படிமாற்றுக்காக தினமும் இருநாழி அரிசி அமுது படிக்கு கொடுக்க வேண்டும் என்று கூறுகிறார். அவரும் இதற்கு சம்மதிப்பதாக இக்கல்வெட்டு கூறுகிறது.



அதிபத்த நாயனார் மீனவ குலத்தை சார்ந்தவர். அவருடைய தொழில் மீன் பிடித்து வாழ்வு நடத்துவதாகும். அவருடைய சிவபக்தியினால் தினம்தோறும் அவர் மீன் பிடிக்கும் பொழுது முதலில் பிடிக்கும் மீனை இறைவனுக்கு என்று கடலில் அர்ப்பணித்து விடுவார். இவர் அந்த மீனவர் குலத்தின் தலைவராகவும் இருந்து வந்ததார். இப்படி சென்று கொண்டிருக்கையிலே பக்தனை சோதிக்க எண்ணிய சிவபெருமான் தினம் தோறும் குவியல் குவியல்களாக கிடைத்துக் கொண்டிருந்த மீனின் எண்ணிக்கையை வெகுவாக குறையச் செய்தார். தினமும் வலையில் அகப்படும் மீன்களின் எண்ணிக்கை குறைய ஆரம்பித்தது. இருப்பினும் அதிபத்தர் தன்னுடைய பக்தியில் மாறாது தினமும் முதலில் பிடிக்கப்படும் மீனை இறைவனுக்கு அளித்து வந்தார். இன்னும் சில நாட்கள் கழித்து ஒரு மீனே கிடைக்க ஆரம்பித்தது. தான் உண்ணாது பட்டினியில் இருந்தாலும் இறைவனுக்கு செய்யப்படும் காணிக்கையானது தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று எண்ணி, தம் குலத்தில் உள்ளவர்களுக்கும் கட்டளையிட்டு இருந்தார். அவ்வாறு ஒரு மீனே கிடைத்த போதும் அந்த ஒரு மீனானது இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

இப்படி வறுமையில் வாடிக் கொண்டிருந்த அதிபத்த நாயனாரின் வாழ்நாளில் ஒரு நாளில் தங்க மீன் ஒன்று நவமணிகளால் பதிக்கப் பெற்று வலையில் அகப்பட்டது. அன்று வேறு எந்த மீனும் கிடைக்கவில்லை. அந்த ஒரு தங்க மீனே கிடைத்தது. அந்த தங்க மீனுக்கு இணையாக இவ்வுலகையே ஈடாக வைக்கலாம் என்ற அளவு மீனில் மணிகள் பொதிந்து காணப்பட்டது. அனைவரும் மகிழ்ந்து கொண்டிருந்த வேளையிலே அதிபத்த நாயனார் இறைவனுக்கு கொடுக்கப்பட வேண்டிய காணிக்கையானது கொடுக்கப்பட வேண்டும். எனவே அந்த மீன் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்று மீண்டும் கடலிலேயே விட்டுவிடுகிறார்.

அந்த வேளையிலே இறைவன் ரிஷபாரூடராக அம்மையுடன் காட்சி தந்து அதிபத்தரின் பக்தியை மெச்சுகிறார். அதிபத்தர்

அதிபத்த நாயனார் ஆகின்றார். இக்காட்சி பெரிய புராணத்திலே அழகாக விளக்கப்பட்டிருக்கின்றது.


அதிபத்த நாயனாரின் பெருமையை அறிந்த ஓர் அடியார் அதிபத்திற்கு திருக்கோளிலி எனும் திருக்குவளை திருத்தலத்திலே அதிபத்தரின் சிலையை எழுந்தருளுவிக்கிறார்.

இன்னும் பல அடியார்களின் பால், அவர்களின் பெருமைகள் பால் ஈர்க்கப்பட்டு அடியார்களின் பெயரில் கோயில்களுக்கு கொடைகள் கொடுக்கப்பட்ட செய்தி ஏராளமான கல்வெட்டுகளில் காணக் கிடைக்கின்றன.



தூங்கானை மாடங்களும் மாடக்கோயில்களும்





மருத்துவர் மு.சுரேந்திரன்
நாளமில்லாச் சுரப்பியியல் நிபுணர்,
வரலாறு மற்றும் கோயில்கட்டிடக்கலை ஆர்வலர்,
கோவை.

அறிமுகம்:

தமிழக கோயிற்கலையின் தோற்றம் பழமையான காலத்தியது. காலந்தோறும் மாற்றங்களை உள்வாங்கி வளரந்து வந்துகொண்டிருப்பது. அதன் பல்வேறு வடிவத் தோற்றமாறுபாடுகளும், நுட்பங்களும் அந்தந்தப் பிரதேசங்களுக்குத் தக்கவாறு நிலவியல் அடிப்படையிலும், கிடைக்கும் கட்டுமானப் பொருட்களின் தன்மைக்கு உகந்தவாறும் மாறி வந்துள்ளன.

ஆனால், இம்மாதிரியான வளர்ச்சிக் கூறுகள் கற்றளிகளின் உருவாக்க காலத்திற்கு முன்பே, அதாவது பொ.கா.5-ம் நூற்றாண்டிற்கு முன்பே நிலைபெற்று விட்டமையாலும், கோயிற்கலை மரபுவழிக் கல்வியாக தொடரப் பட்டதாலும், திராவிடக் கோயிற் கலையின் பல்வேறு வடிவங்களுக்கும், தோற்ற மாறுபாடுகளுக்கும் தொழில்நுட்ப ரீதியான காரணங்கள் நமக்குப் புரிவதில்லை. கேள்விகளின்றி தொடர்ந்து பலதலைமுறைக் கட்டுமானத்தச்சர்களால் தொடரப்பட்டதும் ஓர் காரணம். இதனால் பிற்காலத்தில் பலவாறு கற்பனையான பொருத்தமற்ற காரணங்கள் கற்பிக்கப் பட்டு வந்துள்ளன !வருகின்றன!!

தூங்கானை மாட விமானம்:

விமான வகைப்பாடுகளில் திராவிட மரபு விமானங்கள் நாகரம், திராவிடம், வேசரம் என இடத்தகவின் அடிப்படையில் மூன்று பெரும் வகைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. இவற்றில் வட்டத்தை அடிப்படையாக கொண்ட கஜபிருஷ்ட வடிவ விமானங்கள் தனித்தன்மையானவை.

செவ்வகமும் அரைவட்டமும் இணைந்த வடிவத்தில் இவை எடுக்கப் படுகின்றன. இவற்றின் பழந்தமிழ்ப் பெயர் தூங்கானை மாடம் என்பதாகும். யானை படுத்திருப்பது போன்று தோற்றமளிப்பதால் இப்பெயர். இதில் காணும் மாடம் என்ற சொல் இவ்வகையான விமானங்கள் சற்றே உயர்த்திக் கட்டப்பட்டு இருந்த தன்மையைக் காட்டுகின்றன. இவ்வகை தூங்கானை மாடக் கோயில்கள் தொண்டை மண்டலப் பகுதிகளிலேயே அதிக அளவில் காணப்படுகின்றன. இவ்வகை விமானங்களில் காலத்தால் பழமையான கோயில்கள் இப்பகுதியேயே காணக்கிடைக்கின்றன.



மாடக்கோயில் விமானம்:

மற்றொரு தனித்தன்மையான விமான வடிவம் மாடக்கோயில் கட்டுமானமாகும். இதன் இடத்தகவின் வடிவம் நாகர விமானத்தை

அடிப்படையாக கொண்டிருந்தாலும், கட்டுமானம் சற்றே புதுமையானது. **ஆதி தளம்** எனப்படும் தரைத்தளம் ஓர் மேடையாக அமைந்து அதன்மேல் கருவறையும் விமானமும் எழுப்பபடுகிறது. கருவறையை அடைய தரையிலிருந்து படிக்கட்டுகளும் அமைக்கப்பட்டிருக்கும்.

இவ்வகை மாடக்கோயிலகள், காவிரியாற்றின் வடிநிலப் பகுதியிலேயே காணப்படுகின்றன.

பழமை:

தூங்கானை மாடக்கோயில்களும், மாடக்கோயில்களும் பக்தி இலக்கியக் காலமான 6 மற்றும் 7ம் நூற்றாண்டுகளிலேயே தேவாரப் பாடல்களிலும், ஆழ்வார்களின் பாடல்களிலும் காணப்படுவதால், இவ்வகை விமானங்கள் பொ.கா.5-ம் நூற்றாண்டிற்கும் முந்தியவை என அறியக்கூடும் .

"…கடந்தை தடங்கோயில்சேர்

தூங்கானைமாடம் தொழுமின்களோ!"

சம்பந்தர் பாடிய பெண்ணாகடப் பதிகம்.

"கடந்தையுள் தூங்கானை

மாடச் சுடர்க்கொழுந்தே !"

திருநாவுக்கரசர் பாடல்.

"….தெய்வ வாள் வலங்கொண்ட

செங்கணான் சேர்

திருநறையூர் மணிமாடக்கோயில் சேர்மின்களோ !"

திருமங்கையாழ்வார் பாடல்.

"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்

பெருங்கோயில் எழுபதினோடெட்டும்

கரக்கோயில் கடிபொழில் சூழ் ஞாழற்கோயில்

கருப்பறியல் பொருப்பணைய கொகுடிக்கோயில்

இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்

இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்

திருக்கோயில் சிவனுறையும் கோயில் எல்லாம்

தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றோ "!

இங்கே **பெருங்கோயில்கள்** எனப்படுபவை **மாடக் கோயில்கள்.** **ஆலக்** கோயில்கள் எனப்படுபவை **தூங்கானை மாடக்** கோயில்கள். காரணங்கள் பின்வரும் பத்திகளில் விளக்கப் படும். மேலும் இவை பொ.கா.6-ம் நூற்றாண்டளவிலேயே மரபு வழிப்பட்ட கட்டுமானக் கோயில்களாக இருந்துள்ளன என்பது இவற்றின் பழமையை முன்னும் பல நூற்றாண்டுகள் எடுத்துச் செல்லும்.

தூங்கானை மாடக் கோயில்கள் எனப்படும் குதிரை லாட வடிவ (apsidal) விமானங்கள் மிகப்பழங்காலத்திலிருந்தே தமிழகத்தில் வழக்கத்திலுள்ளவை. பெருங்கற்காலச் சின்னங்கள் காணப்படும் சில பகுதிகளில் லாட வடிவ அடித்தளம் கொண்ட கற்கட்டுமானங்களின் எச்சங்கள் உடுமலைப் பேட்டை அருகில் காணப்படுகின்றன. பூம்புகார் ஆழ்கடல் அகழவாய்வில் கண்டறியப் பட்ட ஓர் கட்டுமானம் லாட வடிவத்தில் கட்டப்பட்டுள்ளது. **மயமதம்** எனும் திராவிடக் கோயிற்கலைக்கே உரித்தான கட்டிடக்கலை நூலில் **மண்டூகப் பதவின்யாசம்** எனும் பதப்பிரிப்பு முறையில் தூங்கானை மாடக்கோயிலின் தரைத்தள வடிவமைப்பை அமைக்கும் முறை கூறப்படுகிறது.

தமிழகத்தின் பழைமையான குடைவரைக் கோயிலாக கருதப் படும் **பிள்ளையார்பட்டிக் குடைவரையின்** கருவறை தூங்கானை மாடக் கருவறையின் லாட வடிவத்திலேயே உள்ளது. அதற்கும் முந்தியதும் பொ.கா.முதலாம் நூற்றாண்டினதாக கருதப் படும் **குடிமல்லம் சிவன் கோயில்** கருவறையும் தூங்கானை மாட விமானமாகும். பரமேஸ்வரப் பல்லவனால்

கட்டப்பட்ட கூரம் கற்றளி தூங்கானை மாட விமானமே யாகும்.

முதலாம் மகேந்திரவர்மன் காலத்தைச் சேர்ந்த சேஜர்லா கோயில் இவ்வகையைச் சேர்ந்ததாகும். இராஜசிம்மன் காலத்தில் அதுகாறும் நிலைத்த வழக்கிலிருந்த திராவிட விமான மாதிரிகளாக செதுக்கி எடுக்கப்பட்ட ஒரு கல் விமானங்களில் நகுலசகாதேவ இரதம் என்று அறியப் படும் தூங்கானை மாடக் கோயிலும் உண்டு.

நிலவியல் தொழில்நுட்பம்

தூங்கானைமாடங்கள்:

தோற்றத்தின் அடிப்படையில் இவ்வகை விமானங்கள் தூங்கானை மாடம் அல்லது கஜபிருஷ்ட விமானங்கள் என அழைக்கப் பட்டிருந்தாலும். தொழில் நுட்ப ரீதியில் இவற்றின் கட்டுமானம் நிலவியல் அடிப்படையிலானது.

இவ்வகை விமானங்கள் மிகப் பரவலாக பாலாற்றின் வடகரையிலும் தென்கரையிலும், அதாவது வடபெண்ணை தென்பெண்ணை ஆறுகளுக்கு இடையில் இவ்வகை விமானங்கள் பழங்காலம் தொட்டே எடுக்கப் பட்டு வந்துள்ளன.

இப்பகுதியின் நிலவியல் அமைப்பானது, தக்காணப் பீடபூமியின் கிழக்குச் சரிவிற்கும், கீழைக் கடற்கரைக்கும் இடையேயான குறுகலான அதிகச் சரிவைக் கொண்ட நிலப் பகுதியாகும். வடகிழக்குப் பருவமழையினால் குறுகிய காலத்தில் மிக கனமான மழைப்பொழிவைப் பெறக்கூடிய பிரதேசம். தற்காலத்தில் சில பெரும் அணைகளும் நூற்றுக்கணக்கான தடுப்பணைகளும் உள்ள நிலையிலும் மழைக்காலச் சேதங்கள் பெரிய அளவிலேயே இருப்பது நமக்குத் தெரியும்.

இவ்வாறான அணைகள் இல்லாத அக்காலகட்டத்தில் இந்த ஆறுகளில் வெள்ளப் பெருக்கின் அளவும் வேகமும் எந்த அளவிற்கு இருந்திருக்கும் என்பது உணர்ந்தறியக் கூடும் .

இந்த வெள்ளச் சேதங்களில் இருந்து ஊர் மக்கள் வழிபாட்டில் இருந்த கோயில்களைக் காப்பாற்ற மரபு நெறிக்கு உட்பட்டு **மண்டுகப் பதவின்யாசத்தின்** அடிப்படையில் உருவான கோயில்களே **கஜபிருஷ்ட வடிவ விமானங்களாகும்**. இவ்வகை விமானங்கள் அமைந்துள்ள இடங்கள் எல்லாமே ஆற்றங்கரைகளிலும், பெரும் நீர்நிலைகளுக்கு கிழக்கில் பள்ளமான இடங்களிலும், எப்போதும் கிழக்கு நோக்கிய வாயில்களுடனே அமைக்கப் பட்டுள்ளன. இதனால், இவ்வகை விமானங்கள் வேகமான, குறுகிய கால கட்டத்தில் நேரும் பெருவெள்ளத்தை மிகத் திறமையான முறையில் தாங்கி தங்களைச் சிறப்பான கட்டுமானக் கோயில்களாக காட்டிக் கொண்டுள்ளன.

இந்த தொழில் நுட்ப முறையே தூங்கானைவிமானங்களின் அறிவியல் அடிப்படையாகும். இவ்விமானங்கள் எப்போதும் நீரநிலைகளின் அணித்தே எழுந்து நிற்பதால் இவற்றுக்கு **"ஆலக் கோயில்"** என்ற பெயரும்

வழங்கியுள்ளது. ஆல் என்றால் நீர் சூழ்ந்த என்பது பொருள். இவ்வகை கட்டுமானம் நீர் நிலைகளும் ஆறுகளும் அதிகமுள்ள தொண்டை மண்டலப் பகுதியிலேயே எண்ணிக்கையில் அதிக அளவில் இருப்பதும் இயல்பானதே. சோழமண்டலத்தில் சில பழங் கோயில்கள் கஜபிருஷ்ட வடிவில் இருப்பினும் அவையும் வேகமான சிற்றாறுகளின் கரைகளிலேயே எடுக்கப்பட்டிருப்பது இவ்வுருவாக்கத்தின் அடிப்படையை விளக்கி நிற்கும்.

மாடக்கோயில்கள்:

திருநாவுக்கரசர் தன்னுடைய பாடலில் சிறப்பாக குறிப்பிடும் **கோச்செங்கணாட்சோழனால் எடுக்கப்பட்ட எழுபத்தெட்டுப் பெருங்கோயில்கள் மாடக்கோயில்களே.** அக்காலகட்டத்தில் சுமார் 5ம் நூற்றாண்டளவில் உயர்ந்த மேடைகளில் இருத்தப்பட்டிருந்த கருவறையும் முகமண்டபமும் கொண்ட இவ்விமானங்கள் தோற்றத்தின் அடிப்படையில் பெருந்திருக்கோயில்களாக அறியப்பட்டன. இவற்றினை ஒட்டியே ஊரக மக்களாலும், பின்வந்த பல்லவர் காலத்தில் கோயில்களைக் கைக்கொண்ட வைதீகத்தாராலும் புராணக் கதைகள் உருவாக்கப்பட்டு **"யானை ஏறா**



மாடக்கோயில்கள்" என இவை பிரபலப் படுத்தப்பட்டன.

பொ.கா.5-ம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த சிம்மவிஷ்ணுவின் சமகாலத்தவரும், அதே பெயரினை இயற்பெயராக கொண்டவருமான செங்கணாட் சோழன் எழுப்பியதாக பக்தி இலக்கியங்கள் கூறும் மாடக் கோயில்கள் ஓர் தனித்தன்மையான வடிவமுடையவை. ஆதிதளம் எனப்படும் தரைத்தளம் ஓர் மேடையாக மட்டும் செயல்படுவதோடு, அடித்தள உறுப்பான அதிட்டானம் பெற்றும் எல்லா சுவர் உறுப்புக்களைப் பெற்றும், மேல் தளத்தில் கருவறை விமானத்தை தாங்கி நிற்கும் இதுவே **மாடம்** என அழைக்கப்படுகிறது.

கோச்செங்கணாட் சோழரால் எழுபத்தெட்டுப் பெருங்கோயில்கள் மாடக்கோயில்களாக எடுக்கப்பட்டிருந்தாக பொ.கா.6-ம் நூற்றாண்டில் வாழ்ந்த **திருநாவுக்கரசரும்**, 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த **திருமங்கையாழ்வாரும்** பாடியுள்ளனர். அவற்றில் தற்போது காணக் கிடைப்பவை 33



கோயில்களேயாகும். இந்த மாடக் கோயில்களின் முன் மாதிரி வடிவங்கள் செங்கணாட் சோழரின் காலத்திற்கு முன்பே இருந்திருக்க வேண்டும் ஆனால், அவை வெவ்வேறு பெயர்களில் அழைக்கப் பட்டுள்ளன. எடுத்துக் காட்டுகளாக, **"கருப்பறியல் பொருப்பணைய கொகுடிக் கோயில்"** - திருக்கருப்பறியலூரில் "மலை போன்று" காணத் தோற்றமளிக்கும் கொகுடிக் கோயில் என்பது பொருள். இந்தக் கோயிலும் மாடக்கோயில் வடிவிலேயே உள்ளது. ஆனால், சோழருக்கும் முந்தியது. இதே போல் **சீர்காழி தோணிமலை விமானமும், வீழிமிழலை விண்ணிழி விமானமும்** மாடக்கோயில்களின் வடிவமைப்பிற்கு முன்மாதிரியாக விளங்கியிருத்தல் கூடும்.


மாடக்கோயில்கள் எனும் பெருங்கோயில்களும், தூங்கானை விமானங்கள் போன்றே நிலவியல் சூழல் கருதியே எடுக்கப் பட்டுள்ளன. மாடக்கோயில்கள் பெருமளவில் காவிரியின் கடைமடைப் பகுதியான இன்றைய திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் காணப் படுகின்றன. இதற்கான காரணங்களை ஆராய்வோம்.

காவிரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகள் தக்காணப் பீடபூமியின் மேற்கு விளிம்பில் உள்ளன. நீண்ட நாட்கள் பொழிவு தரும் தென்மேற்குப் பருவமழையை ஆதாரமாக கொண்டது. அதிக அளவிலான நீர்ப்பிடிப்பு பகுதிகளைக் கொண்ட காவிரியாறு பல துணையாறுகள் இணைந்து பேராறாகத் தமிழகத்தில் நுழைகிறது, திருச்சி மாவட்டம் வரை வேகமாக ஓடி வரும் நீரானது அதன் பின் சிறிது சிறிதாக கடல் நோக்கிச் சரியும் சமவெளிப் பகுதியான டெல்டா மாவட்டங்களில் நிதானமாகவே செல்கிறது. இன்றும் கடைமடைப் பகுதிகளில் கடல் எதிர்த்து பல நாட்களுக்குப் பிறகு மெதுவாகவே வடிகிறது. மேலும், தென்மேற்கு மழைகாலத்திற்குப் பிறகு வடகிழக்குப் பருவமழையும் டெல்டா மாவட்டங்களில் பெருமழையாகப் பொழிவதால், பல மாதங்களுக்கும் தஞ்சை திருவாரூர் நாகப்பட்டினம் மாவட்டங்களில் சமவெளிப் பகுதிகளில் நீர் தேங்கி


நிற்பது வாடிக்கையாகவே உள்ளது. கடல் போன்ற பரப்பளவும், பெரும் நீர் சேமிப்புத் திறனும் கொண்ட கபினி, கிருஷ்ணராஜசாகர், மேட்டூர் நீர்த்தேக்கங்கங்கள் பயன்பாட்டில் இருக்கும் இக் காலத்திலேயே, டெல்டா பகுதிகளில் மழைக்காலங்களில் நீர்வடியாத நிலை உள்ள போது, அக்காலகட்டத்தில் இது ஒரு பெரிய இடர்ப்பாடாகவே இருந்திருக்க வேண்டும். தரையில் அமைந்திருக்கும் பல கோயில்கள் வெள்ள காலத்திற்குப் பிறகு புரனமைத்து வழிபாட்டைத் தொடங்கும் நிலை இருந்திருக்க வேண்டும். அந்நிலையை மாற்றவும் கோயில் வழிபாடுகள் இடர்ப்படாமல் இருக்கவேண்டியும் மாடக்கோயில் கட்டுமானங்கள் அன்றையத் தேவையாக இருந்துள்ளன. அதற்கு முன்னுதாரணங்களாக தோணிமலையும், விண்ணிழி விமானமும், கொகுடிக் கோயிலும் சோழரின் கண்களுக்குத் தோன்றியிருத்தல் வேண்டும். பின்னாளில் வைதீகப் புராணக் கதைகளின் பெருக்கத்தால் இவ்வுண்மைக் காரணங்கள் அறியாது மறந்துபட்டன.

முடிவுரை:

தூங்கானை மாடங்களும் மாடக் கோயில்களும் தமிழரின் நுட்பமான நிலவியல் அனுபவ அறிவு மற்றும் கட்டிடக் கலை மரபு இவற்றின் உன்னத உதாரணங்கள். இவ்வகை அறிய வகை கட்டுமானங்களைச் சுற்றிப் பின்னப் பட்டிருக்கும் கதைகளை மீறி அவற்றின் உண்மையான வரலாற்றுக் காரணத்தைக் கண்டறிந்து அறிவிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.



ச.பாலமுருகன்
அலுவலக மேலாளர்(பொது)
மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்
திருவண்ணாமலை





கல்லும் சொல்லும்

கனகாபிஷேகம் பெற்ற அடையபலம் அப்பய்ய தீக்ஷிதர் - கல்வெட்டு கூறுவது என்ன?





திருவண்ணாமலை மாவட்டத்தில் பல்வேறு ஊர்களில் அக்காலத்தில் சமய பாடங்களை நடத்தும் பள்ளிகள் இருந்தது பற்றிய குறிப்புகள் கல்வெட்டுகள் மூலம் கிடைக்கின்றன. குறிப்பாக ஆரணி அடுத்த முல்லண்டிரம், 12. புத்தூர், அடையபலம் பகுதி சுமார் 1000 ஆண்டுகளாகவே பிராமணர் குடியேற்றங்களாக இருந்துள்ளன. இந்த முல்லண்டிரம் கிராமத்தில் தோன்றியவர்தான் அருணகிரிநாதர் என்ற வரலாற்றுக் குறிப்புகளும் உள்ளன. இந்த பகுதியில் சுமார் 450 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த ஒரு சமஸ்கிருத பண்டிதர்ன, **இரண்டாம் சங்கரர்** என்று அழைக்கப்பட்ட **அப்பய்யதீட்ஷிதர்** பற்றிய ஒரு குறிப்பு இது.

தந்தை ஸ்ரீ ரங்கராஜாத்வரீ தன் ஜேஷ்டபுத்ரன் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதருக்கு தானே **அக்ஷராப்யாஸத்தை** ஆரம்பித்து **மாத்ருக ஆக்ஷரங்களை** உபதேசித்தார். பிறகு காவ்ய நாடக அவங்காரங்களை கற்றுக் கொடுப்பதற்காக அந்தக் காலத்தில் **சேகரர்** என்று புகழ்பெற்றவரும், ஸகல சாஸ்திரங்களில் வல்லுனருமான **“குருராம கவி”** என்பவரை நியமித்தார். தனது ஐந்தாவது வயதிலேயே பல எழுத்துக்களில் அறிவையும், தேசபாஷைகளில் வ்யவகாரம் செய்யும் திறமையும், ஸரளமாக கவிபாடும் தன்மையும், ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் தன்னுடைய அபாரமான அறிவுத்திறனால் அடையப்பெற்றார். குரு ஸ்ரீ கவி சிஷ்யனாகிய ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரரின் மிகச்சிறந்த மேதாவிவாளத்தையே தன்னுடைய பூரணமான குருதக்ஷிணை என கருதினார்.

காஞ்சிபுரத்தை ஆண்டு வந்த அரசன் ஸ்ரீ **நரசிம்ஹ பூபாலனால்** ஸ்ரீ தீக்ஷிதர் வெகுசிறப்பாக கௌரவிக்கப்பட்டதையும், வித்வான்களின் மூலம் கேள்வியுற்று, வேள்வியின் பொழுது தன்னால் கலந்து கொள்ள முடியவில்லையே என்பதை நினைத்து வருந்தினான் **வேலூர் சின்ன பொம்மு நாயக்கர்**. ஸ்ரீ தீக்ஷிதரை தானும் கௌரவிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் விலை உயர்ந்த மிகவும் அழகான ஒரு தங்கபல்லக்கை அடையப்பலத்திற்கு அனுப்பி மிகச் சிறப்பான வரவேற்புடன் அவரை வேலூருக்கு அழைத்து வந்தான். பல வருடங்கள் ஸ்ரீ தீக்ஷிதர் அரசன் சின்ன பொம்மனின் அவையை அலங்கரித்தார். வேலூரில் சின்ன பொம்ம நாயகளின் அவையை அவங்களித்த சமயத்தில், ஒரு நாள் ஸ்ரீ பரமேச்வரன் ஸ்ரீ தீக்ஷிதரின் ஸ்வப்னத்தில் தோன்றி வியாஸரின் ப்ருஹ்ம ஸூத்திரத்திற்கு ஸ்ரீ கண்டாசாரியார் எழுதிய சிவாத்வைதபரமான பாஷ்யத்திற்கு விரிவான ஒரு வியாக்யாணத்தை எழுதும்படி ஆஞாபித்தார், ஸ்ரீ இக்ஷிதரும் தான் எழுதிய க்ரந்தங்களிலேயே மிகப் பெரியதும், சிறந்த வித்வான்களால் போற்றப்பட்டதுமான **"சிவார்க்கமணி தீபிகை"** என்ற சிவாத்வைதபரமான விரிவான வியாக்யானத்தை எழுதினார். அரசன் சின்னபொம்மநாயகன், அப்புத்தகத்தை வெளியிடுவதின் பொருட்டு ஒரு பெரும் விழாவை ஏற்பாடு செய்து மிகச் சிறந்த கரந்தத்தை எழுதி முடித்த ஸ்ரீ தீக்ஷிதரை, நகர மக்கள் மற்றும் சிறந்த வித்வான்கள் மத்தியில், **"கனகாபிஷேகம்"** செய்து சிறப்பாக கௌரவித்தான்.



சிவாத்வைதத்திற்கும், அத்வைத வேதாந்தத்திற்கும் இடையே மிகக்குறைவான வேறுபாடுகள் தான். தன்னை **"அத்வைதி"** என்று அடிக்கடி கூறிக்கொண்டாலும், சிவாத்வைத் மதஸ்தர்கள் ஸ்ரீதீக்ஷிதரை தங்கள் மதத்தின் முக்கிய ஆசாரியராகவே கருதி **"ஸ்ரீகண்டமதப்ரதிஷ்டாபனாசாரியார்"** என்ற விருதை அளித்துப் போற்றினார்கள். இதைத்தவிர **"த்விதீய சங்கரர்", "அத்வைத ஸ்தாபனசாரியார்"** போன்ற பிரஸித்தமான விருதுகளும் ஸ்ரீ தீக்ஷிதருக்கு உண்டு.


ஸ்ரீ தீக்ஷிதர் தன்னுடைய வாழ்நாளின் பெரும் பகுதியை அடையப்பலத்திலும், வேலூரிலேயுமே கழித்தார். தமிழ்நாட்டில் பிரஸித்தமான மதுரை, சிதம்பரம், திருவானைக்காவல், இராமேஸ்வரம் போன்ற சிவாலய கோத்ரங்களுக்கும் யாத்திரை மேற்கொண்டு பரமேச்வரனை வழிபட்டு, ஸ்தலங்களையும், ஈச்வரனையும் வெகுவாகப் புகழ்ந்து பல ஸ்தோத்திரங்களை எழுதியுள்ளார். ஸ்ரீஅப்பய்ய தீக்ஷீதர் தன்னுடைய கடைசி காலத்தில் சிதம்பரத்தில் வசிக்க வேண்டும் என்று விருப்பங்கொண்டு தன் தீர்த்த யாத்திரைகளை முடித்துக் காண்டு அடையப்பலத்தில் சில காலங்கள் தங்கிவிட்டு பிறகு சிதம்பரம் சன்றார். சிலகாலம் இங்கே தன் ஆப்த நண்பர்கள், பந்துக்கள் மற்றும் சிஷ்யர்களோடு பிரதி தினம் ஸ்ரீநடராஜரை தரிசனம் செய்து கொண்டு தன் நிர்யாணத்தை எதிர்பார்த்திருந்தார். கடைசியில் யோகஸமாதியின் மூலம் ஜ்யோதிஸ்வரூபமான ஸ்ரீ பார்வதிபரமேச்வருடன் ஒன்றறக்கலந்தார் என்றும் சொல்லப்படுகிறது.



இவர் காலத்தில் இவர் கட்டியதாக கூறுப்பெறும் கோயில் ஆரணி அடுத்த அடையபலம் கிராமத்தில் உள்ளது. இக்கோயில் இறைவன் **காலகண்டேஸ்வரர்** ஆவார். இக்கோயில் கல்வெட்டு குறிப்பு.

இக்கோயிலில் உள்ள கல்வெட்டு:

சாலிவாஹன சகாப்தம் 1504 செல்லாநின்ற சித்ரபானு வருஷம் ஸ்வாமி காலகண்டேச்சுவர் கோயிலிலே ஸ்ரீகண்டபாஷ்யம் ஐந்நூறு வித்வாம்ஸர்களுக்குப் படிப்பிக்க அதுக்கு சிவார்ககமணி தீபகை வ்யாக்யானமும் பண்ணி, வேலூர் சின்ன பொம்ம நாயக்கர் கையிலே கனாபிஷேகமும் பண்ணிக்கொண்டு, அதற்குப் பின் வேலூரிலேயே சிவார்க்கமணி தீபிகையும் ஐந்நூறு வித்வாம்ஸர்களுக்குப் படிப்பிக்க ப்ருதிவிராஜ்யம் பண்ணிவிச்சி ய்ணரக்ஷாமணி, கல்பதரு, பரிமளம்



முதலான நூறு ப்ரபந்தம் பண்ணின அப்பய்ய தீக்ஷிதருடை க்ருதி இந்த சிவாலம், சுபமஸ்து.

அப்பய்ய தீக்ஷிதர் – ஸதாசேர்வை

அருணகிரி சதாசேர்வை

விச்வஜித் அப்பய்ய தீக்ஷ்தர் ஸதாசேர்வை

உமாமகேஷ்வரர் தீக்ஷ்தர் ஸதாசேர்வை

யக்ஞேச்வர தீக்ஷதர் ஸதாசேர்வை

மருதாலாதிலக்ஷன ஸதாசேர்வை.

அதாவது அப்பய்ய தீக்ஷிதர் அடையபலம் காலகண்டேஸ்வரர் கோயிலை தனது கனகாபிஷேகம் பெற்ற செல்வத்திலிருந்து கட்டினார் என்றும் அங்கு 500 வித்வாம்ஸர்களுக்கு சிவார்க்கமணி படிப்பிக்க ஏற்பாடு செய்தார் என்றும், தீபிகை, யணரஷ்மணி, கல்பதரு பரிமளம் முதலி நூறு பிரபந்தங்கள் இயற்றியதாகவும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

- இவர் 104 இலக்கியங்களைப் படைத்துள்ளார்.
- அடையபலத்தில் சிவன், விஷ்ணு, விநாயகருக்கு கோயில் எழுப்பியுள்ளார்.
- 500 மாணவர்களுக்கு வேதாந்த பயிற்சி அளித்துள்ளார்.
- த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம், சிவாத்வைதம் என்ற நான்கு வேத தத்துவங்களை நன்கு கற்றுத் தேர்ந்தவர்.

பெரும்பாலும் கல்வெட்டுகள் தானத்தையும் கோயில் நிர்வாகம் தொடர்பான செய்திகளையே




கூறும் நிலையில் அடையபலம் கோயில் கல்வெட்டு, ஒரு சிறந்த விற்பன்னரைப்பற்றியும், அவர் இயற்றிய நூல்கள், பாடம் கற்பித்தது பற்றியும் தெளிவாக கூறுகிறது. கோயில் புதுமண்டபத்தில் இவரைப்பற்றிய குறிப்பகள் தெளிவாக கல்வெட்டாக வைக்கப்பட்டுள்ளன.

ஆரணிக்கு மிக அருகில் – சென்று பார்க்கலாம்.

நன்றி- **இராமநாத தீக்ஷிதர், அடையபலம்,**

நன்றி- **நந்தகுமார், கீழ்நகர்,**

ஆதாரம் - **மோக்ஷப் பிரதஷ்னி, பவள விழா மலர்**



தமிழ்நாட்டு அணிகலன்கள்



G.உமா

MBA, Director in IT Company

Culture & Heritage Enthusiast



அணிகலன் என்பதற்கு ஆபரணம், நகை, தடையம், பணி, அலங்காரம் என பல பொருள்கள் கூறப்படுகின்றன.

அணியப்படுவதால் அதற்கு அணிகலன் என்று பெயர் எழுந்தது. தமிழ் மக்கள் ஆதியில் **மலர்** அணிகளை அணிந்து வந்தார்கள். அப்பால் குன்றி மணி, மஞ்சாடி, கலசங்கோட்டை, மிளகு, கொத்தமல்லி, நெல்லிக்காய், மருதங்காய், களிமண் உருண்டை, மக்கள் மணி, செங்கல் மணி, சிப்பி மாலை, சங்கு மாலை போன்றவைகளை அணிந்து வந்தனர். அவர்கள் தாதுப்பொருட்களை கண்டதும் பொன், வெள்ளி, செம்பு, வெண்கலம் போன்ற தாது பொருள்களில் அணிகலன்களை அமைத்து வந்தனர். அதற்குப் பிறகு மணிகள் இழைத்த பொன் அணிகளை அணிந்து வந்தனர்.

சங்க காலத்திற்கு முன்பே தமிழகத்தில் பொன் வெள்ளி முதலிய தாது பொருட்களில்

அணிகலன்கள் செய்யப்பட்டு வந்தன. அதற்கு பண்டைத் தமிழ் இலக்கியங்களும் செப்பேடுகளும் தெய்வத்திருவருவங்களும் சான்று தருகின்றன. சங்க காலத்தில் மன்னர்களும் ஏன் தெய்வங்களும் தலையில் முடிகளை பொன்னாலும் மணியாலும் செய்யப்பெற்ற மகுடங்களை தரித்திருந்தனர். அவர்கள் மெய்யில் பல்வேறு அணிகலன்களையும் கையில் மணிகள் பதித்த பொன்னாலான செங்கோலையும் பூண்டிருந்தனர் அவை மிக நுண்ணிய வேலைப்பாடுகள் உடையனவாக இருந்தன. சிலப்பதிகாரத்தில் **"வேந்தர் முடி முதற் கலன்கள் சமைப்போன் யான்"** என வரும் செய்யுள் மூலம் அக்காலத்திலும் அதற்கு முன்னும் மன்னர்கள் பொன்முடி குறைந்திருந்தனர் என்று அறிகிறோம்.

ஆதியில் அணிகலன்கள் மலராக தோன்றி அதற்குப் பிறகு நூல் வடிவில் காப்பாகவும், தடையாகவும், தாலியாகவும், ஐம்படைத்தாலியாகவும். பின்னர் வெண்மையான சங்குகளும், சோழிகளும், கல் உருண்டைகளும், பல்வேறு வண்ண மண் உருண்டைகளும், அணிகலன்களாக உருப்பெற்றன. வெண்மையான சங்கு வளையல்களும், சங்கு தோடுகளும் மோதிரங்களும், பவள மாலைகளும் அணிகலன்களாக உருப்பெற்றன.

மலர் அணியும் வழக்கம் குறிஞ்சி நிலத்திலும்,

ஐம்படை தாலி அணியும் வழக்கம் முல்லை நிலத்திலும்,

வளை, சோழி, முத்து, பவளம் அணியும் வழக்கம் நெய்தல் நிலத்திலும்,

மருதங்காய் மாலை மிளகு மாலை மண்ணால் செய்த உருண்டை மணிகள் போன்றவைகளும் மருகு நிலத்திலும் அணியப்பட்டு வந்தன.

திருஞானசம்பந்தர்,

"வெள்ளை வலைசோர என் உள்ளம் கவர் கள்வன்"

என்று கூறுவதன் மூலம் ஆறாம் நூற்றாண்டிற்கு முன்பே தமிழகத்தில் சங்கு வலை அணியும் வழக்கம் இருந்தது என்று தெரிகிறது.

தமிழர்கள் தொன்று தொட்டே பல்வகையான அணிகளை அணிந்து வந்துள்ளனர். இன்று தமிழகத்தில் எத்தனையோ நாகரீகங்கள் வந்து முட்டி மோதிய போதிலும் தமிழக மகளிர் அணிந்து வந்த அணிகலன்களின் பெயரை அசைக்க முடியவில்லை.

அவற்றில் சிலவற்றை காண்போம்.

இப்பொழுது இடையில் அணியும் அணிகலன் ஒட்டியானம் எனப்படுகிறது. முற்காலத்தில் மேகலை, காஞ்சி, கலாபம், பருமம், விருசிகை என ஐவகை பட்டிருந்தது.

"எண் கோவை காஞ்சி ஏழு கோவை மேகலை

பண் கொள் கலாபம் பதினாறு - கண்கொள்

பருமம் பதினெட்டு முப்பத் திரண்டு

விரிசிகை யென்றுணரற் பாற்று"

என்பது பழம் செய்யுள்.

மாதவி விரலணி (கால் மோதிரம்), பரியகம் (கால்சவடி), நூபுரம் (சிலம்பு), பாடகம் சதங்கை, அரியகம், குறங்குசெறி, விரிசிகை, கண்டிகை (மாணிக்க வளை), தோள் வளை, சூடகம், கைவளை, வால் வளை, பவளவளை, சங்கிலி, மணி மோதிரம், மரகததாள் செறி, நுண்ஞாண், ஆரம், இந்திர நீலக்கடிப்பிணை, வலம்புரி, தொய்யகம், புல்லகம் போன்ற 27 **வகை அணிகள்** அணிந்திருந்ததை **சிலப்பதிகார கடலாடு காதை** கூறுகின்றது. இவற்றுள் அடங்காத சூடை அல்லது சூடாமணி போன்ற வேறு சில அணிகலன்களும் அக்காலத்து இருந்தன.

அலத்தக மூட்டிய அஞ்செஞ் சீறடி

நலத்தகு மெல்விரல் நல்லணி செறீஇப்

பரியக நூபுரம் பாடகம் சதங்கை

85. அரியகம் காலுக் கமைவுற அணிந்து

குறங்கு செறிதிரள் குறங்கினிற் செறித்துப்

பிறங்கிய முத்தரை முப்பத் திருகாழ்
நிறங்கிளர் பூந்துகில் நீர்மையின் உடீஇக்
காமர் கண்டிகை தன்னொடு பின்னிய
தூமணித் தோள்வளை தோளுக் கணிந்து
மத்தக மணியொடு வயிரம் கட்டிய
சித்திரச் சூடகம் செம்பொற் கைவளை
பரியகம் வால்வளை பவழப் பல்வளை
அரிமயிர் முன்கைக் கமைவுற அணிந்து
வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரம்
கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம்
வாங்குவில் வயிரத்து மரகதத் தாள்நெறி
காந்தள் மெல்விரல் கரப்ப அணிந்து
சங்கிலி நுண்தொடர் பூண்ஞாண் புனைவினை
அங்கழுத்து அகவயின் ஆரமோ டணிந்து
கயிற்கடை ஒழுகிய காமர் தூமணி
செயத்தகு கோவையிற் சிறுபுற மறைத்தாங்கு
இந்திர நீலத் திடையிடை திரண்ட
சந்திர பாணி தகைபெறு கடிப்பிணை
அங்காது அகவயின் அழகுற அணிந்து
தெய்வ உத்தியொடு செழுநீர் வலம்புரி
தொய்யகம் புல்லகம் தொடர்ந்த தலைக்கணி
மையீர் ஓதிக்கு மாண்புற அணிந்து

அக்காலத்தில் ஆடவரும் அணிகலன் அணிவது வழக்கத்தில் இருந்தது. வணிகர்கள் காதில் குண்டலமும், தோளில் கடகமும், மார்பில் மணி கண்டிகையும் அணிந்திருந்தனர். காதில் கடுக்கனும், கையில் காப்பும், காலில் கழலும் அணிந்திருந்தனர். கடுக்கனை பின்பற்றியே பிற்காலத்தில் கமலம் அல்லது கம்மல் என்னும் மகளிர் காதணி எழுந்தது.

தமிழர்கள் அணிந்து வந்த சில ஆதிகால அணிகளின் பெயர்கள்:

தலையணி:

தாழம்பூ, தாமரைப்பூ, பதுமம், கோதை, வலம்புரி, அரசிலை, ராக்குடி, பிறை, இலம்பகம், பட்டம், சூடாமணி போன்ற 32 வகையான அணிகலன்களை அணிந்து வந்தனர்.

காதணி:

அட்டிகை, இட்டடிக்கை, ஓலை (பொன் ஓலை, மாணிக்க ஓலை), கடுக்கன், கன்னப்பூ, குண்டலம் (குண்டலம் மட்டுமே 10 வகைப்படும்), குணுக்கு, குதம்பை, குழை, குவளை, கொப்பு, சின்ன பூ, செவிப்பூ,, தண்டட்டி, தோடு, பாம்பணி, பாம்படம், மடல்


("மடல் அணி பெண்ணை ஈன்ற மணி மருள் குரும்பை மான்" என்று சிந்தாமணி கூறுகிறது), மாத்திரை

("குழையணி காதினின் மாத்திரையும்" என்று திருவிசைப்பா கூறுகிறது).


"நேரிழை மகளிர் உணங்குணாக் கவரும்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை"

காயும் உணவுப்பொருள்களைக் கவர்ந்து உண்ணும் கோழிகளை, காதில் அணிந்திருக்கும் பொன்னணிகளைக் கழற்றி எறிந்து மகளிர் ஓட்டுவர். என பட்டினப்பாலை கூறுகிறது.

"குரும்பை மணி பூண் பெரும் செம் கிண்கிணி"
-நற்றிணை


பூடி
தோடு
தொங்கட்டான்
தாடிக்கூட்டுக்கம்பி
தண்டட்டி
பாம்படம்,
திருகு
மகரக்குழை
குதம்பை
நீலக்குதம்பை
கம்பி
குண்டலம்

கழுத்தணிகள்:



அட்டிகை, அரும்புச்சரம், ஆமைத்தாலி, களிகை, காசு மாலை, தாலி, வடம், மாலை, தொடையல், நேர்ஞ்சங்கிலி, பதக்கம், வண்ணச்சரம், மணியாரம், முதலான 60 வகை கழுத்த அணிகலன்கள் அணிந்திருந்தனர்.


மேலும் பலவகையான அணிகலன்களை வரும் இதழ்களில் பார்க்கலாம்.



திரு.அன்புராஜ்,
வரலாற்று ஆர்வலர்,
காக்கைக்கூடு பதிப்பகம்



வித்தியாசமான தண்டனை



திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு வட்டம் நாட்டேரி பிரம்மதேசம் எனும் ஊரில் உள்ள சந்திரமௌலீசுவரர் கோவில் கருவறைத் தெற்குச் சுவரில் முதலாம் பராந்தக சோழரின் 16 ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டுள்ளது. அதில் முக்கியமான தகவலைப் பார்ப்போம்.

கணக்கு காட்டி மழுவேற்பானாகவும் மழுவேற்று வென்றான்.......

பாதஸேசம் குடுப்போமாகவும் மழுவேற்று தோற்றானை எரி


முதல் பெரிதாக இல்லாமையில் இதோஷத்துக்கு ஆக

பதின்கழஞ்சு பொன்னே தண்டம் கொள்வோமாகவும் ஒட்டினோம்

சரீரி தண்டம் செய்யப் பெறாதோமானோம்

அதாவது, ஏரி வாரியத்தின் கணக்குகளை எழுதும் கணக்கனுக்கு அஞ்க்ஷ்ட்டத்து சபையினர் மதிப்பூதியமாக (சம்பளம்) அவருக்கு தினமும் 4 நாழி நெல்லும், வருடத்திற்கு 7 கழஞ்சும் பொன்னும், ஒரு சோடி கூறையும் (ஆடை) வழங்கிட நிர்ணயித்துள்ளனர். மேலும் கணக்குகளை சமர்ப்பிக்கும் போது தன்னுடைய நேர்மையினை நிரூபிப்பதற்கு பழுத்தக் காய்ச்சிய இரும்பு கம்பியினை (மழு) பிடித்திட முன்வரவேண்டும். அவ்வாறு பிடிக்கும் போது கைகளில் காயங்கள் ஏற்படவில்லை எனில் நிரூபிக்கப்பட்டதாகக் கருதி கூடுதலாக ஊக்கத்தொகை (பாதசேஷா) வழங்கப்படும். அவ்வாறு இன்றி காயம் ஏற்பட்டால் தவறு செய்ததாகக் கருதப்பட்டு, அதற்காக 10 கழஞ்சுப் பொன் தண்டமாக வசூலிக்கப்படும். ஆனால் உடல் ரீதியான தண்டனை (சரீர தண்டம்) வழங்கப்படாது என்றும் முடிவெடுத்துள்ளனர்.

குற்றவாளியோ குற்றமற்றவறோ, அரசனோ ஆண்டியோ யார் சூடான கம்பியைப் பிடித்தால் கையில் காயம் ஏற்பட்டு தான் ஆகும். சூடான கம்பிக்கு யார் நல்லவன் யார் கெட்டவன் என்ற தெரியும் யாரு கையை வைத்தாலும் சுட தான் தெரியும். எங்கள் ஊரில் திருட்டு போயிவிட்டது என்றால் திருடனைக் கண்டுபிடிக்க கொதிக்கும் எண்ணெயில் கை வைத்து வெந்துவிட்டால் அவர் திருடர். வேகவில்லையென்றால் அவர் நல்லவர் என்பார்கள். யார் கை வைத்தாலும் வெந்து தான் போகும் என்றால் அப்படி சொன்னால் தான் திருட்டை ஒப்புக்கொள்வார்கள் என்பார்கள். யாரு இப்படியெல்லாம் கூறினார்கள் என்று பார்த்தால் இந்த வழக்கம் 1000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே தொடர்கிறது போலும்.




கதைகூறும்
கல்வெட்டுகள்...!



நா. நாராயண மூர்த்தி,
உதவிப் பொறியாளர்,
வேளாண்மைப் பொறியியல் துறை,
கீரனூர்,
புதுக்கோட்டை மாவட்டம்.



புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கோவில் தான கல்வெட்டுகளில், பிற்கால பாண்டியர் காலம் வரையிலும்

1. இத்தன்மம் மகாதேவ ரக்ஷை

2.இத்தன்மத்தை காப்பவர்கள் பாதம் என் தலைமேல் என

என தானத்தை காத்தல் பெருமை குறித்த சொல்லாடல்கள் காணப்படுகின்றன.

அதன் பின்னர் விஜய நகர அரசின் ஆட்சி காலத்தில் தொடங்கி தொண்டைமான் அரசு காலம் வரை எழுதப்பட்டுள்ள கல்வெட்டுகளில், கொடுக்கப்பட்ட தானங்களுக்கு இடையூறு செய்பவர்களுக்கு வரும் பாவங்கள் குறித்து சில எச்சரிக்கை வரிகள் எழுதப்படுகின்றன.

குறிப்பாக,

இத்தன்மத்திற்கு அழிவு பண்ணினவன்

*1.கங்கை கரையில் கராம்பசுவை கொன்ற பாவத்திலெ போக கடவாராக (*P.S.I - 931)*

*2. கங்கை கரையிலே மாதா பிதாவையும் குருவையும் கொன்ற பாவத்திலே போக கடவாராக (*P.S.I - 844)*

*3. கெங்கை கரையிலே பிராமணனையும், கபிலையையும் கொன்ற பாவத்தை பெறகடவாராகவும் (*P.S.I -850)*

*4. திருவம்பலத்திலும் சிவாலயத்திலும் தீயிட்ட பாவத்திலே போக கடவானாகவும் (*P.S.I- 944)*

*5. மகாரோஹம் அனுபவிக்க கடவானாகவும் (*P.S.I - 911)*

*6. விறுமகத்தி (பிரம்மஹத்தி) தோசத்திலே போக கடவாராகவும் (*P.S.I - 859)*

*7. இரண்டு நினைத்தவன் மனை கழுதை புரண்டு போக கடவதாகவும் (*P.S.I - 928)*

என்றெல்லாம் வழங்கப்பட்ட தானத்திற்கு தீங்கிழைப்பவர்களுக்கு பாவங்கள் வந்து சேரும் என்று எச்சரிக்கை வாசகங்கள் கல்வெட்டுகளில் இடம்பெறுகின்றன.

சரி, தீங்கிழைத்தவர் இஸ்லாமியர் எனில் ?

அவர்களுக்கு வந்து சேரும் பாவம் குறித்தும் ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டத்தில் உள்ளது லெட்சுமணன்பட்டி கிராமம். இந்த கிராமத்தில் ஊரின் வடமேற்கே அம்பல பாண்டுரார் கண்மாயை ஒட்டி இருபுறமும் எழுத்துப் பொறிப்புகளுடன் கூடிய கற்பலகை ஒன்று ஊன்றி வைக்கப்பட்டுள்ளது. (*P.S.I - 978)





978. குளத்தூர் தாலுகா, லெக்ஷமணப்பட்டி கிராமத்தில் நடப்பட்டிருக்கும் ஓர் கல்லின்னுள்ள சாஸநம்,—

1 . . . . . .
2 க ஃ அச–
3 . ஸ நபாபு சாய–
4 பு உளமாதலத்த–
5 ல் உமுற வுபுர அது[ர]–
6 யவர்கள் உத்தாரப–
7 டிக்கி அசரது அம்ம–
8 துசாயபு குருக்களவ–
9 ர்களு[1] ா ரெகுனு–
10 தாயதொண்டமா–
11 னரவ[ர் *]கள் லெட்சு–
12 மன்பாண்டிரபட்டி
13 கிராமம்[2] குடியெ செர்–
14 த எல்[லெ] நாங்கு–
15 ம் நஞ்சை குள–
16 ம் துகை இருவது [‖*]
17 இதில் செந்த புஞ்–
18 சை–
19 ௺ கு .
20 ஈமம் சந்[தி]–
21 ளவரைக்கு[ம்]
22 . வெரியும்[3] பில்
23 உள்ளவரைகு[ம்]
24 டு[4] கொள்ளுவாராக–
25 வும் [‖*] இந்த தற்மமது–
26 ஞ தமிளரிலெ ஆதா–
27 மொருவர்[5] ப்பிசகு ப–
28 ன்னினல் கெ–
29 ங்[கை *] கரையிலெ கராம்–
30 பசுவை ௺ [6]கொன்ன
31 தோஷத்து[லெ பொ]–
32 வாாகவு [‖*] துலுக்கரி–
33 லெ யாதா[ம் *] ஒருவர்ப்பி–
34 சகு பண்ணினல் மக–
35 ாவுலெ மிறுகத்[தி *]னு[ல் *] வ–
36 குறு சாப்பட தொஷ–
37 துலெ பொவராக–
38 வும் [‖*] யிப்படிகு சாதன .

1. Read க்கு.
2. The letters ர and ம் stand below the line.
3 Read சந்திராதித்தவரைக்கும் காவேரியும்.
4. Read ஆண்டு.
5. Read யாதாமொருவர்.
6. Read க்.

39 கல்லில் வெடிவிச்–
40 சம் [‖*] யின்ற சாதனதி–
41 ல் யெளுதுனது மரு–
42 தமுது [மதி] . . [மங்]
43 கயி எழுத்து [‖*]

CamScanner

43 வரிகளில் எழுத்தப்பட்டுள்ள இந்த கல்வெட்டானது **புதுக்கோட்டை தொண்டைமான் அரசின் முதல் அரசரான ரெகுனாதராய தொண்டைமானின்** ஆட்சி காலத்தில் எழுதப்பட்டதாகும். ***கி.பி 18 ம் நூற்றாண்டை சேர்ந்த இந்த கல்வெட்டு*** கூறும் செய்தி இதுவே.

நவாப் சாகிப் உம் நதலாத் உம்ரா அவர்களின் ஆணைப்படி அசரத்து அகமது சாகிப் குருக்களுக்கு ரெகுநாதராய தொண்டைமான் இந்த லெட்சுமன் பாண்டிராபட்டி கிராமத்தையும், குளத்தையும், விளைநிலங்களையும் தானமாக வழங்குகிறார்.

இந்த தானத்தை சந்திராதித்தவரைக்கும், காவேரியும் பில்லும் உள்ளவரைக்கும் ஆண்டு கொள்வாராக என்றும், இத்தர்மத்திற்கும் யாராவது ஒருவர் தீங்கு செய்தால்

அவர் தமிழரெனில் கெங்கை கரையில் கராம்பசுவை கொன்ற தோஷத்தில் போகக்கடவார் என்றும்,

தீங்கு செய்தவர் துலுக்கர் எனில் அவர், மக்காவில் மிருகத்தினால் வகுறு சாப்பிட்ட தொஷத்திலே போவார் என்றும்

கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள லெட்சுமன்பாண்டிராபட்டி இன்று லெட்சுமணன்பட்டியாக உள்ளது.

*கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இஸ்லாமியருக்கு சொல்லப்படுகிற தோஷத்தை பற்றி இஸ்லாமிய நண்பர்களிடம் வினவியதில்***

முஸ்லிம்களின் புனித தளமாக விளங்கும் சவுதி அரேபியா நாட்டில் உள்ள மெக்காவில் பன்றி இறைச்சி சாப்பிடுவது மிகவும் கொடிய பாவமாக கருதப்படுறது என்ற தகவலை தெரிவித்தனர்.

மேற்கண்ட தானத்தை பெற்ற இஸ்லாமிய குருக்கள் லெட்சுமணன்பட்டியில் ஒரு பள்ளிவாசலை உருவாக்கி இருக்கிறார். 250 ஆண்டுகளுக்கு மேல் பழமையான அந்த பள்ளிவாசல் இன்று சிதிலமடைந்த நிலையில் காணப்படுகிறது.

லெட்சுமணன்பட்டியில் இன்று இஸ்லாமிய குடும்பங்கள் எதுவும் இல்லை. பிற்பாடு ஏற்பட்ட உள்ளூர் சண்டைகளில் அவர் அனைவரும் மெல்ல இவ்வூரை விட்டு வெளியேறி விட்டதாக உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அன்புடன்,

நாராயணமூர்த்தி.

**P.S.I - Inscriptions (texts) of Pudukkottai Stat*

*** நன்றி: பொறியாளர் தமீம் அன்சாரி, பரமக்குடி.*

ஒல்லையூர்



முனைவர். இரா.மணிமேகலை
தமிழ்த் துறை – இணைப் பேராசிரியர்,
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர்–641029.



ஒல்லையூர் நாடு என்பது ஒல்லையூரைத் தலைநகராகக் கொண்டது. இக்காலத்தில் திருமெய்யம் வட்டத்தில் உள்ள ஒலியமங்கலம் சங்ககால ஒல்லையூர் என்பர். இது பாண்டிய நாட்டின் வடவெல்லையான வெள்ளாற்றின் தென்கரையில் இருந்தது.

ஒல்லையூரைச் சங்ககாலத்தில் சிலகாலம் ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் ஆண்டு வந்தான். ஒல்லையூர் மக்களின் தலைவன் ஒல்லையூர் கிழான். ஒல்லையூர் ஆட்சியானது மன்னர் ஒருவராலும் இவனுக்கு வழங்கப்பட்டிருக்கலாம். இவனது மகன் பெருஞ்சாத்தன் தன்னாட்சி நிறுவ முயன்ற காலத்தில் பூதப்பாண்டியன் ஒல்லையூரைக்கைப்பற்றித் தன் நாட்டுடன் இணைத்துக்கொண்டான்.

அதனால் அவன் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் எனப் போற்றப்படுகிறான். இவன் மனைவி பெருங்கோப்பெண்டும் சங்கப் புலவர் வரிசையில் உள்ளார். இருவரும் மாறாக் காதலன்பும் நல்லிசைப் புலமையும் உடையவர்கள்.

பெருஞ்சாத்தன்:

ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தான் என்ற சோழ மன்னன் பாண்டிய மன்னனிடம் போரிட்டு இந்த பூமியைத் தனதாக்கிக் கொண்டான் என்றும் கூறப்படுகிறது. பிறகு பாண்டிய மன்னன் பூதப்பாண்டியன் பெருஞ்சாத்தானை வென்று ஒல்லையூரைப் பாண்டிய நாட்டுடன் இணைத்துக்கொண்டான். வெள்ளாற்று எல்லையிலிருக்கும் தென்கரை அல்லது தென்கோனாக்காடு பகுதியே இவர்களின் போர்க்களமாக இருந்திருக்கிறது.

புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து தற்போது திருச்சி மாவட்டத்தோடு இணைக்கப்பட்ட ஒலியமங்கலம் என்ற ஊரைச் சுற்றியுள்ள பகுதியே ஒல்லையூர் அல்லது ஒல்லைநாடு என அன்று அழைக்கப்பட்டது. சோழநாடு மற்றும் பாண்டிய நாட்டிற்கு எல்லையாக வெள்ளாறு இருப்பதால் இருநாட்டிற்கு இடையில் சிக்கி அங்கிருக்கும் ஒல்லையூர் பல போர்களை எதிர் கொள்கிறது. அதன் காரணமாக வரலாற்றில் இவ்வூரின் பெயர் அழியாத இடம்பெறுகிறது.

இந்த ஒல்லையூரில் வாழ்ந்த கிழான் என்பவனின் மகன் பெருஞ்சாத்தன். அவன் வீரத்திலும் கொடையிலும் சிறந்து விளங்கினான்.ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் இறந்ததைக் கண்ட புலவர் குடவாயில் கீரத்தனார் மிகவும் வருந்தினார். தம் வருத்தத்தை வெளிப்படுத்தும் வகையில், ஒரு முல்லைக் கொடியைப் பார்த்து, "ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் இறந்ததால், அனைவரும் பெருந்துயரத்தில் உள்ளனர். இந்நேரத்தில் நீ பூத்திருக்கிறாயே? யார் உன் பூக்களைச் சூடப் போகிறார்கள்?" என்று புறனானூற்றுப் பாடலில் புலவர் குடவாயில் கீரத்தனார் கூறுகிறார்.

எல்லாத் திணைகளுக்கும் பொதுவான செய்திகளைத் தொகுத்துக் கூறும் பொதுவியல் திணையில் கையறு நிலை துறையில் இப்பாடலை அமைத்துள்ளார்.தலைவன் இறந்த பின்னர் அவன் பெருமையைக் கூறி வருந்துதல். கழிந்து போன பொருளைக் குறித்து வருந்துதல் கையறு நிலை எனப்படும்.

"இளையோர் சூடார்; வளையோர் கொய்யார்;

நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்

பாணன் சூடான்; பாடினி அணியாள்;

ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த

வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை

முல்லையும் பூத்தியோ, ஒல்லையூர் நாட்டே?"

(புறநானூறு : 243)

முல்லையே! தன்னுடைய வீரம் வெளிப்படுமாறு பகைவர்களின் வீரர்களைக் கொன்ற, வலிய வேலையுடைய சாத்தன் இறந்த பிறகு, ஒல்லையூர் நாட்டில் பூத்தாயோ? இனி, இளைய ஆடவர்கள் உன் பூக்களைச் சூடிக் கொள்ள மாட்டார்கள்; வளையல் அணிந்த மகளிரும் உன் பூக்களைப் பறிக்க மாட்டார்கள்; நல்ல யாழின் தண்டால் மெதுவாக வளைத்துப் பறித்து உன் பூக்களைப் பாணனும் சூடமாட்டன்; பாடினியும் சூடமாட்டாள். இப்பாடல் முல்லைப்பூவிடம் புலவர் கேட்கும் கேள்வியாக அமைத்துள்ளார். சாத்தன் மறைந்த பிறகு பூவணிந்து மகிழ்கின்ற தருணங்கள் தம்மை விட்டு நீங்கியதாகக் கருதுகின்றார். பழங்காலத்தில் நெய் நீவி முடிக்கப்பட்ட கொண்டையை ஆண்கள் கொண்டிருந்தனர். எனவே, தம் சிகையில் சூடிக்கொள்ள இளைஞர்கள் பறிக்காத முல்லையானாய் என்கிறார். பெண்கள் தம் கூந்தலில் சூடவும் பூவாடை புனையவும் முல்லையைப் பறிக்க மாட்டர்கள் என்கிறார். பாணரும் பாடினியும் தம் தலைவன் சாத்தன் மறைந்த பிறகு முல்லை மலரணிந்து மகிழ்ந்து பாடுகின்ற வாய்ப்பற்றவர்கள் ஆனமையால் ***"பாணன் சூடான் ; பாடினி அணியாள்"*** என்கிறார். இதனை

"இயற்கையைப் பார்த்து கவிஞர் கேட்கும் இக்கேள்வி சாத்தன் பால் அவன் ஊர் மக்களும் அவன் புரந்த பாணரும் பாடினியரும் கவிஞரும் கொண்டிருந்த பேரன்பையும் அவன் ஊராரிடம் பெற்றிருந்த புகழையும் ஆறு வரிகளில் எடுத்துக்காட்டும் இச்சிறு பாடல் ஒரு பெருங்காவியம் செய்யும் வேலையைச் செய்துவிடுகிறது" என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் மிகுந்த புலமையுடைய அறிஞர் பேராசிரியர் ***ப.மருதநாயகம், "புதுப்பார்வைகளில் புறநானூறு"*** என்ற தம்முடைய நூலில் கூறுகிறார்.

பூதப்பாண்டியன்:

பூதப்பாண்டியன் ஒல்லையூர் நாட்டை போர்புரிந்து தனக்கு அடிபணிய வைத்தான்.பாண்டியன் என்று மட்டும் அழைக்கப் பெறாமல் ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் என்று அழைக்கப்பட்டமைக்குக் காரணம், புதுக்கோட்டையைச் சார்ந்த ஒல்லையூர் என்னும் ஊரை வென்று தனக்குக் கீழ் படுத்தி அரசு

புரிந்தமையே ஆகும். நாஞ்சில் நாட்டில் பூதப்பாண்டி என்னும் ஊர் இவனது பெயரால் அமைக்கப்பட்ட ஊராகும். அதனால் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் உள்ள ஒலியமங்கலம் எனப்படும் ஒல்லையூர் பெயரையும் இணைத்து ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என்று அழைக்கப் பெறுகின்றான். சொல்லேர் உழவனாக கவிபுனைவதிலும் வில்லேர் உழவனாக களத்தில் வீரவாள் சுழற்றுவதிலும் வல்லவனாக இருந்துள்ளான். புறநானூற்றில் இவன் எழுதிய பாடல் உள்ளது.

முன்பே குறிப்பிட்டதுபோல் பூதப்பாண்டியனுக்கு ஒல்லையூரின் எல்லையில் படையெடுப்புத் தொல்லை ஏற்பட்டது. ஒருமுறை சேர சோழ மன்னர்கள் இவன்மீது படையெடுத்து வர அவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்கிறேன் என வஞ்சினமாக அதாவது பெரும் கோபத்துடன் சபதம் கூறி இந்த பாடலை அவன் இயற்றியிருக்கிறான்.அது வஞ்சினக் காஞ்சி என்னும் துறையைச் சேர்ந்த பாடலாகும். வஞ்சினக் காஞ்சியாவது பகைவனை வெல்வேன் வெல்ல முடியாவிட்டால் இன்ன இன்னபிழைகள் செய்தவன் ஆவேன் என்று தன்னைக் குறித்து மொழிவதாகும்.

மடங்கலின் சினைஇ, மடங்கா உள்ளத்து,

அடங்காத் தானை வேந்தர் உடங்கு இயைந்து

என்னொடு பொருதும் என்ப ; அவரை

ஆரமர் அலறத் தாக்கித் தேரொடு

அவர்ப்புறம் காணேன் ஆயின் - சிறந்த

பேரமர் உண்கண் இவளினும் பிரிக:

அறன்நிலை திரியா அன்பின் அவையத்துத்,

திறன்இல் ஒருவனை நாட்டி, முறை திரிந்து

மெலிகோல் செய்தேன் ஆகுக; மலி புகழ்

வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பின்

பொய்யா யாணர் மையற் கோமான்

மாவனும், மன்எயில் ஆந்தையும், உரைசால்

அந்துவஞ் சாத்தனும், ஆதன் அழிசியும்,

வெஞ்சின இயக்கனும், உளப்படப் பிறரும்,

கண்போல் நண்பிற் கேளிரொடு கலந்த

இன்களி மகிழ் நகை இழுக்கி யான் ஒன்றோ,

மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த

தென்புலம் காவலின் ஒரிஇப், பிறர்

வன்புலங் காவலின் மாறி யான் பிறக்கே!

(புறநானூறு 71)

சிங்கத்தை போல பெரும் சினத்துடனும், உறுதியான மனதுடனும், வலிமையான படையுடனும் சேர சோழ வேந்தர்கள் ஒன்றுகூடி போர் செய்ய வேண்டுகின்றனர்.

அவர்கள் அலறுமாறு போர் புரிந்து தேரில் இருந்தபடியே அவர்களை புறமுதுகிட்டு ஓடச் செய்வேன். அப்படி செய்யத் தவறினால், மை தீட்டிய அகன்ற கண்களையுடைய என் மனைவி பெருங்கோப்பெண்டின் அருகில் இல்லாமல் நீங்குவேனாக.

அறநிலை மாறாது அன்போடு கூடிய தன் அரசவையில் தகுதியற்ற ஒருவனை ஆட்சியில் அமர்த்தி கொடுங்கோல் புரியச் செய்பவன் ஆவேனாக.

மிக்க புகழுடைய வைகையாற்றால் சூழப்பட்ட வளம் பொருந்திய ஊர்களில் என்றுமே பொய்க்காத வருவாய் உடைய மையல் என்ற பகுதிக்கு தலைவனான மாவன் என்பவனையும்,

நிலைபெற்ற அரண்களை உடைய ஆந்தை என்பவனையும், புகழமைந்த அந்துவஞ்சாத்தானையும், ஆதன் ஆழிசி என்பவனையும், சினமிக்க இயக்கனையும் என் நண்பர்களாகக் கொண்டேன். போரில் வெல்லாவிட்டால் இவர்களோடு கொண்ட நட்பையும் அவர்களோடு கூடிக்கழிக்கும் நட்பையும் மகிழ்ச்சியினையும் நான் இழந்தவனாவேன்.

மாவன், ஆந்தை, அஞ்சுவஞ்சாத்தான், ஆதன் ஆழிசி, இயக்கன் இவர்கள் ஐவரும் பூதப்பாண்டியனின் நெருங்கிய நண்பர்கள் மட்டுமின்றி ஐம்பெருங்குழுவைச் சேர்ந்தவர்கள்.

மன்னர்கள் நல்லாட்சி புரிய இதுபோன்று ஐம்பெருங்குழு, எண்பேராயம் என அன்று இருந்திருக்கிறது.

இறுதியாக நான் மறுபிறவியில் மக்களை பாதுகாக்கும் பெருமைமிக்க பாண்டியர் குடியில் பிறக்காமல் வளமற்ற குடியில் பிறப்பேனாக என்று பாடுகிறான்.

இல்லறம் இழத்தல், நட்பினை மறத்தல், கொடுங்கோலாட்சி புரிதல், நற்குடியில் பிறக்கும் பேறு நீங்குதல் என்று பலவாறு வஞ்சினத்தை அடுக்கிக் கூறுகின்றான்.

இதனைக் குறித்து

இவ்வஞ்சின மொழிகளில் பல உண்மைக் கருத்துக்கள் வெளியாகின்றன. இவர்தம் மனையாளிடம் மிகுந்த அன்பு கொண்டு இன்புற்ற காரணத்தால் அம்மனையாளைப் பிரிய இயலாத வாழ்க்கை நடத்தி வந்தவர் என்பது தெரிகிறதல்லவா? இத்தகையாளைப் பிரிதல் இயலாமைக்கேனும் பகைவரைப் புறங்காண்டல் இவர்க்கு இன்றியமையாததாயிற்று. கொடுங்கோல் அரசை மிகவும் வெறுத்தவர் என்பதும் தெரிகிறது. நண்பர்களுடன் கூடிக் குலாவும் இயல்பினர் என்பதும் அக்குலாவலை இவர் இழக்க விரும்பிலர் என்பதும் தெரிய வருகின்றன. இவற்றினும் மேலாகத் தம் குடிப்பிறப்பில் மிகுந்த பெருமைகொண்டவர் என்பதும் தெரிந்துகொள்ள நேரிடுகிறது. இவ்வீற்றுக் கருத்தை விளக்கும் செய்யுள் அடியினை இதுபோது சிந்தித்தல் சிறப்பேயாகும்.(கவிபாடிய காவலர், ஆசிரியர் பாலூர் கண்ணப்ப முதலியார், ப.62) என்று அறிஞர் போற்றுவர்.

பெருங்கோப்பெண்டு:

பூதப்பாண்டியன் இறப்புக்குப் பின் பாண்டி நாட்டைக் காக்கும் நல் வேந்தர் இல்லாமலாகிவிட்டனர். அரசியல் சுற்றத்தினர் பூதப்பாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டினை அரசுகட்டிலேறி ஆட்சிபுரியுமாறு வேண்டினர். நாட்டு மக்களின் நலம் காக்க வேண்டினர்.பெருங்கோப்பெண்டோ அதனை ஏற்றுக் கொள்ளாது, தன் காதலன் உயிருடன் தன்னுயிரை ஒன்றுவித்து மறுமைப் பிறவியில் பிரிவிலாத காதல் வாழ்வுக்கு வழி தேட ஆசைப்பட்டாள். கைம்மை நோன்பு கொண்டு வாழும் வாழ்வையும் சிந்தித்துப் பார்த்துத் தீப்பாய்ந்து உயிரை மாய்க்கும் முடிவை எடுக்கின்றாள்.அவர்களுக்குப் பதிலுரையாக ஆனந்தப் பையுள் என்னும் துறையில் அமைத்துத் தன் கதறலைக் கவியாகப் பாடுகிறாள்.

"பல்சான்றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரே மல்லே மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல வெமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே."

(புறநானூறு 246)

கணவனைப் பிரிந்த பிறகு வாழும் வாழ்க்கையைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் தாமரைப் பொய்கையும் தீயும் ஒன்று தான் என்று பேசிவிட்டு


பெருங்கோப்பெண்டு தீப்புகுந்து மாய்ந்ததை நேரில் கண்ட மதுரைப் பேரலாவாயரும் மேற்கண்ட பாடலில் பதிவு செய்கிறார். முடிமன்னர் பலரின் அழகிய காவியங்களை அரங்கேற்றிய இடமாக ஒல்லையூர் இருந்திருக்கிறது. இலக்கியத்திலும் வரலாற்றிலும் ஒல்லையூர் எனும் பெயர் தரும் நினைவுகள் அழியாத ஓவியமாக நிலை பெற்றுள்ளன.

கன்னல் சுவை சங்கத்தமிழ்

பாகம்–7



பௌசியா இக்பால்
ஆசிரியர்
சத்தியமங்கலம்





வணக்கம் அனைவருக்கும்!

கடந்த மாதக்கட்டுரைகளில் சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள வேளாண் நிலங்கள் தொடர்பான சங்கப்பாடலைப் பற்றித் தெரிந்துகொண்டோம். இன்றும் அதன் தொடர்ச்சியாக **புன்புலம்** பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ள சங்கப்பாடலைப் பார்க்கலாம்.

புன்புலம் என்பதற்கு தரிசு நிலம் என்று பொருள். தரிசு நிலம் என்ற சொல் இடம்பெற்றுள்ள சங்க இலக்கியங்களில் ஒன்றான குறுந்தொகையின் 202வது பாடலை இன்றைய கட்டுரைக்காக காணலாம். இனி, பாடலின் வரிகள் மற்றும் பொருளை தெரிந்து கொள்வதற்கு முன், இப்பாடலின் ஆசிரியரைப் பற்றியும் இப்பாடல் உருவான சூழலையும் தெரிந்துகொள்வோம்.

சங்க காலத்துப் பெண்பாற்புலவர்களில் ஒருவரான அள்ளூர் நன்முல்லையார் என்பவரே இப்பாடலை இயற்றியவர். அகநானூறு, புறநானூறு மற்றும் குறுந்தொகை தொகுப்புகளில் இவர் இயற்றிய பதினொரு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவரது புறநானூற்றுப் பாடலில் ஒரு பெண் நடுகல்லை வணங்கும் செய்தி இடம்பெற்றுள்ளது. குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள மற்றுமொரு பாடலில் பெண்களின் மாதவிலக்குப் பற்றிய தகவல் இடம்பெற்றுள்ளது. மேலும் இவரது ஒரிரு பாடல்களில் தலைவி தலைவனை பழித்துக் கூறும் காட்சிகளும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறாக, இவரின் ஒவ்வொரு பாடலிலும் அக்காலத்தில் நிகழ்ந்த பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

சங்க இலக்கியங்களின் மிகமுக்கியமான இருகூறுகளில் ஒன்று வீரம் மற்றொன்று காதல். வீரத்தைப் பாடும் புறஇலக்கியங்கள் வாயிலாக அக்கால மன்னர்கள், போர்கள் மற்றும் நம் சமூகத்தின் வீரத்தைப் பற்றி நாம் அறிந்து கொள்வது போல, காதலைக் கூறும் அகஇலக்கியங்களில் தலைவன், தலைவிக்கிடையே தோன்றும் காதல், அவர்களுக்கு நடக்கும் திருமணம் மற்றும் அதனைத் தொடர்ந்த அவர்களது வாழ்வியலினூடே சமூக நிலைமையைக் கூறும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர் சங்க காலப் புலவர்கள்.

சங்ககாலத்தில் தலைவனுக்கும், தலைவிக்குமிடையே தோன்றும் காதல் ஊரார் அறிய திருமணமாய் நடந்து தலைவி, தலைவனின் இல்லக் கிழத்தி ஆகும் கற்புக்காதலும், தலைவன், தலைவிக்கிடையே தோன்றும் காதல் பிறர் அறியாவண்ணம் இரகசியமாய் நிகழ்வதை போற்றும் களவுக்காதலும் வழக்கிலிருந்துள்ளது. அக்காலத்தில் வாழ்ந்த தலைவன் பெரும்பாடுபட்டு தலைவியைத் திருமணம் செய்த பின்னர் அவர்களது இல்வாழ்க்கை பொருள் தேடுதல், தேடிய பொருளை, தம்மை நாடி வரும் வறியோருக்கு தானமாய் வழங்கி நலமாய் வாழ்தல் என்று இன்பமாய் மட்டுமே இல்லாமல் அங்கு மற்றுமொரு கிளை பிரிகின்றது. அது அகவாழ்வின் ஆணிவேரையே அசைத்துப் பார்க்கும்விதமாக அமைந்துவிடும் பரத்தையர் சமூகத்தை நாடும் ஆணின் தன்மை.

திருமணம் செய்துகொண்ட ஆண், தன் மனைவியை விட்டுப்பிரிந்து பரத்தையரை நாடிச் சென்ற பாடல்கள் பற்பல கிடைக்கின்றன. அத்தகைய பாடல்கள் ஒவ்வொன்றிலும் தலைவியின் மனநிலை ஒவ்வொரு விதமாக இருப்பத்தை பார்க்கமுடிக்கின்றது. சில பாடல்களில்,

- தலைவி, தலைவனின் செயலை மன்னிப்பவளாக பாடப்பட்டிருப்பாள்.
- தலைவி, தலைவனை பரச்சேரிக்கு (பரத்தையர் வாழும் தெரு) செல்வதை தடுப்பவளாக கூறப்பட்டிருப்பாள்.
- தலைவி, தன் குழந்தையைக் காட்டி தலைவனை மீண்டும் இல்லம் திரும்ப வேண்டுவதாக காட்டப்பட்டிருப்பாள்.
- தலைவி, தலைவனை கண்டிப்பவளாக பாடப்பட்டிருப்பாள்.

இனி இம்மாத பதிவிற்கான பாடலுக்கு வருவோம். மேலே கூறியது போல, ஒருவரையொருவர் விரும்பி மணந்துகொண்ட தலைவனும், தலைவியும் மிக இன்பமாய் இல்வாழ்க்கையை மேற்கொள்கின்றனர். தலைவிக்கு அவள் தன் தலைவனுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு நாளும் இன்பத்தை அள்ளித்தரும் நாளாக அமைய, அவன்மீது அவள் கொண்ட காதலும் மிகுகின்றது. இவ்வாறான இல்வாழ்வில், தலைவன் மெல்ல மெல்ல பரத்தையரை நாடுகின்றான். சில நாட்களில் அவன் பரத்தையர் இல்லத்திலேயே தங்கியும் விடுகின்றான்.

கற்புமணம் சிறக்க வாழ்ந்த தன்னை நீங்கி தன் தலைவன் பரத்தையரை நாடிச் சென்ற காரணம் அறியாமல் கலங்கிய தலைவிக்கும் பெரும் ஆறுதலாய் இருந்தாள் தோழி. இந்நிலையில் ஓர்நாள், மலர் விட்டு மலர் தாவும் குணம் கொண்ட தலைவன் மீண்டும் தலைவியுடன் வாழ இல்லம் திரும்புகிறேன் என்று தோழியிடம் வேண்டி கேட்கிறான்.

தலைவன் தலைவிக்கு தீங்கிழைத்து பரத்தையை நாடிச் சென்ற நாள் முதல், தலைவிபடும் துன்பங்களை அருகிலிருந்து பார்த்த தோழியும் தலைவனின் வேண்டுகோளை ஏற்று தலைவியிடம் தூது செல்கிறாள்.

தலைவனைச் சந்தித்தப்பின் தலைவியிடம் செய்தித் தெரிவிக்க வருகிறாள் தோழி. தலைவி அச்சமயம் மிகுந்த மனவருத்தத்துடன் காணப்படுகின்றாள்.

தோழி: "தலைவி! நீ இதுவரை அடைந்த துன்பம் போதும். இனி, உன் வாழ்வில் மீண்டும் வசந்தம் வீசப்போகின்றது"

தலைவி : "தோழி! தலைவர் என்னை நீங்கி, பரத்தைச் சேரியில் வாழும் நிலையில் என் வாழ்வில் வசந்தம் என்பது ஏது?"

தோழி: "கலங்காதே தலைவியே! அந்நிலை இப்போது மாறப்போகின்றது. தலைவர் மனம் மாறி, தன் தவறை உணர்ந்து மீண்டும் உன்னை நாடி வர விரும்புகின்றார். நீ சரியென்று கூறினால் உன் கவலைகள் அனைத்தும் தீர்ந்துவிடும்"

என்ற தோழியை ஆச்சரியமாகப் பார்க்கும் தலைவி, கூறும் மறுமொழிகளை புலவர் அள்ளூர் நன்முல்லையார் பின்வருமாறு பாடலாக இயற்றியுள்ளார். இப்பாடல் குறுந்தொகையில் 202வது பாடலாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

பாடல் வரிகள் :

நோம்என் நெஞ்சே, நோம்என் நெஞ்சே

புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சிக்

கட்கின் புதுமலர் முள்பயந் தாஅங்கு

இனிய செய்தநம் காதலர்

இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே

பாடல் விளக்கம் :

தலைவி : "தோழீ! என் நெஞ்சம் வருந்துகிறது. விளைச்சலுக்கு பயன்படாத வகையில் வறண்டு தரிசாய் இருக்கும் நிலங்களில், சிறிய இலைகளுடனும், அழகிய பூக்களுடனும் நெருஞ்சி செடிகள் செழித்து வளர்ந்திருக்கும். பச்சைப்பசேல் என்றிருக்கும் அந்நெருஞ்சி செடிகளில் பூத்திருக்கும் மஞ்சள் மலர்கள் காண்பவர் கண்ணைக் கவரும் அழகிய மலர்கள். அவ்வழகிய மலர்கள் சிலநாட்களில் முட்களாக மாறி, நெருஞ்சிச் செடிகளை நாடிச் செல்வோரை குத்தி துன்புறுத்தும். அதுபோலத்தான் நம் தலைவரின் செயலும் இருக்கின்றது.

தோழி: “தலைவி! நடந்து முடிந்ததை நினைத்துக்கொண்டு உன்னையே நீ வருத்திக் கொள்வாயா?”

தலைவி: “தோழீ! திருமணதிற்கு முன்பு தலைவன் இனிமையாக பேசியதை நீ அறிவாய். தற்போது துன்பம் தரும் செயலை செய்துவிட்டு மீண்டும் வருகின்றேன் என்று உன்னிடமே கேட்டிருக்கின்றான். இவற்றை எல்லாம் நினைத்து என் நெஞ்சம் மிகவும் வருந்துகிறது என்று தோழியிடம் தலைவனின் வேண்டுகோளை மறுதலித்து தலைவி கூறுகிறாள்.

இப்பாடலில் சிறிய இலைகளும் அழகிய பூக்கள் மற்றும் முட்களுடன் உள்ள நெருஞ்சி செடிகள் நிறைந்த புன்புலம் என்று வருகிறது. இந்த நெருஞ்சி செடியானது வறண்ட தரிசு நிலத்தில் தான் வளரும். ஆகவே புன்புலம் என்பது வறண்ட அல்லது தரிசு நிலம் என்பது புலனாகிறது.

கோயிற் கட்டிடக்கலை அறிமுகம்



விஜய்பட்
மென்பொறியாளர்
கோவில் கட்டிடக்கலை ஆய்வாளர்
சென்னை.

பாகம்:7



கோயில் கட்டிடக் கலைக்கான வாஸ்து முறை:

பிரசாத வாஸ்து:

2.திசை அறிதல் (சங்கு ஸ்தாபனம்):


தேர்ந்தெடுக்கப்பட்ட நிலத்தின் நடுவில் ஒரு முழ அளவிற்கு நிலத்தை மட்டம் செய்து, நீர் தெளித்து. நடுவில் சங்குவை நட வேண்டும்.

சங்குவின் உயரம் ஒரு முழமாகவும் அடிப்பகுதியின் அகலம் ஐந்து விரலாகவும், அதன் உச்சிப் பகுதி ஒரு அங்குலமாகவும் கூர்மையாக அமைக்க வேண்டும்.



Figure:1-Sankhu

Figure:2-Sankhu Sthapanam



பதினெட்டு அங்குல உயரம் உள்ளது மத்தியமம். பன்னிரண்டு உயரமுள்ள சங்கு அதமம் ஆகும். அதன் உயரத்திற்குத் தக்கவாறு அகலம் அமைத்துக் கொள்ள வேண்டும்.

யானைத் தந்தம், சந்தனம், கருங்காலி, வெண் கருங்காலி, வன்னி, பரம்பை, புளி இவைகள் சங்கு செய்ய கூறப்பட்ட மரங்களாகும். இம்மரங்களால் சங்குவை அழகுற செய்து அதன் உச்சி பகுதியில் வேறு மரத்தினால் ஒரு அங்குலத்திற்குக் குடைபோல் செய்து சேர்க்க வேண்டும்.

சங்குவை நிறுத்துவதற்கு முன், அந்தப் பூமியின் நடுவைப் புள்ளியாக வைத்து, சங்குவைப் போல் இருமடங்கு அகலமுள்ள ஒரு வட்டம் வரைந்து, அந்த புள்ளியில் சங்குவைக் கதிரெழும் காலை நிறுத்த வேண்டும்.

காலை, மாலை வேளைகளில் சங்குவின் நிழல் அந்த வட்டத்தின் கிழக்கு. மேற்கு வட்டக்கோட்டில் படும்போது இருபுள்ளி வைக்க வேண்டும். இவ்விரு புள்ளிகளையும் இணைத்தால் கிழக்கு, மேற்கு திசைகள் கிடைக்கும்.



Figure:3 - Identifying East





Figure:4 - Identifying True East

வட்டத்தில் நிழல் விழுந்த புள்ளியை நடுவாக் கொண்டு. அரைவட்டமாகக் கிழக்கு. மேற்கு திசைகளில் வரைந்தால் தெற்கு, வடக்கு வட்டத்தில் மீனின் தலைப்பகுதியாகவும், வால் பகுதியாகவும் விழும். இப்புள்ளிகளை இணைத்தால் வடக்குத் தெற்கு திசைகள் கிடைக்கும்.

நிழலின் தென்பக்கத்திலும் (தக்ஷணாயணம்) வடபக்கத்தில் (உத்திராயணம்) கிழக்கு, மேற்காக நேர் கோடிட்டு, சரியான திசையைக் கணக்கிட வேண்டும்.

Figure:5 - East & West Line






Figure:6 - Position of Sun



Figure:7 - Sun Beam -Sringeri



Figure:8 - Sun rays – Gavi Gangadhareshwara Temple

கொங்கணீஸ்வரர் கோவில் சிவலிங்கத்தின் மீது சூரிய ஒளி படும் திருக்காட்சி



Figure:9 - Sunrays on Shivalingam

Autumnal equinox, is one of the two days of the year when the sun appears sequentially in each of the windows of the Gopuram of the Sree Padmanabhaswamy temple.

உத்தராயணம், ஸ்ரீ பத்மநாபசுவாமி கோவிலின் கோபுரத்தின் ஜன்னல்கள் ஒவ்வொன்றிலும் சூரியன் வரிசையாக தோன்றும் ஆண்டின் இரண்டு நாட்களில் ஒன்றாகும்.



Figure:10 - Equinox- Trivandrum

இது போன்று மீது சூரிய ஒளி படும் திருக்காட்சி ஐரோப்பிய நாடுகளான இத்தாலி மற்றும் வத்திக்கான் நகரில் அமையப்பெற்ற கிறித்தவத் திருச்சபை மற்றும் அரண்மனையில் சூரிய ஒளி படும் திருக்காட்சி நடக்கின்றது

The Symbolic Use of Light in Hadrianic Architecture and the 'Kiss of the Sun'

Archaeoastronomy and Ancient Technologies
www.aaatec.org ISSN 2310-2144

1. Pantheon




Figure 17. Pantheon: *a* - section of the Pantheon with the Arch of Light, showing that the *oculus* and the masonry arch have the same width: 9 meters; *b* - the oculus and the Arch (photo Francesco Lerteri).




Figure:11 - Sun Rays -Pantheon

Figure:12 - Sunrays Falling-Pantheon

2. Castel Sant'Angelo (Mausoleum of Hadrian)



Figure 11. Summer solstice in Castel Sant'Angelo: ***a*** - the east niche illuminated by the Sun entering from the west niche at 4.55 pm (summer solstice 2012); ***b*** - the west niche illuminated by the sun entering from the east niche in the morning at 9:00 pm (summer solstice 2014); ***c*** - the north niche under the footbridge (photo by M. De Franceschini).

Figure:13 - Sunrays-Castel San'Angelo



3.Mausoleo degli Equinozi -Rome

Figure:14 - Mausoleo degli Equinozi



Fig. 4: *Mausoleo degli Equinozi:* inner room with the original revetment of travertine blocks and the light shining from the tunnel window. (photo Marina De Franceschini)





ஸ்ரீநிவாஸ்
மென்பொறியாளர்,
வேலூர்.

ஓர் பெண்ணின் நடுகல்



தமிழ் சங்க இலக்கியங்கள் நடுகல் வழிபாடுமுறை பற்றி விவரிக்கின்றன, அந்த வழிபாடு முறைகள் கர்நாடக மாநிலத்தில் தற்போதும் கடைப்பிடிக்க படுகின்றன என்பதை அறியமுடிகிறது, இந்தியாவில் அதிக நடுகற்கள் உள்ள மாநிலம் என்றால் அது கர்நாடகம் தான் என்றால் மிகையாகாது பெங்களூர் தொடங்கி மகாராஷ்டிரா எல்லையான பெலகாவி மாவட்டம் வரை செல்லும் வழிஎங்கும் நடுகற்கள் இருப்பதை காணலாம்.

தமிழ்நாட்டு நடுகற்களில்கல்வெட்டிற்கு முக்கியதுவம் இருப்பது போல் கர்நாடக மாநில நடுகற்களில் காட்சிஅமைப்பு மிகவும் தத்ரூபமாக வடிக்கப்பட்டிருக்கும்.

கல்வியில் சிறந்து விளங்கிய ஆசிரியர்களின் நினைவாக நடுகற்கள் எழுப்பி வழிப்பட்டனர் என்பதற்கு சான்றாக தருமபுரியில் கிடைத்த நுளம்பர் கால நடுகல் உள்ளது, இதேபோன்று கல்வியில் சிறந்து விளங்கிய பெண் ஒருவரின் நினைவாக மற்றொரு நடுகல்லும் உள்ளது.

தங்க சுரங்கங்கள் நிறைந்த குவலாளபுரத்தில் கோலார் மாவட்டத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கல்வி சாஸ்திரத்தில் சிறந்து விளங்கிய "சவிநிர்மாடி" என்ற பெண்ணின் நினைவாக எடுகப்பட்ட நடுகல் தற்போது பெங்களூர் அரசு அருங்காட்சியத்தில் உள்ளது.

ஆசனத்தில் அமர்ந்தகொண்டு, மாணவர்களுக்கு கல்வி கற்று தருவது போன்று இந்நடுகல் வடிக்கப்பட்டுள்ளது, கையில் ஓலை சுவடி ஏந்திய படி, அருகினில் புத்தக்ங்கள் வைக்கும் ஒரு சிறு நாற்காலியும் உள்ளது, "சவிநிர்மாடி" என்ற பெண் ஏதேனும் கடிகையின் ஆசிரியராக இருக்க கூடும், கல்வெட்டில் உள்ள பழங்கன்னட எழுத்துகள் மற்றும் காட்சியமைப்பு படி இந்நடுகல் 9 அ 10 ஆம் நூற்றாண்டை சேர்ந்த கங்கர் கால நடுகல் ஆகும்.

கல்வெட்டில் ஸ்ரீ ஹரி ஸித்தி என்ற மங்கல சொல்லில் தொடங்கி நாகார்ஜுனய்யா நந்திகப்பேவின் மகள் சவிநிர்மாடி, சகல சாஸ்திர பிரசித்தி கற்று அறிந்தவள் சவிநிர்மாடி என்ற கன்னட கல்வெட்டு உள்ளது.

அன்றைய சமுதாய நிலையில் பெண்களுக்கு கல்வியில்முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்ததும், சவிநிர்மாடியின் நினைவாக நடுகல் எடுத்து வழிபாடு செய்த பெருமைகள் எல்லாம் அன்று வாழ்ந்த மக்களை சாரும்.



சமணமும் அமணமும் – 4



வெ.பாலமுரளி
தமிழர் தொன்மவியல் ஆய்வாளர்
மதுரை

நாம் இந்த **"பிராமி"** எழுத்தின் தொடக்க காலத்திற்குப் போவதற்கு முன்னர், ஒரே ஒரு தமிழி கல்வெட்டை மட்டும் கொஞ்சம் விரிவாக பார்த்து விடுவோம்.

"எஉமிநாடு குமுழ்ஊர் பிறந்த காவுடி ஈ

தென்குசிறுபோசில் இளயர் செய்த அதிட்அனம்"

என்பது புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கும் சித்தன்னவாசலில் உள்ள கல்வெட்டு.



இதன் அர்த்தம் **"எஉமி நாட்டில் உள்ள குமுழூரில் பிறந்த காவுடி என்பவருக்கு தெற்கு சிறுபோசிலைச் சேர்ந்த இளையர் என்பவர் செய்து கொடுத்த இருப்பிடம்"**.


இந்தக் கல்வெட்டை மொத்தம் 8 பேர் வாசித்து, தமிழ்நாட்டுத் தொல்லியல் துறையில் முறையாக ஆவணப்படுத்தியுள்ளனர்.

இந்த 8 பேருமே தொல்லியல் துறையில் பெரிய ஆட்கள்தான். அதில் 6 பேர், இந்தக் கல்வெட்டின் முதல் வார்த்தையை **"எஉமிநாடு"** என வாசித்திருக்க, நாகசாமியும், ஐராவதம் மகாதேவனும் மட்டுமே இதனை **"எருமிநாடு"** என வாசித்திருக்கிறார்கள்.

சரி... இரண்டிற்கும், எழுத்தில் என்ன வித்தியாசம் என பார்ப்போம்.

இப்போதுள்ள தமிழில் இருக்கும் "ட" னாவில் உள்ள செங்குத்து கோட்டை கொஞ்சூண்டு கீழே இழுத்து விட்டால் அது "ரு".

அப்படியில்லாமல், "ட" னாவில் உள்ள செங்குத்து கோட்டையும் மட்டத்தில் இருக்கும் கோட்டையும் ஒரு சின்ன வளைவுடன் இணைத்தால் அது "உ". இப்போது கீழே இணைத்துள்ள அந்தக் கல்வெட்டுப் புகைப்படத்தைப் பாருங்கள். உங்கள் புரிதலுக்காக படத்தின் மேற்பகுதியில் "ரு" வுக்கும் "உ" வுக்கும் உள்ள வித்தியாசத்தைக்



காண்பித்துள்ளேன். நீங்களே சொல்லி விடுவீர்கள் அது "எஉமி நாடா" இல்லை "எருமி நாடா" என்று.

இப்போது பொருளில் உள்ள வித்தியாசத்தைப் பார்க்கலாம்.

இந்தக் கல்வெட்டு வெட்டப்பட்ட காலம் கி.மு.முதல் நூற்றாண்டு என்று நமது தொல்லியல் துறை சொல்கிறது. அப்படியென்றால் உண்மையில் அது கி.மு. 2 அல்லது கி.மு. 3ம் நூற்றாண்டு என்று கொள்ளலாம்.

அந்த கால கட்டத்தில் ஒரு 10 ஊர்கள் இணைந்து இருந்தால் கூட அதை **“நாடு”** அல்லது **“கூற்றம்”** என்று சொல்லும் வழக்கம் இருந்திருக்க வேண்டும். அப்படிப் பார்த்தால் **“எஉமிநாடு”** என்று ஒன்று இருந்திருக்க வாய்ப்புகள் நிறைய உண்டு.


எனவேதான், இதை வாசித்த 8 அறிஞர்களில் 6 பேர் இதை “எஉமி நாடு” என்றே வாசித்துள்ளனர்.

அப்படியென்றால் நாகசாமியும், ஐராவதமும் மட்டும் இதை “எருமி நாடு” என்று வாசிக்கக் காரணமென்ன ?

கர்நாடக வரலாற்றின் பிற்பகுதியில் அவர்களுடைய சின்னம் “எருமை”. அதனால்தான் இன்றும் அங்குள்ள கோயில்களில் கோபுரத்தின் உச்சியில் எருமையின் கொம்புகளைக் காணலாம். ஆனால், மேற்சொன்ன கி.மு. 2 அல்லது 3ம் நூற்றாண்டிலும் அதே எருமை சின்னம்தான் அங்கு இருந்தது என்பதற்கான ஆதாரம் எதுவுமில்லை. ஆனால், நமது நாகசாமியும் , ஐராவதமும் பிற்கால வரலாற்றுச் சின்னத்தை முற்கால வரலாற்றோடு இணைத்து, “எருமை நாடு” என்றால் அது கண்டிப்பாக கர்நாடகாதான். எனவே அவர்கள் “எருமி நாடு” என்றுதான் எழுத நினைத்திருக்க வேண்டும். ஸ்பெல்லிங் மிஸ்டேக் ஆகி “எஉமி நாடு” என்று பொறித்து விட்டார்கள் என்று விளக்கம் கொடுக்க, நமது தொல்லியல் துறையும் மற்ற 6 பேர் வாசித்ததையும் ஒதுக்கி வைத்து விட்டு, *This is final. No more arguments* என்று சொல்லி “எருமி நாடு” என்றே பதிவுசெய்து விட்டார்கள்.

இங்கிருந்தவர்கள் அனைவரும் கர்நாடகாவிலிருந்து வந்த சமணர்களே (ஜெயினர்களே) என்பதற்கு, இந்த ஒரு கல்வெட்டையும் மிக முக்கியமான ஆதாரமாகக் காண்பிக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. கி.பி. 9 அல்லது 10 ம் நூற்றாண்டு வாக்கில், **அஜ்ஜணந்தி** என்னும் சமண (ஜெயின) முனிவர் தீவிரமாக சமண (ஜெயின) மதத்தை மறு மலர்ச்சி செய்வதில் ஈடுபட்டிருக்கிறார்.








அப்போது அவர் தமிழி கல்வெட்டுக்கள் எங்கெல்லாம் இருக்கிறதோ, (கிட்டத்தட்ட) அந்த இடங்கள் அனைத்திற்கும் சென்று அங்கு ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட தீர்த்தங்கரர்கள் மற்றும் சமண இயக்கிகள் சிலைகளை வடித்து அதற்கு அருகில் சில வட்டெழுத்துக் கல்வெட்டுக்களையும் பொறித்து வைத்து விட்டுப் போயிருக்கிறார்.

இவற்றின் மூலம் “இங்குள்ள கல்படுக்கைகள் மற்றும் தமிழிக் கல்வெட்டுக்களும் எங்களவர்களதுதான்” என சொல்லாமல் சொல்லி விட்டார்.



சமணர்களில் கி.பி. 6 அல்லது 7ம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் உருவ வழிபாடே வந்திருக்கிறது. அதற்கு முந்தைய காலத்து தீர்த்தங்கரர்களின் சிலை எதுவும் கண்டெடுத்தது போலத் தெரியவில்லை (இதில் தவறு இருந்தால் சொல்லுங்கள். திருத்திக் கொள்கிறேன்). அப்படி இருக்கையில், அவர் எப்படி அல்லது அவர் ஏன் தமிழிக் கல்வெட்டுக்கள் மற்றும் கல்படுக்கைகள் இருக்கும் இடங்களுக்குச் சென்று சொந்தம் கொண்டாடினார் என்பது ஏழு கோடியே அறுபது லட்ச ரூபாய் கேள்வி (அதாங்க...மில்லியன் டாலர் கொஸ்டின்). அவர் செய்த அதே வேலையைத்தான் இன்றைக்கு “ ஜெயின் சங்கம், புனே” என்ற க்ரூப்பும் மேற்சொன்ன எல்லா இடங்களுக்கும் சென்று மஞ்சள் போர்டை வைக்கிறது (உதாரணத்திற்கு ஒரு படத்தை இங்கு இணைத்துள்ளேன்).



நமது தொல்லியல் துறை இந்த அஜ்ஜணந்தி செய்த தீர்த்தங்கரர்களின் புடைப்புச் சிற்பங்களையும் ஒரு வாதமாக வைக்கிறது.

நான் இதுவரை சொன்ன காரணங்களுக்கு மேல், இங்கிருந்தவர்கள் சமணர்கள்தான் (ஜெயினர்கள்தான்) என்பதற்கு வேறெந்த காரணமும் சொன்னது போல் தெரியவில்லை.



இதிலிருந்து தமிழர்களின் அல்லது ஆசீவகர்களின் அதாவது அமணர்களின் பெருமையைக் குலைக்க ஒரு பெரிய க்ரூப்பே பின்புலத்தில் இருப்பது கண்கூடாகத் தெரிகிறது.

அதேபோல்.....சொல்லி வைத்தாற்போல், இதுவரை கண்டுபிடித்த அனைத்துத் தமிழிக் கல்வெட்டுக்களின் காலத்தையும் கி.மு.2ம் நூற்றாண்டிற்கும் , கி.பி.இரண்டாம் நூற்றாண்டிற்கும் இடையே நிர்ணயித்திருக்கிறார்கள். இதற்கு கார்பன் டெஸ்ட் போன்ற ஏதேனும் அறிவியல் ரீதியான டெஸ்ட் எதுவும் எடுத்தார்களா என்றால், இல்லை என்பதே வருத்தமான பதில். அப்புறம் எப்படி மேற்சொன்ன காலகட்டத்தை நிர்ணயித்தார்கள் ?

ரொம்ப சிம்பிள்.

இருநூறு வருடங்களுக்கு முன்னர், பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில்தான் அசோகரின் கல்வெட்டுக்கள் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டன. அதுவே நமக்குக் கிடைத்த முதல் வகை கல்வெட்டுக்கள். அதாவது அவைதான் நாம் ஆராய்ச்சி செய்த முதல்வகை கல்வெட்டுக்கள் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். காரணம், அதை அங்குள்ள மக்கள் முன்னரே பார்த்து கண்டு கொள்ளாமல் விட்டு விட்டிருக்க வேண்டும்.

அசோகரின் கல்வெட்டுக்கள், பெரும் பாறை கல்வெட்டுக்கள், சிறு பாறை கல்வெட்டுக்கள், தூண் கல்வெட்டுக்கள் மற்றும் குடை வரைக் கல்வெட்டுக்கள் என்று நாற்பதுக்கும் மேல்.

அவை கிரேக்கம், அராமிக், பிராகிருதம், கரோஷ்த்தி மற்றும் இன்னொரு "யாருக்கும் புரியாத ஒரு எழுத்துருவம்" என்று நிறைய எழுத்து வடிவங்களில் பொறிக்கப்பட்டிருந்தன. இதில் உள்ள "யாருக்கும் புரியாத" எழுத்துருவத்தைக் கண்டுபிடிக்க சில காலம் ஆனது. 1830 என்று நினைக்கிறேன். அந்த கோட்டு வடிவ எழுத்தை ஒருவர் கொஞ்சம் கொஞ்சமாக வாசிக்க ஆரம்பித்து விட்டார்.

ஆனால், அந்த வடிவ எழுத்திற்கு என்ன பெயர் என்று "அந்த சமயத்தில்" யாருக்கும் தெரியவில்லை.

பின்னர்தான் அந்தக் காலத்தில் புலக்கத்தில் இருந்த **"பிராமி"** என்னும் எழுத்து அது என்று கண்டறிந்தார்கள். கி.மு.3ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சமண (ஜெயின) நூலான "சம வயங்க சூத்திரம்" மற்றும் கி.பி.3 ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட புத்த நூலான "லலித விஸ்தார சூத்திரம்" என்னும் நூலில் "பம்மி" என்று குறிப்பிடப்பட்ட, "பிராமி" தான் என்று கண்டறிந்தார்கள் (அதே நூல்களில் நமது " தமிழி" யும் அப்போது பிரபலமாக இருந்த ஒரு எழுத்து மொழியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது).

பின்னர் அதே மாதிரி, மற்ற சில இடங்களிலும் அந்த எழுத்து வடிவ எழுத்துருவம் கிடைக்க, அதை வித்தியாசப்படுத்த வேண்டுமேயென்று, அதற்கு "அசோக பிராமி" என பெயரிட்டனர்.

பின்னர், 1906 இல் தமிழ் நாட்டில் மதுரைக்கு அருகில் உள்ள மீனாட்சிபுரம் என்னும் மாங்குளத்தில் முதல் "பிராமி" கல்வெட்டு கிடைக்க, அதை வாசிக்க ரொம்பவே சிரமப்பட்டு விட்டனர்.

ஏறத்தாழ 20 வருடங்கள் கழித்து இந்த எழுத்துக்களை வாசிக்க ஆரம்பித்தனர். அப்போது அதற்குப் பெயர் **"பிராமி"** தான்.


பின்னர் இந்த எழுத்துக்களுக்கு **"தமிழ் பிராமி"** என்று பெயர் சூட்டியது உயர்திரு ஐராவதம் அவர்கள்தான். அதற்கு அவர் சொன்ன காரணம், இது அசோக பிராமியிலிருந்து பிரிந்த எழுத்துருவம். இது தமிழகத்தில் இருப்பதால், இதை "தமிழ் பிராமி" என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும்.

இதை மறுப்பேதும் சொல்லாமல் எல்லோரும் உடனே ஏற்றுக் கொண்டு விட்டனர்.

இதையே வரலாற்று எழுத்தாளரும் ஆய்வாளருமான நீலகண்ட சாஸ்திரியும் தன்னுடைய **"தமிழரின் பண்பாடும் வரலாறும்"** என்ற நூலில் அடித்து சொல்கிறார். கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிறகே அசோக பிராமியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக உருமாறி தமிழ் பிராமி என்ற எழுத்துருவம் வடிவம் பெற்றது. அதற்கு முன்னர் தமிழுக்கு எழுத்துருவம் கிடையாது (இவர் பெரிய வரலாற்று ஆய்வாளர். நம்புங்கள் ப்ளீஸ்).

அவர்கள் எந்த " சம வயங்க சூத்திரத்தையும்" "லலித விஸ்தார சூத்திரத்தையும்" மேற்கோள் காட்டி "பிராமி" என்னும் எழுத்தை பிரபலமாக்க

முயன்றார்களோ, அதே “ சம வயங்க சூத்திரத்திலும்” “லலித விஸ்தார சூத்திரத்திலும்”, அப்போது விளங்கிய மொழிகளில் ஒன்றாக “தமிழி” யும் இருந்தது என்று குறிப்பிட்டிருந்ததை வசதியாக மறைத்து விட்டனர் (இது என்னுடைய மைண்ட் செட் இல்லை. உயர்திரு ஐராவதத்தின், நாகசாமி மற்றும் நீலகண்ட சாஸ்திரி போன்றோரின் மைண்ட் செட்). அதில் சமஸ்கிருதம் குறிப்பிடப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. காரணம் சமஸ்க்ருதத்திற்கு என்ற தேவ பாஷைக்கு இன்று வரை எழுத்துருவம் கிடையாது.








அசோகர் ஒன்றும் பிராமி எழுத்தில் மட்டுமே அவருடைய எல்லா கல்வெட்டுக்களையும் பொறித்து விடவில்லை. அவருடைய ஆணைகளும், நிர்வாக முறையும் பரத கண்டம் முழுவதும் பரவ வேண்டும் என்ற நோக்கில் நிறைய மொழிகளில் பொறித்து அதை நாட்டின் பல்வேறு பகுதிகளில் பரவிடச் செய்தார்.

அப்போது, தென்னகத்திலும் “தமிழி” மிகவும் செழிப்புடன் இருந்ததால், தமிழி கல்வெட்டு பொறிக்கத் தெரிந்த சிற்பி ஓரிருவரை வரவழைத்து அவர்கள் சொன்ன “பிராமி” யில் பொறித்திருக்க வேண்டும். ஆம், அவருடைய “பிராமி” கல்வெட்டு எழுத்துக்கள் அனைத்தும் அச்சு அசல் தமிழி. ஆனால் அதை வாசிக்கும்போது அர்த்தம் நாம் புரிந்து கொள்ளாத வகையில் உள்ளது.

அதாவது இப்போதுள்ள வாட்சப் மொழி போல. “ *enga veettula Chicken Biryani. Unga veettula enna samaiyal ?*” என்பது போல. இதில் எழுத்து வடிவம் ஆங்கிலம். ஆனால் சொல்ல வரும் விஷயமோ தமிழ்.

நான் இதைச் சொல்வதற்குக் காரணம், அவர்கள் சொல்லும் பிராமி அவ்வளவு பழைமையானது என்றால், வட நாட்டில் அவர்கள் செய்த ஆயிரக்கணக்கான அகழ்வாராய்வில் அசோகருக்கு முந்தைய கல்வெட்டுக்களோ, பானைக் கீறல்களோ ஏன் கிடைக்கவில்லை ?

ஆனால், நமக்கோ **கீழடி, ஆதிச்ச நல்லூர், கொடு மணல், பொருந்தல், கொந்தகை என்று தோண்டத் தோண்ட “தமிழி” எழுத்து பொறிக்கப்பட்ட பானைக் கீறல்கள், நெல் குதிர், தங்கத்தில் செய்த தாயக் கட்டை என்று கிடைத்துக் கொண்டே இருக்கிறது. இதுவரை செய்த வேண்டா வெறுப்பு கார்பன் டேட்டிங்கில் கி.மு. 900 முதல் கி.மு.600 வரை என்று கால வரைவு செய்யப்பட்டுள்ளது. அதாவது அசோகர் பிறப்பதற்கு முன்னால் 300 முதல் 600 வரை என்று அறிவியல் பூர்வமாக “அவர்களாலேயே” நிரூபிக்கப் பட்டு விட்டது.**





ஆனால், ஐராவதம், நீலகண்ட சாஸ்திரி, நாகசாமி போன்றோரால் **"தமிழ் பிராமி"** என்று அழைக்கப்பட்டபோது, மேற்சொன்ன அகழ்வாராய்வு முடிவுகள் வரவில்லை. எனவே, எந்தக் காரணத்தைக் கொண்டும், தமிழ் நாட்டில் உள்ள "தமிழ் பிராமி" கல்வெட்டுக்கள் அசோகர் காலத்திற்கு முந்தையதாகக் காட்டி விடக் கூடாது என்ற ஒரே நோக்கில் நமது கல்வெட்டுக்களின் காலத்தை கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. இரண்டாம் என்று வரையறை செய்தார்கள்.

ஆதாவது, அசோகருக்குப் பிறகே, இங்கு வந்த "சமணர்கள் (ஜெயினர்கள்) தந்த கொடையே தமிழ் எழுத்து வடிவம்" என்று ஆவணப்படுத்தி விட்டார்கள்.

இந்த ஒரு விஷயத்தில் மட்டும் காங்கிரஸ், பிஜேபி எல்லோரும் ஒண்ணு சேர்ந்து விடுவார்கள். காரணம், இது, அரசியல் கட்சிகளைத் தாண்டி வடக்கான்ஸ், தெற்கான்ஸ் மற்றும் ஆரியர், தமிழர் அரசியல். கட்சி அரசியலை விட இன்னும் கேவலமானது.

ஆனால், காலமானது, கடவுள் இருக்கான் குமாரு என்று நிரூபித்து விட்டது.

இதிலிருந்து நம் ஊரில் இருக்கும் கல்படுக்கைகளும், தமிழிக் கல்வெட்டுக்களும் சமணத்துக்குரியதல்ல என்பது விளங்கும்.

இந்தத் தொடரை தற்காலிகமாக முடிக்கிறேன்.

இன்னொரு விஷயம். நான் யார் மனதையும் நோகடிக்க வேண்டும் என்ற நோக்கிலோ, துறையின் பெரிய ஜாம்பவான்களை இழிவு படுத்த வேண்டுமென்ற நோக்கிலோ இந்தத் தொடரை எழுதவில்லை.

நம் தமிழகத்தில் இருந்து கொண்டே நம் தமிழை முன்னுக்குக் கொண்டு வர தடை விதிக்கிறார்களே என்ற வேதனையில் மட்ட்ட்ட்ட்டுமே எழுதினேன். மற்றபடி ஒரு புண்ணாக்கு மைண்ட் செட்டும் இல்லை.

நம் கவியரசன் சொன்னது போல:

"போற்றுபவர் போற்றட்டும்

புழுதி வாரி தூற்றுபவர் தூற்றட்டும்


தொடர்ந்து செல்வேன் என் பாதையில்.

எங்கும் நில்லேன்

எதற்கும் அஞ்சேன்"

நன்றி...வணக்கம்.

வெ.பாலமுரளி.



இந்தத் தொடரை எழுத உதவியவை :

3. முனைவர் க.நெடுஞ்செழியன் எழுதிய ஆசீவகமும் அய்யனார் வரலாறும்.
4. முனைவர் ர.விஜயலட்சுமி எழுதிய தமிழகத்தில் ஆசீவகர்கள்.
5. உயர்திரு ஆதிசங்கரன் எழுதிய சில கட்டுரைகள்.
6. தமிழ் நாடு தொல்லியல் துறை வெளியிட்ட தமிழ்-பிராமி கல்வெட்டுக்கள்.

- உயர்திரு.ராஜகுரு - ஆசிரியர் ராமநாதபுரம்,
- உயர்திரு.கண்ணன் - காவல்துறை,சென்னை,
- உயர்திரு.பாலபாரதி - கல்வித்துறை, திருச்சி,
- உயர்திரு.செல்வக்குமார் - கடச்சனேந்தல்.

போன்ற நண்பர்களுடன் நடந்த உரையாடல்கள்.

- ✓ இது சம்பந்தமாக மேலும் தேடுவதற்குக் காரணமாகயிருந்த உயர்திரு.ஐராவதம் மகாதேவன் மற்றும் நாகசாமி.
- ✓ உயர்திரு நீலகண்ட சாஸ்திரி எழுதிய "தமிழர் பண்பாடும் வரலாறும்".

செப்பேடு வழி சோழர் வரலாறு

பாகம் - 6



மா.மாரிராஜன்
சோழர் வரலாற்று
ஆய்வுசங்கம்
காரைக்கால்



திருவாலங்காடு செப்பேடு..

முதலாம் இராஜேந்திரனின் *6ம்* ஆட்சியாண்டில் கி.பி *1018*ல் இச்செப்பேடு வெளியிடப்பட்டது. சோழர்களது செப்பேடுகளில் மிகவும் பிரபலமான ஒன்று. சில அவசிய வரலோற்றுத் தரவுகளைக் கொண்ட செப்பேடு இது.

தொல்லியல்த்துறையின் *1903-04* ஆண்டறிக்கையில் பதிவு செய்யப்பட்டு, தென்னிந்தியக் கல்வெட்டுத்தொகுதி எண் *3*ல் *205*ஆம் எண்ணில் திரு எச்.கிருஷ்ண சாஸ்திரி அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

இச்செப்பேடு தற்போது சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளது.



முகப்பு இலச்சினையுடன் மொத்தம் 31 ஏடுகள் உள்ளன.

பத்து ஏடுகளில் வடமொழிப்பகுதியும் இருபத்தொரு ஏடுகளில் தமிழ்ப் பகுதியும் பொறிக்கப்பட்டுள்ளன..

முகப்பு இலச்சினை:



இலச்சனையின் மேல் பகுதியில் குடையும் அதன் இருபுறமும் சாமரங்கள் உள்ளன. இலச்சினையின் நடுவே இரு மீன்கள் மற்றும் ஒரு புலி உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

இதன் இருபுறமும் இரு விளக்குத்தூண்கள் உள்ளன. கீழ் பகுதியில் ஒரு வில் உருவம் உள்ளது.

இலச்சினையின் விளிம்பில் சமஸ்கிருதத்தில்..

"ஸ்வஸ்திஸ்ரீ ஏதத் ராஜேந்த்ர சோளஸ்ய

பரகேசரி - வர்ம்மனை : ராஜத் ராஜன்ய மகுட

ஸ்ரேணி ரத்னேஷு ஸாஸனம் "

என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

அரசர்களின் திருமுடி வரிசையில் இரத்தினம் போன்று திகழும் இது பரகேசரி வர்மனான இராஜேந்திர சோழனின் சாசனம் என்பது இதன் பொருளாகும்.


செப்பேடு வழங்கப்பட்டதன் நோக்கம்:

ஜெயங்கொண்ட சோழ மண்டலம் சிங்களாந்தகச் சதுர்வேதிமங்கலம் பிரமதேயமான பழையனூரை வெள்ளான் வகை கிராமமாக மாற்றி அதன் வருவாயை திருவலங்காடு மகாதேவருக்கு தேவதானமாக அளிக்கும் ஆணையே இச்செப்பேடு. இந்த ஆணை இராஜேந்திரசோழனின் 6ஆம் ஆட்சியாண்டு 88ம் நாளில் பிறப்பிக்கப்பட்ட சாசன சுலோகம்.

வடமொழி பகுதியில் கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து சோழ அரசர்களின் பட்டியல் புராணத்திலிருந்து தொடங்கி சோழ மரபு விவரிக்கப்படுகிறது. சூரியனில் தொடங்கி விசுவசித்வரை செல்கிறது. பிறகு இலக்கிய அரசர்களான பெருநற்கிள்ளி, கரிகாலன், கோச்செங்கனான்.

பிற்கால சோழர்களில் விஜயாலயனில் தொடங்கி இராஜேந்திரன் வரை நடந்த முக்கிய நிகழ்வுகள் பதிவுகளாக உள்ளன.

தமிழ்ப்பகுதியில் பழையனூர் கிராமத்தை தேவதானமாக திருவாலங்காடு மகாதேவருக்குத் தானமாக கொடுத்த நிகழ்வுகள் உள்ளன.



வடமொழிப்பகுதி..

செய்யுள் 1-2:

ஸ்ரீகண்டனான பரமேஷ்வரனின் அணைப்பிற்கு ஏங்கும் பவானி நமக்கு அருள் புரியட்டும்.. வெற்றித் திருமகள் வாசம் செய்யும் சோழர் வம்சம் இவ்வுலகை வெகுகாலம் காக்கட்டும்.

செய்யுள் 3:

சோழர்குலப் பெருமையை எடுத்துரைக்க இருக்கின்ற 50 எழுத்துக்கள் எமக்குப் போதவில்லை. சரஸ்வதி தாயே மேலும் சில எழுத்துக்களை அருள்வாயாக..

செய்யுள் 4-26:

புராண அரசர்களின் பட்டியல் தொடங்குகிறது சோழ முதல் அரசனாக விவஸ்வான் (சூரியன்) ஆரம்பம் ஆகிறார்.

இவரைத்தொடந்து..

இட்சுவாகு, விகுட்சி, புரஞ்சயன், கட்சிவான், அர்யமா, அனலப்பிரதாபன், வேனன், ப்ருது, துந்துமாரன், யுவனாச்வன், மாந்தாதா, முசுகுந்தன், வளபன், பிருதுலாட்சன், பார்த்திவசூடாமணி, தீர்க்கபாகு, சாங்கிருதி, பஞ்சபன், சத்தியவிரதன் போன்றோர் சோழ அரசர்களாக வரையறை செய்யப்படுகின்றனர்.

செய்யுள் 27:

சோழர்குல அணிகலனாக சிபி என்னும் மன்னன் தோன்றினான். கழுகுக்கு அஞ்சிய புறாவை காக்கும் பொருட்டு தன் உடல்மீதிருந்த பற்றை விடுத்தான். உசீனரன் மகன் அவன். அவனுக்குப்பிறகு மருத்தன் என்பவன் ஆண்டான்.

செய்யுள் 28-32:

அந்தக்குலத்தில் துசியந்தன் பரதன் என்று தொடங்கி சோழன் என்னும் பெயருடையவன் அரசனான். இதன்பிறகே சூரியகுலத்தோன்றல் சோழர் குலமாக பெயர் எடுத்தது. சோழனின் மகனாக இராசகேசரியும், அவனது மகன் பரகேசரியும் பிறந்தனர். இதன் பிறகு வந்த சோழஅரசர்கள் இராசகேசரி மற்றும் பரகேசரி பட்டங்களை மாறி மாறி ஏற்றனர்.

செய்யுள் 33-41:

அந்தக் குலத்தில். சித்திரதன், சித்ராச்வன், சித்ரன்வா, சுரகுரு, வியாக்ரகேது (புலிக்கொடியோன்), நரேந்திரபதி, வசு, விசுவசித், பெருநற்கிள்ளி, எனப் பெயருடையவர்கள் தோன்றினார்கள்.

செய்யுள் 42

அந்தக்குலத்தில் யானைகளுக்கும் (கரி) கலிகாலத்திற்கும் காலனாக கலிகாலன் தோன்றினான். காஞ்சி நகரை தங்கத்தால் புதுப்பித்தான். காவேரியின் கரைகளை கட்டி தன் புகழை காட்டினான்.

செய்யுள் 43:

அவனுடைய வம்சத்தில் வலிமையுடைய கோச்செங்கனான் பிறந்தான். திரிபுரமெரித்த சிவனின் அருளால் தன் சிலந்தி பிறப்பை விட்டவன்.

செய்யுள் 44-60:

அந்த பெருமைமிகு குலத்தில் வீரத்திருவை உடைய விஜயாலயன் பிறந்தான். தஞ்சையை கைப்பற்றி நிசும்பன் என்னும் அரக்கனை அழித்த துர்க்கைகக்கு

கோவில் எடுத்தான். அவனது மகனாக ஆதித்தவர்மன் தோன்றினான். அபராஜிதன் என்னும் பல்லவனை போரில் வென்றான்.

அவனுடைய மகன் பராந்தகன் பாண்டியனையும் , ஈழத்தையும் வென்றான். இவனது மகன் இராஜாதித்தன் கிருஷ்ணராசனுடன் போரிட்டு வீரசுவர்கம் சென்றான். அடுத்து அரிந்தமன் (அரிஞ்சயர்) அரசன் ஆனான்.

அவனிடமிருந்து (இரண்டாம்) பராந்தகன் (சுந்தரன்) தோன்றினான். சுந்தரன் ஆண்டபோது துன்பத்தால் எந்த ஒருவரும் "ஆ" என்னும் சொல்லை பயன்படுத்தியது இல்லை.

செய்யுள் 61-65:

சுந்தரச் சோழனனுக்கு அருண்மொழி வர்மன் மகனாகப் பிறந்தான். சங்குச் சக்ர ரேகையுடன் திருமாலே அவதரித்தது போல் பிறந்தான். தந்தைவழி தாய்வழி இரு மரபுகளிலும் தூய்மையானவன். தேவர்களின் வேண்டுகோளை ஏற்று சுந்தரன் தேவருலகை காப்பதற்கு தேவலோகம் சென்றான்.

செய்யுள் 66:

சுந்தரச்சோழன் இறந்தப் பிறகு அவரது தேவியான வானவன் மாதேவி உடன் கட்டை ஏறினார்.

செய்யுள் 67-68:

சுந்தரச் சோழனுக்குப் பிறகு அவனது மைந்தன் ஆதித்தன் ஆண்டான். போரில் பாண்டியனை கொன்றான். பாண்டியனின் தலையோடு உயர்ந்த தூணை தன்னநகரில் நிறுவினான். அதன் பிறகு ஆதித்தன் வானுலகை காணும் ஆசையோடு அஸ்த்தமனமானான்..

செய்யுள் - 69:

மக்கள் அனைவரும் அருண்மொழி வர்மனை அரசனாக பதவியேற்க வலியுறுத்தினர். சத்ரிய தர்மத்தின்படி இதை மறுத்த அருண்மொழி தன் சிற்றப்பா உத்தமச்சோழனிடம் நாட்டை ஒப்படைத்தான்.

செய்யுள் 70-84:

திருமாலின் அவதாரமான அருண்மொழியை இளவரசனாக்கி உத்தமசோழன் அரசனனான்.

அவனுக்குப்பிறகு அருண்மொழிவர்மன் முடிசூடினான். இணையற்ற வலிமை கொண்ட அவன் தென் திசையில் தன் படையெடுப்பைத் துவக்கினான். அமரபுயங்கனை வென்ற அவனது படை கடலையே அகழியாக உள்ள உயர்ந்த விழிஞத்தைத் தாக்கி அழித்தது. கப்பல் மூலம் கடலைக் கடந்து இலங்கையை வென்றது. அவனுடைய கடல் போன்ற படையைக் கண்டு மேலைச்சாளுக்கிய மன்னன் சத்யாச்ரயன் புறமுதுகிட்டான். மலை மற்றும் கடல்கள் சூழ்ந்த

கேரள நாட்டை வென்றான். கங்கர், கலிங்கர், ஒட்டர், சௌராஷ்டிரர்கள், சாளுக்கியர்கள் என அனைவரையும் வென்றான்.

செய்யுள் 86-108:

அருண்மொழியின் மகனாக மதுராந்தகன் (இராஜேந்திரன்) பிறந்தான். மன்மதனை போன்ற அழகுடையவன். அவனோடு போரிட்ட அரசர்கள் போரில் இறந்து வானில் ஒளிர்ந்தனர். தனது வலிமை

கொண்ட படைகளோடு திக்கவிஜயம் தொடங்கினான்.

வலிமைமிக்க பாண்டிய நாட்டை வென்றான். பாண்டிய நாட்டை பாதுகாக்க தனது மகனை சோழபாண்டியன் என்று பெயர் சூட்டி அமரவைத்தான்.

பரசுராமனால் பாதுகாக்கப்பட்ட தேசமான கேரளத்தை வென்றான். பின்பு வடதிசை நோக்கிச் சென்றான். மேற்கு திசைக்கு தன் மகன் சோழபாண்டியனை காவல் வைத்துவிட்டு காஞ்சிமாநகரை அடைந்தான்.

சாளுக்கிய அரசனான செயசிம்மனை எதிர்கொண்டான். இரட்டநாட்டின் தலைவனான அவன், இரவிகுல மன்னனின் தாக்குதலை தாக்குப்பிடிக்க முடியாமல் களம்விட்டு அகன்றான். பெறும் செல்வத்தை கைப்பற்றிய மதுராந்தகன் தன் நகரை அடைந்தான்.

செய்யுள் 109-119:

இராஜேந்திரன் தன் நாட்டை கங்கை நீரால் சிறப்பிக்க முடிவு செய்தான். அறமறிந்தோரில் முதல்வனான தன் படைத்தலைவனுக்கு ஆணையிட்டான். அத்தலைவனுடைய பெரும்படை கங்கை ஆற்றுப் பகுதியை நோக்கிச் சென்றது. யானைகளால் அமைக்கப்பட்ட பாலத்தால் கங்கை நதியைக் கடந்தது. இந்திரரதன் என்னும் அரசன் முதலில் வெல்லப்பட்டான். பிறகு இரணசூரன் என்பவரை வென்று, கங்கைப் பகுதியின் அரசனான தர்மபாலனை வென்று தேவநதியான கங்கையை தன் தலைவனுக்கு கொண்டு வந்தான்.. கங்கை நதியோடு வரும் தன் படைத்தளபதியை கோதாவரி நதிக்கரையில் இராஜேந்திர சோழன் வரவேற்றான்.

செய்யுள் 120-124:

இராஜேந்திரன், ஒட்ட அரசனை வென்று அவன் யானைகளை கைப்பற்றினான். தன்னைத் தாக்க வந்த யானையை தன் யானையைக் கொண்டே கொன்றான். தேவலோகம் போன்ற தன் நகருக்கு திரும்பினான். கடலைத் தாண்டி தன் பலம் கொண்டு கடாரத்தை வென்றான். தன்நகரில் சோழகங்கம் என்னும் பெயரில் கங்கை நீரால் ஆன வெற்றித்தூண் ஒன்று நிறுவினான்.

செய்யுள் 125-137:

மதுராந்தகன்முடிகொண்ட சோழபுரத்தில் தங்கியிருந்தபோது, அவரது 6 ம் ஆண்டில்,இராமனின் மகனும், மதுராந்தகனின் முதலமைச்சரும்கருணையின் பிறப்பிடமான சனநாதனை அழைத்து பழையயூனூர் கிராமத்தை திருவலங்காடு மகாதேவர்க்கு தானமாக அளிக்குமாறு ஆணையிட்டான். திருவலங்காடு என்னும்பெயருடைய அக்கிராமத்திற்கு கிழக்கிலும் தெற்கிலும்சிங்களாந்தக சதுர்வேதிமங்கலமும், மேற்கெல்லையாக நித்தியவினோத சதுர்வேதி மங்கலமும் அமைந்தது. உத்தமச்சோழத் தமிழதரையன் என்பவன் திருமுகம் செய்தான். திருக்காலத்திபிச்சன் என்பவன் விண்ணப்பம் செய்தான். சீமான் அரனெறி என்பவன் பிடிசூழ்தல் வேலைகளை செய்தான். சங்கரனின் மகனான நாரயணன் என்னும் கவியால் இச்சாசனம்

செய்யப்பட்டது .

திருமகளின் பிறப்பிடமான இராஜேந்திர சோழன் அனைத்துலகத்தையும் வெல்லட்டும்.

செப்பேட்டின் தமிழ்ப் பகுதி..

தானமாக வழங்கப்பட்ட நிலத்தின் எல்லை, பிடிசூழ்தல், அதை நிர்வகிக்கும் முறை பற்றி எடுத்துரைக்கிறது..

கோனேரிமைகொண்டான் இராஜேந்திரனின் சாசனமாக பதிவுசெய்யப்படுகிறது. கோனேரின்மை

கொண்டான் இராஜேந்திரன் முடிகொண்ட சோழபுரம் (பழயாறை) மாளிகையில் இருந்து வெளியிடப்பட்ட ஆணை.

அவனது 6 ம் ஆட்சியாண்டு 88 ஆம் நாள் முதல் பழையனூர் கிராமத்தை பிரித்து திருவலாங்காடு கோவிலுக்கு தேவதானமாக அளிக்கப்படுகிறது. . இனி இந்த கிராமத்திற்கு

அனைத்து வரிகளிலுமிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. ஏற்கனவே பிரம்மதேயமாக இருந்த இந்நிலத்தை தேவதானமாக மாற்றி வேளான் நிலமாக கோவிலுக்குத்தானமாக வழங்கப்படுகிறது. .

இதன் மூலம் கிடைக்கும் வருவாயான 3238 கலம் 7 குறுணி 5 நாழி நெல் மற்றும் 193 கழஞ்சு 1 மஞ்சாடி தங்கம்.. இவையனைத்தும் திருவாலங்காடு கோவிலுக்கு கிடைக்கச்செய்வதே இத்தானத்தின் நோக்கமாகும்..

அரசனது ஆணையை நிறைவேற்றும் அதிகாரிகள், ஓலை செய்தவர்கள், கையெழுத்திட்டவர்கள் விபரங்கள் என ஒரு பத்திரபதிவு நடந்துள்ளது. தானமாக வழங்கப்பட்ட நிலத்தின் பரப்பளவை ஒரு பெண் யானையை அழைத்துச்சென்று நிலங்கள் அளக்கப்பட்டன.

பெண் யானை நடந்து போன பாதையை துல்லியமாக அதிகாரிகள் அடையாளமிட்டனர். .

இதற்குள் அடங்கிய நஞ்சை மற்றும் புஞ்சை வயல்கள், வீடுகள், தோட்டங்கள், ஆறுகள், வாய்க்கால், நீர் இல்லா தரிசு நிலங்கள், கன்று மேயுமிடம், குளமும் கொட்டகமும், புற்று, காடு, ஓடையும் உடைப்பும், ஆறும் ஆற்று படுகையும், மீன்பயில் பள்ளம்,மேல் நோக்கி வளர்ந்த மரங்கள், கீழ் நோக்கி தோண்டிய கிணறுகள், கிடங்கும் ஏரியும், உடும்பு ஓடி ஆமைகள் ஊர்ந்து செல்லும் பகுதி, இவை அனைத்தும் தேவதானமாக கோவிலுக்கு வழங்கப்பட்டது.

அரசால் விதிக்கப்படும் அனைத்து வரிகளிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டது..

சில நிபந்தனைகளும் உள்ளன.

வேளான் மக்கள் ஏற்கனவே உள்ள கால்வாய் நீரை மட்டும் பயன்படுத்தவேண்டும். தண்ணீரை வீணடித்தல் கூடாது. தென்னை பனை மரங்களில் கள் இறக்ககூடாது. பெரிய மாடிவீடுகளை சுட்ட ஓட்டினால் கட்டலாம்..

சாசனம் நிறைவு செய்யப்பட்டு பல்வேறு அதிகாரிகளும் கிராமசபையினரும், பொதுமக்களும் கையெழுத்திட்டனர்.



மேற்கண்ட சாசனத்தை ஒப்பு நோக்கிய அரசு அதிகாரிகள்.

1.நித்தவினோத வளநாட்டு பாம்புணி கூற்றத்து அரைசூருடையான் ஈராயிரவன் பல்லவயானான உத்தமச்சோழ பல்லவரையன்.

2.உய்யங்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு கேரளாந்தக சருப்பேதி மங்கலத்து கிருஷ்ணன் இராமனான இராஜேந்திர சோழ பிரம்மராயன்.

3.அரையன் சீகண்டனான மீனவன் மூவேந்த வேளான். ஓலையில் எழுதும் பணியை செய்தது உத்தமச்சோழ தமிழதரையன்.

மேலும் சில அதிகாரிகளும் இடம் பெறுகின்றனர்.

இச்செப்பேட்டில் நமக்குக் கிடைக்கும் சில அவசியத் தகவல்கள்.

கரிகால்ச்சோழன், காஞ்சி மாநகருக்கு பொன் வேய்ந்தது. காவிரிக்கு கரைகள் எழுப்பியது.

விஜயாலயன் தஞ்சையை கைப்பற்றி நிசும்பசூதனிக்கு கோவில் எடுத்த செய்தி இச்செப்பேட்டில் மட்டுமே கிடைக்கிறது.

முதலாம் ஆதித்தன் அபராஜித பல்லவனை வென்றது..

ஆதித்த கரிகாலன் பாண்டியன் தலையோடு தூண் ஒன்று நிறுவியது.

அருண்மொழி வர்மன் உத்தமச்சோழனுக்கு விட்டுக்கொடுத்தது..

இராஜராஜன் வெற்றிகள்.

இராஜேந்திரனின் வெற்றிகள்..

கங்கை படையெடுப்பு விபரங்கள்.

சோழகங்கம் ஏரியில் ஜல ஸ்தம்பம் நிறுவியது..

இது போன்ற வரலாற்றுத்தரவுகள் இச்செப்பேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன..

தமிழ்ப் பகுதியில் பிடிசூழ்தல் நிகழ்வுகளிலும் சமூகம் சார்ந்த பல விபரகள் உள்ளது.

இப்பகுதியை மட்டும் ஆய்வு செய்து பல அறிஞர்கள் ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளனர். சுவாரசியமான அவற்றில் ஒன்று.

அன்புடன்..

மா. மாரிராஜன்..

(Reference - சோழர் செப்பேடுகள்.

க. சங்கரநாரயணன்.

தமிழிணையம் தகவலாற்றுப்படை.

இணையப்பக்கம்.

S.i.i.vol 3)

நாட்டு ரக மீன்கள் அறிமுகம்



இராமமூர்த்தி நாகராஜன்
வீரமரசன் பேட்டை
தஞ்சாவூர் மாவட்டம்.



#கருஞ்சேல் கெண்டை

#காக்கா மீன்

#கருங்கெண்டை

#கல்பாசு மீன்

#கருப்பு ரோகு

#Common name:

Kalbasu, Black rohu, Orangefin labeo.

#Labeo calbasu.

நாட்டு ரக மீன்களிலேயே சற்று பெரிய ரக மீன் **கல்பாசு** என பொதுப் பெயரால் அழைக்கப்படும் **கருஞ்சேல் கெண்டை** ஆகும்.

பாண்டிய அரசர்களின் கொடியில் இருக்கும் மீன் இந்த வகையான மீனாக இருக்கலாம். ஏனெனில் #சங்க இலக்கியங்களில் மீன்கள்(1978) என்னும் நூலில் அறிஞர் **பி.எல்.சாமி** நன்னீரில் வாழும் ஒருவகை *labeo* இன மீனையே **பாண்டியர்கள் தங்கள் அடையாளமாகக் கொண்டிருந்தனர்** என்கிறார்.

இதுவும் காவிரி ஆற்று மீனே ஆகும். தற்போது தஞ்சாவூர் மாவட்டத்தின் கரந்தை, அகரப்பேட்டை பகுதிகளில் உள்ள அரசு மீன் குஞ்சு பொரிப்பகங்கள் மூலம் இம்மீன் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு காவேரி மற்றும் அதன் துணை ஆறுகளில் விடப்படுகிறது.

தோற்றம்:







உடல் முழுவதும் அடர் கருப்பு நிறமாக இருக்கிறது. எனினும் மீனின் அடிப்பகுதியில் சற்றே வெளிர் நிறமாக இருக்கிறது. மீன் உயிருடன் இருக்கும் போது அடர் இருக்கிறது, ஆனால் அது இறந்து நேரம் ஆக ஆக வெளுத்து வெண்மை நிறமாக ஆகிக்கொண்டே வருகிறது.



கண்கள் சிவப்பு நிறமாகக் காணப்படுகிறது. தற்போது அதிகமாக வளர்க்கப்படும் மீன் இனமான ரோகு மீன் எனப்படும் இந்தியப் பெருங்கெண்டை இம்மீன் வகையே. எனவேதான் இம்மீன் கருப்பு ரோகு எனவும் அழைக்கப்படுகிறது.

வாயருகே இரண்டு ஜோடி உணர்விழைகள் உண்டு. வாய் அடிப்புறத்தே காணப்படும். உதடு தடித்துக் காணப்படும்.



நீளம் மற்றும் எடை:

நீளம் அதிகபட்சமாக 90 செமீ வரை வளரலாம். எடை அதிகபட்சமாக 1500 கிராம் அதாவது 1.5 கிலோகிராம் வரை இருக்கலாம்.















இவற்றின் உணவு:

இவை ஒரு அனைத்துண்ணி வகை மீன் இனம் ஆகும். நீர்த்தாவரங்கள், தாவர மிதவை உயிரிகள், சிறு பூச்சி, புழுக்கள், ஓடுடைய நத்தை போன்றவை இவற்றின் உணவாகிறது. இவை நீரின் அடியில் வாழும் இயல்பு உடையது.

மருத்துவப் பயன்கள்:

உயிர்ச்சத்துக்களான வைட்டமின்களும், தாது உப்புக்களும் நிரம்பிய மீன்.

இவை இந்தியத் துணைக்கண்டத்தைச் சேர்ந்த பழமையான மீன் இனம் ஆகும். தற்போது தஞ்சாவூர் மாவட்ட நிர்வாகம் இந்த நாட்டு ரக கருஞ்சேல் கெண்டை மீது கவனம் செலுத்தி இதன் குஞ்சுகளை அதிக அளவில் உற்பத்தி செய்து நம் உள்நாட்டு நீர்நிலைகளில் விடும் முயற்சி பாராட்டுக்குரியது.

உணவாகும் மீன் வகைகளில் இம்மீன் முக்கியமானது. மிகவும் சுவையான மீன். மேட்டூர் நீர்த்தேக்கப் பகுதிகளில் இம்மீன் அதிக அளவிலும், அளவில் பெரிதகவும் உள்ளதாக அறிகிறேன். நான் இம்மீனை தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி காவேரி ஆற்றில் கண்டடைந்தேன். இது அளவிலும் எடையிலும் மிகச்சிறிதாகவே இருந்தது.

நன்றி!

-நீந்துவோம்.



பண்டைய இலக்கியங்களில் உடன்கட்டை ஏறும் மரபு

நெடுங்கேணி சானுஜன்
BA(Hons) in History (spl), MAடி
இலங்கை





உடன்கட்டை ஏறல், சஹகமனம் மற்றும் **சதி** என்பது ஒரு இந்து சமயச் சடங்கு ஆகும். கணவனை இழந்த மனைவி தன் கணவரின் சடலம் தீ மூட்டப்படும் போது அந்தத் தீயில் தன்னை அழித்துக் கொள்ளுதல் உடன்கட்டை ஏறுதல் எனப்படுகிறது. சில சமயங்களில் மனைவி தானாக முன்வந்து தீயில் விழ்ந்து அழிந்துக் கொள்ளலாம். பிற நேரங்களில் மற்றவர் அவரை வற்புறுத்தி உடன்கட்டை ஏற வைப்பர்.

உலக வரலாற்றில் சதி உடன்கட்டை ஏறுதல் என்பது ஆர்தர் கோக் பர்னல், ஹென்றி யூன் ஆசிரியன் கருத்துப்படி சதி முறையானது வோல்கா நதிக்கரை ரஷ்யர்களிடமும், தென்கிழக்கு ஐரோப்பிய பழங்குடிகளான *Thracians* இடமும், டோங்கா மற்றும் பிஜி தீவு பழங்குடியினரிடமும் காணப்பட்டது. டியோடோர்ஸ் எனும் வரலாற்று ஆசிரியரின் நூலின்படி கி.மு *01* ஆம் நூற்றாண்டில் அலெக்சாண்டரின் படைவீரன் ஒருவனின் இறப்புக்கு பின்னர் அவனின் இரு மனைவியரில் ஒருத்தி உடன்கட்டை ஏறியதாக குறிப்பு உள்ளது.

உடன்கட்டை ஏறல் என்பது ஒரு இந்து சமயச் சடங்கு ஆகும். ஆயினும் இந்து மூலங்கள் எவற்றிலும் உடன்கட்டை ஏறுதல் வற்புறுத்தப்படவில்லை. சதி, சஹகமனம், உடன் கட்டையேறுதல் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகின்றது. இது சங்ககாலம் தொடக்கம் மற்றும் வடஇந்தியாவின் ஒரு சில இடங்களிலும் இருந்துள்ளது என்பதை புள்ளிவிபரத் தரவுகள் கூறுகின்றன. தம் பதி மீது கொண்ட அன்பும், கைம்மை நோன்பின் (விதவையருக்கான நியம வாழ்வு) கொடுமையுமே பெண்களை உடன்கட்டை ஏறச் செய்தன.

உடன்கட்டை ஏறுதல் தொடர்பாக புராதன இலக்கிய குறிப்புகளும் உள்ளன. 👇 👇

சங்க இலக்கியங்களில் குறுந்தொகை 69, புறநானூறு 62, 78, 246, 247, 256, 280, 373, செய்யுள்களில் கூறப்பட்டுள்ளது. புறநானூறு பாண்டியன் மாதேவி அரசனுடன் அரசியும் உடன்கட்டை ஏறிய குறிப்பு உள்ளது.

தொல்காப்பியத்தில் *"நல்லோள் கணவனொடு நனியழல் புகீஇ"* என குறிப்பு உள்ளது.

மகாபாரதம் மகாராஜர் பண்டுவின் இறப்புக்கு பின்னர், இளைய அரசி மாதுரி உடன்கட்டை ஏறினாள் ஆனால் முதல் அரசி குந்தி அவ்வாறு செய்யவில்லை.

விஷ்ணு புராணம்

"கேளும் மயித்ரேயரே! அங்கு வந்த அர்ஜுனன் கிருஷ்ணனுடைய உடலைத் தேடியெடுத்து இறுதிகிரியைகளை செய்வித்தான். அப்போது ருக்மினி உள்ளிட்ட எட்டு மனைவிகளும் கிருஷ்ணனின் உடலோடு நெருப்பினுள் பிரவேசித்தார்கள். ரேவதியும் நெருப்பினுள் நுழைந்தாள். இச்செய்திகளை உக்கிரசேனனும், வாசுதேவனும், தேவகி, ரோஹினியும் கேட்டவுடனே அக்கினியில் பிரவேசித்துவிட்டார்கள். பின்பு அர்ஜுனன் அனைவருக்கும் ஈமகிரியைகளை நடத்திவிட்டு துவாரகையிலிருந்து வச்சிரனையும் கிருஷ்ணனின் பல மனைவிகளையும் (16000 பேர்), மற்றுமுள்ளவர்களையும் அழைத்துகொண்டு இப்புறம் வந்துவிட்டான்"

(விஷ்ணு புராணம் காண்டம் 5, அத்தியாயம் 38)

ஸ்ரீமத்பாகவதம்:

"கிருஷ்ணனுடைய பிரிவினால் மிகவும் வருந்திய அவனது பெற்றோர் தம் உயிரை அந்த இடத்திலேயே விட்டனர். பரீக்சிதரே! யாதவர்களுடைய மனைவிகள் தம் இறந்த கணவர்களை தழுவிக்கொண்டு நெருப்பினுள் பிரவேசித்தார்கள். பலராமனுடைய மனைவிகள் அவனது உடலை தழுவிக்கொண்டும் வாசுதேவனின் மனைவிகள் அவனுடைய உடலை தழுவிக்கொண்டும் நெருப்பினுள் நுழைந்தார்கள். பிரதியும்னா உள்ளிட்ட ஹரியின் (கிருஷ்ணன்) மறுமகள்களும் தம் கணவர்களின் உடலோடு அக்கினியில் பிரவேசித்தார்கள். மேலும் ருக்மணியும் கிருஷ்ணனை தம் உள்ளத்தில் வைத்திருக்கும்

அவனது மனைவியரும் அவனுடைய நெருப்பினுள் நுழைந்தார்கள்"

(ஸ்ரீமத்பாகவதம்113119-20 காண்டம் 11, அத்தியாயம் 31, வசனம் 19-20)

கூர்ம புராணம்:

"தன் கணவனோடு உடன்கட்டை ஏறுகிற நெருப்பில் நுழைகிற பெண்ணானவள் அவனை மகிழ்ச்சியடையச் செய்கிறாள். அவன் பிராமணனைக் கொன்றிருந்தாலும், நன்றிகெட்டவனாக இருந்தாலும், அல்லது பெரும் பாவங்களால் தீட்டுப்பட்டவனாக இருந்தாலும் சரியே! இதுவே பெண்ணுக்கான மிகப்பெரிய பாவ விமோசனம் (பாவமீட்சி) என கற்றவர்கள் அறிவார்கள்."

(கூர்ம புராணம் 234108-109)

அக்னி புராணம்:

"சுயகட்டுப்பாட்டையும் தவங்களையும் தன் கணவனின் மரணத்திற்கு பின் மேற்கொள்ளும் விதவைப் பெண் சுவர்க்கம் போகிறாள்...இறந்த தன் கணவனோடு உடன்கட்டை ஏறும் விதவை பெண்ணும் சுவர்க்கம் போகிறாள்"

(அக்னி புராணம் 22219-23)

தேவிபாகவதம்:

"...பாண்டுவின் ஈமகிரியைகள் கங்கைக் கரையில் நடப்பதை அறிந்து, மாதுரி தன் இரு மகன்களையும் குந்தியிடம் ஒப்படைத்துவிட்டு சத்யலோகத்திற்கு போவதற்கு தன்கணவனோடு சதியை (உடன்கட்டை ஏறுதல்) மேற்கொண்டாள்"

(தேவிபாகவதம் 2653-71)

பிரம்ம புராணம்:

"கணவனின் பின்னால் உடனடியாக இறப்பது பெண்களின் மிக உயர்ந்த பொறுப்பு ஆகும். இதுவே வேதங்களில் கடமையாக்கப்பட்ட பாதை ஆகும்"

77. "தன் கணவனை பின்தொடரும் பெண்ணானவள், ஒரு ஆணுடைய உடலிலுள்ள உரோமங்களின் எண்ணிக்கைபோல மிக அதிகமான வருடங்கள் சுவர்க்கத்தில் அவனோடு இருப்பாள். அதாவது மூன்றரை கோடி வருடங்கள்"

(பிரம்ம புராணம் 1075,77)

மணிமேகலை என்னும் காப்பியத்தில் கப்பல் விபத்தில் "கணவன் சாதுவன் இறந்ததை" அறிந்தவுடன் ஆதிரை என்பவள் தீப்பாய்ந்து இறக்க முயற்சிப்பதைக் காணலாம். அத்தகைய பெண் எப்படி அதற்குத் தயார் செய்கிறாள் என்பதும் விரிவாகவே உள்ளது. ஆனால் ஆதிரையின் கணவன் உண்மையில் இறக்காததால் ஆதிரை உடலை அக்கினி எரிக்கவில்லை . பின்னர் இருவரும் சேர்ந்து வாழ்ந்தனர் என்று கதை தொடர்ந்தாலும், பௌத்த நூல்களும் இதை ஆதரித்தன என்பதை உணரலாம்.

சோழர் கால இலக்கியங்கள் முக்கிய அரசர்களான இராஜராஜ சோழனின் தாயான வானவன்மாதேவியும் மற்றும் இராஜேந்திர சோழரின் மனைவி வீரமாதேவியும் தங்கள் கணவர்களின் இறப்பினால் முழுமனதுடன் உடன்கட்டை ஏறினார்கள்.

கல்வெட்டில் வானவன் மாதேவியார் உடன்கட்டை ஏறிய செய்தி திருவாலங்காட்டுச் செப்பேட்டில் குறிக்கப்பட்டிருக்கிறது. கொடும்பாளூர்ச் சிற்றரசன் வீரச் சோழ இளங்கோவேள் மனைவி கங்காதேவி உடன்கட்டை ஏறும்முன் ஒரு கோயிலில் நந்தா விளக்கேற்ற நிவந்தங்கள் கொடுத்தாள் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இதன் மூலம் அரம்பகாலத்தில் சதி முறைமையானது முழுக்க முழுக்க பெண்களின் தன்னிச்சையான முடிவாகவே அமைந்தது. பெண்கள் தன் கணவனின் மீது கொண்ட அதீத அன்பின் விளைவால் இத்தகைய பழக்கத்தை கொண்டனர் என்னும் பின் முறைமையானது கௌரவத்தின் சின்னமாக மாற்றப்பட்டு கணவனை இழக்கும் அத்தனை பெண்கள் மீதும் திணிக்கப்பட்டது. சதி முறைமையில் உயிரை துறக்கும் பெண்களின் ஞாபகச் சின்னமாக சதிகள்

நடுவது வழக்கமாய் இருந்தது. சதிகற்கள் ராஜஸ்தானில் மாத்திரம் மிகையாக கிடைக்கப்பட்டுள்ளது. இவை பெரும்பாலும் 11 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியை சேர்ந்தவை.

பிற்காலத்தில் இந்த பழக்கமானது இஸ்லாமிய இராஜபுத்திர போர்களின் போது மட்டுமே கைகொள்ளப்பட்டதே தவிர இந்து இராஜபுத்திர போர்களின் போது நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே ஜஉஹர் (jauhar) முறையானது இஸ்லாமிய ஆக்கிரமிப்பாளர்களிடம் பெண்கள் தங்களின் கற்பை பாதுகாக்க மேற்கொண்ட நடவடிக்கை என தெளிவாக தெரிகிறது. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி இந்தியாவில் நிலைகொண்ட பிறகே உடன்கட்டை ஏறுதலுக்கு எதிரான குரல்கள் ஒலிக்க ஆரம்பித்தன.

வங்காள மாநிலத்தில் சதி முறையால் இறந்தவர்களின் எண்ணிக்கை 1815 ஆம் ஆண்டு 387 இல் இருந்து 1818 ஆம் ஆண்டு 839 ஆக அதிகரித்தது. உடன்கட்டை ஏறும் இந்த மூடப்பழக்கத்தை வேரறுக்க கிறிஸ்தவ மறைபரப்பாளரான வில்லியம் கேரி என்பவரும், பிராமண இந்து சீர்திருத்தவாதி இராஜராய் மோகன் ராய் முதலியோரும் அயராது பாடுபட்டனர். 1870 இல் சதி முறையானது சட்டவிரோதம் என மாநில அளவிலான சட்டத்தை கொண்டுவந்தனர். 1861 இல் விக்டோரியா மகாராணியின் ஆணைப்படி இந்தியா முழுவதும் சதி முறை ஒழிக்கப்பட்டது. இந்தியாவில் சதி முறையானது ஒழிக்கப்பட்டாலும் இலங்கையில் சமகாலத்தில் இருந்துள்ளது. எடுத்துக்காட்டாக வன்னிப்பிராந்தியத்தில் எழுந்த வாய்மொழி கதையான ஆனையடக்கிய அரியாத்தை கதையில் உடன்கட்டை ஏறும் மரபு பற்றி சொல்லப்பட்டுள்ளது.

நெடுங்கேணி சானுஜன்

உசாத்துணைகள்.

1) Tawney, Kathasaritsagara, Vol.1, Terminal Essay on Suttee by Pensel

2) Col. James Tod, Annals and Antiquities of Rajasthan, Motilal Bararasidas, New Delhi, Vol. 1971, p. 737

3) A. S. Atlekar, The Position of Women in Hindu Civilization, Motilal Banarasidas, New Delhi, 1962, p.112.

4) Purananuru 62, 78, 230, 234, 235, 246, 247, 250, 256, 280, 373

5) Toikapiyam-Poruladhikaram-60 Purattitaoyiyal. 79.

6) Manimekalai 16.23-24

7) VN. Datta, Sati Widow Burning in India, Manohar Publishers, New Delhi, 1988.

8) Arvind SharmaRd.), Sati Historical and Phenomenological Essays, Motoilal Banarasidas, New Delhi, 1989.

9) Sakuntala Narasimhan, Sati A Study of Widow Burning in india, Viking New Delhi, 1990

10) கோபுரத் தற்கொலைகள்" புலவர் ஆ. சிவ சுப்பிரமணியன் 2007 மேலது பக்க எண்கள் 21, 40, 50, 52, 53.

11) கல்வெட்டுக்கலை முனைவர் பொ. இராசேந்திரன் முனைவர் சொ. சாந்தலிங்கம் மேலது பக்க எண்கள் 132, 154, 157, 158, 161.



சூறையாடுதல்



பிரியதர்ஷினி D.TEd

நாட்டார் வழக்காற்றியல் ஆர்வலர்



விடுதலை, நம் தேசத்தின் பெருமதங்களும் பெருந்தெய்வங்களின் மீதான தத்துவங்களும் மார்க்கங்களும் பேசுவது விடுதலை ஒன்றைத்தான்.

ஆனால் இங்கே நம் சிறு தெய்வங்களின் மீதானதெல்லாம் கட்டு! தீவிர உயிர்ப்புடன் உடல் அகன்ற உயிரின் ஆற்றல் அவ்வளவு எளிதாய் இடம் அகலாது. அகலாத அந்த உயிர் ஆற்றலை அகல விடாது ஆண்டுகளுக்குக் கடத்தி வந்த முறைமையே குலதெய்வ வழிபாடு.

உயிராற்றலை உயிரூட்டிக் கொண்டே இருக்கும் தகவுகளைச் செய்து கட்டிட்டு வைத்துக் கொள்கிறோம். தேங்காய் உடைத்தலில் இருந்து கிடாய் வெட்டுதல் வரை அனைத்தும் உயிரூட்டும் தகவு. காலத்திற்கும் உயிரூட்டி உயிரூட்டி அவ்வுயிரை விடுதலை அடைய விடாமல் பார்த்துக் கொள்வதே நாட்டார் வழிபாட்டு முறைகள். விடுதலை அடையாத அவ்வுயிர் தான் பல்லாயிரம் உயிர்களின் வாழ்வுகளை பொறுப்பேற்று வழிநடத்துகிறது.

அந்த விளக்கு இன்னும் இன்னும் அடுத்தடுத்த சந்ததிகளை காத்து வழிநடத்த வேண்டி அது அணையா விளக்கு ஆகிட வேண்டும். அந்த விளக்கில் எண்ணெய் திராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு விளக்கிற்கும் ஒவ்வொரு எண்ணெய். சூறையாட்டம் - ஒருவகை எண்ணெய். சினையாட்டுப்பலி.

ஆடு வெட்டுதல் மிகத் தெரிந்த ஒரு வழக்கம். எல்லோரும் அறிந்ததே. அதனை பொதுவாகக் கிடாய் வெட்டுதல் என்றே சொல்லப்படுகிறது. அதாவது ஆண் இன ஆட்டுப் பலி. பலதரப்பட்ட நாட்டார் திருவிழாக்களில் ஆட்டு கிடாய் எருமை கிடாய் வெட்டப்படுவது வழக்கம். எங்கோ சில உக்கிரமான பெண் தெய்வங்களுக்கு மட்டும் பெண் ஆடுகளை பலி இடுகின்றன.ர் அதிலும் சினை ஆடுகளை பலியிடுகின்றனர்.

பெருவாரியாக இல்லாமல் எங்கோ சில இடங்களில் மட்டுமே நடைபெறுகிறது இவ்வழக்கம். பூசணையாளர் பலியிட்ட ஆட்டின் ரத்தம் குடிப்பதும், ரத்தத்தினை உணவில் கலப்பதும், படையல் இட்ட உணவினில் ரத்தத்தினை ஊற்றுவதும் கூட சில இடங்களில் நடைபெறுகிறது.

சூறையாடுதல்:

சாதாரணத்திலிருந்து அசாதாரணம் நோக்கிய ஒரு படிக்கட்டில் ஏறும் நபர்கள் இதில் ஈடுபடுவார்கள். ஏனைய அனைவரும் குறிப்பிட்ட அந்நாளில் ஆழ்நிலை உறக்கத்தால் வீழ்த்தப்படுகிறார்கள். பாரம்பரியமாகவோ பரம்பரை வழியாகவோ சூறையாட்டமோ அல்லது இதுபோன்ற வேறு உக்கிர நிகழ்வுகளில் ஈடுபட முடியாது என்றும் அவர்கள் தங்கள் தெய்வத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவே கருதப்படுகிறார்கள்.



அவர்கள் அன்றி வேறு எவரும் நிகழ்வில் ஈடுபட முடியாது என்றும் கூறப்படுகிறது. நிகழ்வுக்கு முந்தைய மூன்றாம் நாளில் பூசாரிக்கு திடுமென அருள் வந்து உடல் கிடுகிடுத்து ஓடுவார் அவரை தொடர்ந்து மொத்த கூட்டமும் ஓடும் உடல் தளர்ந்தவர்கள் மட்டும் தேங்கிக் கொள்ள ஏனைய எல்லோரும் ஓடுவார்கள். இளந்தாரிகளால் மட்டுமே ஓரளவு அவரைத் தொடர்ந்து ஓட முடியும். இத்தனைக்கும் பூசாரி இளந்தாரியாக இருக்க மாட்டார் ஆனால் அவரது உடலில் திடுமென பெரும் ஆற்றல் கூடிவிடும். அவர் தேடி ஓடுவது சினை ஆற்றுக்காக. ஆம் சினை ஆற்றினை வெட்டிப் பலியிடுவதுவே சூறையாட்டம்.

குறிப்பிட்ட ஒரு சில பெண் தெய்வங்களுக்கு சினை ஆட்டிலும் ரெட்டை குட்டிகள் உடைய சினை ஆட்டினை மட்டுமே பலியிடுவது வழக்கம். ஆட்டின் வயிற்றுக்குள் இருப்பது ஒத்தைக்குட்டியா ரெட்டைக் குட்டிகளா அல்லது அதற்கும் மேலுமா என்று எப்படி கண்டுபிடிப்பது? அதுதான் பூசாரியின் வேலை. அருள் பெற்று உடல் உலுக்கி ஓடும் அந்த பூசாரி மந்தைகளைக் கடந்து இரட்டைக் குட்டிகள் சுமக்கும் அந்த சினையாட்டினைத் தேடி கண்டடைவது தான் சுவாரஸ்யம்! அதனை காணத்தான் அத்தனை கூட்டமும் பின் தொடர்ந்து ஓடுவது.

திடீரென மந்தைக்குள் புகுந்து வரும் பூசாரியையும் அவரை தொடர்ந்து வரும் மக்கள் கூட்டத்தையும் பார்த்து மற்ற ஆடுகள் வெளவெளத்து ஓட, குறிப்பிட்ட அந்த ஆடு மட்டும் கட்டுப்பட்டது போல தன்னிலை மந்தப்பட்டு அங்கேயே நிற்கும். வந்த கூட்டம் கையெடுத்துக் கும்பிட்டு ஆடு நிற்கும் திசை பார்த்து நிலம் விழுந்து வணங்கி அந்த ஆட்டினை மந்தையாளிடம் இருந்து விலைக்கு வாங்கிச் செல்லும்.

பொட்டிட்டு, மாலையிட்டு கோயில் அல்லது தங்கள் தெய்வத்தின் இருப்பிடத்தில் கட்டப்பட்டு அந்த சினையாடு மூன்றாம் நாளில் பலி கொடுக்கப்படும். சில இடங்களில் இப்படி நூதனமாக நடைபெறுகிறது. இரவில் மட்டும் நடைபெறுகிறது. ஆடு வெட்டப்பட்டு பலியிடப்படாமல் நேரடியாக வயிற்றைக் கிழித்து உள்ளிருக்கும் குட்டிகள் வெளியே எடுக்கப்பட்டு படையலிடப்படுகிறது. தாயின் வயிறு கீரி எடுக்கப்படும் அந்த பிறவாக் குட்டிகள் ஒரு மண் கலயத்தில் வைத்து குறிப்பிட்ட ஒரு தோப்பிலோ மரத்தடியிலோ கிணற்று மேட்டிலோ வைக்கப்படுகிறது. நள்ளிரவில் குறிப்பிட்ட சிலர் மட்டுமே சென்று வைத்துவிட்டு 'திரும்பிப் பார்க்காமல்' வந்துவிடுவார்கள். அதிகாலையில் சென்று பார்க்கும் போது கலயம் காலியாக இருக்கும். தங்கள் படையலை தெய்வம் ஏற்றுக் கொண்டதாக அறிவிக்கப்படும்.

சரி - தவறு எல்லாம் தாண்டி இது ஒரு நம்பிக்கை.

"ஸ்டோரி ஆப் பை" π



திரு.கா.பாலகிருஷ்ணன்
முதல்வர் மற்றும் தாளாளர்
பாரதி பதின்ம மேனிலைப் பள்ளி
திருச்சி-21



பள்ளிக்கூட கணிதத்தில் வட்டத்தின் பரப்பு **πr^2** வட்டத்தின் சுற்றளவு **2πr** என்று படிக்கும்போது, இந்த **π** என்றால் என்ன என்ற கேள்வி நம் எல்லோருக்கும் எழும். அப்போதெல்லாம் ஆசிரியர்கள் அது *22/7* **அல்லது** ***3.1415...*** என்று சொல்லி சமாளித்து விடுவார்கள்.

சரி, உண்மையில் **π** என்றால் என்ன?



அதைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் நாம் 2500 ஆண்டுகள் பின்னோக்கி கிரேக்கத்திற்கு செல்ல வேண்டும்.

என்ன...போவோமா...?

கிரேக்கத்தில் பிதாகரஸ் தனது 'பிதாகரஸ் தேற்றத்தை' நிறுவியிருந்த காலகட்டம் அது...

இந்த பிரபஞ்சமே எண்களால் ஆனது என்று பிதாகரஸ்வாதிகள் (பிதாகரஸை பின்பற்றுபவர்கள்) நம்பினர். எண்கள் கச்சிதமானவை என்று அவற்றை முழுவதும் நம்பியிருந்த அவர்கள்,தங்களாலேயே மறுக்கப்பட்டு தூக்கியெறியப்படும் ஒரு எண்ணைப்பற்றி யோசித்திருக்கவே மாட்டார்கள். ஆம், அவர்களை அறியாமலேயே அப்படி ஒரு எண்ணை அவர்கள் அடைந்து விட்டிருந்தனர். **முழுமையற்ற விகிதமுறா எண்களே (Irrational Numbers)** அவை.

என்ன செய்தாலும் முழுமையான எண்களாக *(Whole Numbers)* மாற அவை மறுத்தன. உதாரணமாக $\sqrt{2}$ என்பதன் தசமப் பின்ன சுருக்கம் **1.41421....** என்று முடிவுறா தசம பின்னமாக முடிவற்று தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இதனால் அதிர்ச்சியடைந்திருந்த பிதாகரஸ்வாதிகளுக்கு மேலும் ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அது அவர்கள் பெரிதும் நம்பியிருந்த செங்கோண முக்கோணத்திலும் நடந்துவிட்டது. உதாரணமாக இரண்டு சமமான பக்கங்களைக் கொண்ட செங்கோண முக்கோணத்தின் கர்ணமானது *(Hypotinus)* விகிதமுறா எண்ணாக வந்தது. எத்தனை எண்கள் உண்டோ அத்தனை எண்களையும் துணைக்கு அழைத்தும் பிதாகரஸ்வாதிகளால் முழு எண்களை அடையமுடியவில்லை. இந்த அதிர்ச்சியிலிருந்து மீளாமலேயே பிதாகரஸ் கி.மு500ஆம் ஆண்டு இறந்து போனார்.

பிதாகரஸுக்குப் பிறகு, கிரேக்கர்கள் தங்களை வடிவகணிதத்தோடு (Geometry) சுருக்கிக்கொண்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும். விகிதமுறா எண்களையும் செங்கோண முக்கோணங்களையும் (Right Angled Triangle) முரட்டுத்தனமாக துரத்துவதை நிறுத்திக் கொண்டார்கள். அனைத்து விதத்திலும் திருப்தி தரும் முக்கோணங்கள், சதுரங்கள், வட்டங்கள், பிரமிடுகள் என்றுத் தேடிபோனார்கள். வட்டம் என்பது ஆயிரக்கணக்கான முக்கோணங்களால் ஆனவை எனத்தொடங்கிய அவர்களின் கணித பங்களிப்பு, முக்கோணத்தின் பரப்பு=1/2xஅடிப்பரப்புxஉயரம் என்று ஆரம்பித்து, முக்கோணத்தின் பரப்பிலிருந்து, 1/2xசுற்றளவுxஆரம் என்ற வட்டத்தின் பரப்பிற்கான வாய்ப்பாட்டை அடையுமளவிற்கு தொடர்ந்தது.

இப்போது அவர்களுக்கு மேலும் ஒரு அதிர்ச்சி πன் வடிவில் காத்திருந்தது. வட்டத்தின் சுற்றளவிற்கும் (Perimeter of the Circle) அதன் விட்டத்திற்கும் (Diameter) இடையே உள்ள விகிதத்தைக் (Ratio) காண முற்படும்போதுதான் இந்த π எனும் மாயச்சூழலில் அவர்கள் மாட்டிக்கொண்டனர்.

π என்பது ஒரு முடிவுறா விகிதமுறா எண் *(Irrational Number)* என்று அவர்கள் புரிந்துகொள்ளாமலேயே ஏதோ ஒரு இயந்திரத்தனத்துடன், முரட்டுத்தனமாக அதன் தசம முடிவைத்தேடி தங்கள் நேரத்தை இழந்தனர். (ஆனால் அதை அடையவே முடியாது என்பதை இப்போது நாம் அறிவோம்) πன் மதிப்பை 100,000 தசமஸ்தானம் வரைக்கும் முயன்றும் அவர்கள் அசரவில்லை. ஆனால், இந்தப் π பிரச்சனை அடுத்தடுத்து பல விடைகிடைக்காத பிரச்சனைகளுக்கு அவர்களை இழுத்துச் சென்றது.


வட்டத்துக்குள் அடைபெறும் சதுரத்தைப் பற்றியோசதுரத்திலிருந்து சமமான பரப்புள்ள வட்டத்தை அடைவது பற்றியோ இன்று யாராவது கூறினால் நான்காம் வகுப்பு மாணவன் கூட விழுந்து விழுந்து சிரிப்பான். ஆனால், அவர்கள் அன்று இவற்றை முயன்றிருக்காவிட்டால் வட்டத்தின் சுற்றளவு, பரப்பு தொடர்பான வாய்பாடுகளே நமக்கு கிடைத்திருக்காது.கி ரேக்கர்களால் கடைசிவரை πன் சரியான மதிப்பைக் கண்டுபிடிக்க முடியாமல்போய், இப்பிரச்சனை ரோமானியர்களுக்கும் தொடர்ந்தது.

πன் வரையரை:

"ஒரு வட்டத்தின் சுற்றளவிற்கும் அதன் விட்டத்திற்கும் உள்ள விகிதமே π ஆகும்"

Definition of π:

"The ratio between the Perimeter and the Diameter of a Circle is π"



"πன் மிகச்சரியான தசம மதிப்பைக் காணமுடியாது. தோராய கணக்கீடுகளுக்காகத்தான் *22/7* என்றோ *3.1415..* என்றோ பயன்படுத்துகிறோம்."

தமிழ் நாட்டைச் சேர்ந்த ஓர் இந்தியக் கணித அறிஞர்πன் மதிப்பைத் துல்லியமாகக் கணக்கிட, புதிய முறையில் பல வழிகளை வகுத்தார். அவர்தான் *"கணித மேதை ராமானுஜர்".* எந்த வட்டத்திலும் π என்பது ஒரு நிலை இலக்கம் *(Constant Number).* *1987*இல் πன் மதிப்புத் துள்ளியமாக *100* மில்லியன் தசமத்தில் கணக்கிடப்பட்டது. ஆனால் அதன் அடித்தள அணுகுமுறையாவும் ராமானுஜன் *1915*இல் ஆக்கிய கணிதக் கோட்பாடுகள் மூலம் உருவானவையே. அவர் அப்போது அணுகிய அந்த நுணுக்க முறைகள், இப்போது மின்கணிப் பிணைப்பாடுத் தொடரில் *(Computer Algorithms)* பல கணிதச் சிக்கல்களைத் தீர்க்கப் பயன்படுகின்றன.

πன் தோராய மதிப்பு *22/7* அல்லது *3.14* எனக் குறிப்பிடுகிறோம். இந்த மதிப்பையே வாய்ப்பாடுகளில் நேரிடையாகப் பயன்படுத்தாமல் ஏன் ஒரு கிரேக்க எழுத்தைக் குறியீடாகப் பயன்படுத்த வேண்டும் என்ற கேள்வி எழலாம். அதற்குக் காரணம் உண்டு.

πன் மதிப்பானது *3.14159265358979323846………* என முடிவில்லாமலும் சுழல் தன்மையற்றும் செல்கிறது. இதை அப்படியே கணக்கீடுகளில் பயன்படுத்துவது சாத்தியமற்றது. எனவே தான் இதைச் சுருக்கித் தோராயமாக *22/7* அல்லது *3.14* எனத் தேவைக்கு ஏற்பவும் கணக்கீட்டின் துல்லியத் தன்மைக்கு ஏற்பவும் பயன்படுத்தலாம் எனவும், அதனை π என்ற கிரேக்க எழுத்தைக் கொண்டு குறிக்கலாம் எனவும் கிரேக்க கணிதமேதை **"ஆர்க்கிமிடிஸ்"** பரிந்துரைத்தார். அந்தக் குறியீடான π தான் இன்றளவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

π என்பது கணிதத்தில் ஒரு மாறிலியாக *(Constant)* ஆகப் பயன்படுத்தப்படுவதாலும் இதன் மதிப்பு முடிவிலியாக உள்ளதாலும், சுழல் தன்மையற்று உள்ளதாலும் இது ஒரு விகிதமுறா *(Irrational Number)* எண் என்றழைக்கப்படுகிறது. இதை *1767*இல் லாம்பர்ட் ஒரு விகிதமுறா எண் என்று நிறுவினார். *1882*இல் லிண்டெமன் இதுவும் ஒரு விஞ்சிய எண்ணே *(Transcendental Number)* என்று நிறுவிச் சாதனை புரிந்தார்.

"π" குறித்துப் பல்வேறு செய்திகளைப் பார்ப்போம்:

#கி.பி.*475-550* காலகட்டத்தில் இன்றைய பாட்னாவில் இந்திய கணித மேதை**"ஆரியபட்டர்"** வாழ்ந்தார். அவர் எழுதிய நூலில் இயற்கணித விதிகள், கோணவிதிகள் எனக் கண்டுபிடிப்புகள் தரப்பட்டிருந்தன. இவரின் கூற்றுப்படி *62832* யை *20*ஆயிரத்தால் வகுக்கக் கிடைப்பதே π. அதாவது *3.1416* என்று கூறினார்.

"ஆர்க்கிமிடிஸ்" *3 1/7*க்கும் *3 10/71*க்கும் இடைப்பட்டது தான் π எனக் கூறினார்.

தமிழகக் கணித மேதை “**ராமானுஜர்**” π யின் மதிப்பைக் காணக் கீழ்க்காணும் வாய்பாட்டைப் பயன்படுத்தினார்.

$$\frac{1}{\pi}=2\sqrt{2}\sum_{n=0}^{\infty}\frac{(\frac{1}{4})_n(\frac{1}{2})_n(\frac{3}{4})_n}{(1)_n(1)_n n!}(1103+26390n)(\tfrac{1}{99})^{4n+2}$$

இந்த வாய்பாட்டைப் பயன்படுத்தி இன்று கணினி மூலமாக 17மில்லியன் தசம ஸ்தானங்கள் வரை துல்லியமாகπயின் மதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

"காரியார்" என்ற பழந்தமிழ்ப் புலவர் வட்ட வடிவ நிலத்தின் பரப்பளவை காண, **"கணக்கதிகாரம்"** என்ற தொன்மையான நூலில் செய்யுள் வடிவிலேயே விளக்கியுள்ளார்.

"வட்டத்தரைகொண்டு விட்டத்தரைத் தாக்க சட்டெனத் தோன்றுங் குழி."

விளக்கம் :

இதன்படி,

வட்டத்தரை=அரைச்சுற்றளவு=π*வி/2விட்டத்தரை = அரைவிட்டம் = வி/2

இதன்படி,

வட்டத்தின்பரப்பளவு=πவி2/4குழி என்பது பரப்பைக் குறிக்கும் சொல்.

பலரும் பை-யின் மதிப்பை மனப்பாடம் செய்து ஒப்பிப்பதை ஒரு பொழுதுபோக்காகக் கொண்டிருக்கிறார்கள். பை-யின் மதிப்பை ஒப்பிப்பதில் தற்பொழுதைய கின்னஸ் உலகச் சாதனை ராஜஸ்தானைச் சேர்ந்த **ராஜ்வீர் மீனா** புரிந்துள்ளார். இவர் தமிழகத்தின் வேலூரில் உள்ள வி.ஐ.டி.,பல்கலையில் படிக்கிறார். இவர், 70,000 'பை' மதிப்பு எண்களை தொடர்ச்சியாகக் கூறி, உலக சாதனை படைத்துள்ளார். இச்சாதனை, ஒன்பது மணிநேரம், 27நிமிடங்களில் படைக்கப்பட்டது. கடந்த மார்ச்சில் நிகழ்த்தப்பட்ட இச்சாதனையை அங்கீகரித்து, 'கின்னஸ்' நிறுவனம், 1ம் தேதி, சான்றிதழ் அளித்துள்ளது.

இதற்கு முன், 2005ல் சீனாவைச் சேர்ந்த **லு சாவோ** என்பவர், 67,890, 'பை' மதிப்பு எண்களை, 24மணிநேரங்களில் நினைவுபடுத்திக் கூறி, உலகச் சாதனை படைத்திருந்தார்.

ஒன்பது ஆண்டுகளுக்கு பின் அந்த சாதனையை, ராஜ்வீர் மீனா முறியடித்து உள்ளது குறிப்பிடத்தக்கது.



மார்ச் 14, 1988அன்று கலிபோர்னியாவில் உள்ள அறிவியல் நுட்பசாலையான சான் ஃபிரான்சிஸ்கோவில் முதலில் 3.14 என்ற ‘பை’ யின் எண்மதிப்புடன் பொருந்தும் ஆண்டின் மூன்றாவது மாதமான மார்ச் மாதத்தில் 14ஆம் தேதி பை தினம் முதல் முதலில் கொண்டாடப்பட்டது. அந்தக் கொண்டாட்டத்தின் தொடர்ச்சியாக இவ்வாண்டுவரை பை தினம் பல்வேறு நாடுகளிலும் மார்ச்14 அன்று கொண்டாடப்பட்டு வருகின்றது.



இப்படிப் பலரால் பலவாறு கண்டறியப்பட்ட இந்தπஇன்றும் பல சிக்கலான தொழில்நுட்ப ஆய்வுகளுக்குப்பயன்படுகிறது. இந்தπகுறித்தான ஆய்வுகள் இன்றளவிலும் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன.πன் மதிப்பைப் போல அது சார்ந்த ஆய்வுகளும் முடிவில்லாமல் உள்ளன.

வெள் உவன்:

2πr என்பது கணிததில் வட்டத்தின் சுற்றளவை கண்டுபிடிக்க உதவும் சூத்திரம். இது மெக்காலே கல்வி திட்டத்தின் கீழ் உருவாகிய இன்றைய பள்ளிகளில் மாணவர்களுக்குச் சொல்லி கொடுக்கப்படும் சூத்திரம். இதில் உள்ள πன் மதிப்பு பொதுவாக 3.14159265 என்பதாக பரவலாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால் நம்மால் மறக்கப்பட்ட நமது பாரம்பரிய அறிவில் வட்டத்தின் சுற்றளவை கண்டறிய புழங்கி வந்த ஒரு சூத்திரத்தைப் பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்வோமே!

"விட்டம் ஓர் எழுசெய்து
திகைவர நான்கு சேர்த்து
சட்டென இரட்டி செய்தால்
திகைபடும் சுற்று தானே"

அதாவது வட்டத்தின் விட்டத்தை ஏழு சமபங்குகளாக்கி அதனுடன் நான்கு பங்குகளை சேர்த்து பின் இரண்டால் பெருக்க வருவதே வட்டத்தின் சுற்றளவு என்பதாகும். எவ்வளவு எளிதாக இருக்கிறது நமது பாரம்பரிய முறை. இதை இன்னும் எளிமையாக புரிந்து கொள்வோமா?

7+4x2=22

என்பதாக கொண்டால் விட்டத்தில் 7ல் ஒன்றை 22ஆல் பெருக்கினால் சுற்றளவு கிடைக்கும் என்பதாகவும் கொள்ளலாம். 22/7 என்று சொல்லப்படுகிற π யில் 22ம் 7ம் இருப்பதை எப்படி புரிந்து கொள்வது? தெரியவில்லை. இரண்டு சூத்திரத்தையும் பயன்படுத்தி ஒரு சின்ன கணக்கு போடுவோமா?

முதலில் நமது பாரம்பரிய முறையில் இருக்கிற சூத்திரப்படி 5.25' விட்டமுள்ள வட்டத்தின் சுற்றளவை கண்டுபிடிப்போம். விட்டத்தின் மதிப்பாகிய 5.25ஐ எழு பங்காக்கினால் ஒரு பங்கின் மதிப்பு 0.75 ஆகும். (5.25/7=0.75) பின் அதன் நான்கு பங்கு 3 (0.75X4= 3) ஏழுபங்கான விட்டத்தின் மதிப்பாகிய 5.25உடன் 4 பங்காகிய 3ஐ கூட்டினால் 8.25 (5.25+3=8.25) இதை இரண்டால் பெருக்க (8.25X2) 16.5 ஆகும். எனவே 5.25 அடி விட்டத்தைக் கொண்ட வட்டத்தின் சுற்றளவு நமது பாரம்பரிய சூத்திரத்தின்படி 16.5 ஆகும். இனி பள்ளியில் சொல்லிக் கொடுக்கிற சூத்திரமான πd யின்படி வட்டத்தின் சுற்றளவை பார்ப்போம். அதன்படி 5.25X 3.14159265= 16.4933614 என்பதே வட்டத்தின் சுற்றளவு. நமது பாரம்பரிய முறையில் வந்த சுற்றளவின் மதிப்பு 16.5. பள்ளியில் கற்ற மேற்கத்திய சூத்திரத்தின்படி வந்த மதிப்பு 16.4933614. இரண்டுக்குமான வேறுபாடு 0.0066386 (16.5 - 16.4933614 = 0.0066386) என்பதாகும். துல்லியமான மதிப்பு 16.5. அப்படியென்றால் பள்ளியில் கற்ற சூத்திரத்தின்படி கண்டுபிடிக்கப்பட்ட சுற்றளவில் விடுபட்டு போன மதிப்புக்கு எங்கு போவது?? பள்ளிப்படிப்பில் எல்லாம் தோராயமாக தான் இருக்கிறதோ? இதில் நாம் எடுத்துக் கொண்ட 5.25 என்பது நம்மூரில் காணப்பட்ட சக்கடாவண்டி என்கிற பாரவண்டி சக்கரத்தின் உயரமாகும். சக்கரத்தின் உயரம் நாடெங்கும் ஒரே அளவில் 5.25 அடி என்பதாகத் தரப்படுத்தப்பட்டிருந்தது என்பதை நாம் இங்கே கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

பாரதி யதுகிரி திருமகள்

முன்னுரை:

மாபெரும் காவியக் கவிஞனின் படைப்புகள் உருவாகின்ற தருணம் எவ்வாறு இருக்கும் என்பதை அருகிருந்து கண்டவர்கள் பெரும் பேறு பெற்றவர்கள் ஆவார்கள். அந்த புண்ணியத்தைப் பெற்றவர் ***யதுகிரி*** *அம்மாள் ஆவார். இன்று உலகெங்கும் உள்ள இசையரங்குகளில் பாரதியின் பாடல்களை இசை விற்பன்னர்கள் இசைத்திடக் கேட்டாலும் பாரதியின் குரலில் முதன்முதலாக அவர் பாடலை இசைத்திடும் போது கேட்கும் மங்களப் பேறு பெற்ற நற்செவியுடைய நங்கை* ***யதுகிரி*** *அம்மாள் ஆவார்.*

பாரதியின் புதுச்சேரி வாழ்க்கையில் தவிர்க்க இயலாத நபராக அவரின் பரிபூரண அன்புக்கு பாத்திரமானவராகச் சின்னஞ்சிறு சிறுமி இருந்துள்ளார். தன் வாழ்நாளில் பாரதியைத் தன் தந்தையாக, குருநாதராக, ஆறுதல் தரும் அன்னையாகக் கருதினார். பாடல்கள் படைத்தவுடன் பாரதியார் தேடுகின்ற முதல்தர உன்னத ரசிகையும் இவர்தான். இவரால் தான் பாரதியின் பல்வேறு கவிதைகள் காத்தருளப்பட்டன. இவர் எழுதிய ஒரே நூல் ***"பாரதி சில நினைவுகள்"*** *என்பதாகும்.*



முனைவர் போ. மணிவண்ணன்
தமிழ்த் துறைத் தலைவர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
அவிநாசி 641654



புதுச்சேரியில் பாரதியின் பாடல்கள் படைக்கப்பட்ட கணங்களைப் பதிவு செய்கின்றார். **யதுகிரி** பாரதியின் மூன்றாவது குழந்தையாகவே கருதப்பட்டார். பாரதியும் செல்லம்மாவும் **யதுகிரி**க்குத் தங்கள் வாழ்வில் அளித்திருந்த இடம் மிகப்பெரியது. பாரதியின் பாடல்களைக் குறிப்பேட்டில் எழுதிக் கொள்வது **யதுகிரி**யின் பணியாக இருந்தது. பாரதி மறைவிற்குப் பிறகு 1939 ஆம் ஆண்டில் "பாரதி சில நினைவுகள்" என்னும் நூலை எழுதினார் ஆயினும் எழுதப்பட்டு 15 ஆண்டுகளுக்குப் பிறகே நூல் வெளிவந்தது. இந்த நூல் வெளியாகும் போது **யதுகிரி** அம்மாள் உயிருடன் இல்லை.

இந்தியா:

தமிழக வரலாற்றில் புதுச்சேரி ஈஸ்வரன் தர்மராஜா கோயில் வீதியும் திருவல்லிக்கேணி துளசிங்கப்பெருமாள் தெருவும் அழியாத நினைவுகளைச் சுமந்து கொண்டு காவிய சோகத்தை நமக்குள் கிளறுகின்றன. மகாகவி பாரதியின் வாழ்க்கையில் அவர் புதுச்சேரிக்குக் குடி பெயர்ந்த நிகழ்ச்சி அவர் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். அங்கு தான் அவரது முப்பெரும் பாடல்கள் உள்ளிட்ட பல்வேறு கவிதைகள் உருவாகின. **ஜி.சுப்பிரமணிய** அய்யர் நடத்தி வந்த **சுதேசமித்திரன் பத்திரிக்கையில்** இருந்து விலகிய **பாரதியார் மண்டையம் திருமாலாசாரியார் தொடங்கிய இந்தியா பத்திரிக்கையில்** இணைந்து பணி புரிந்து வந்தார். இந்தியா பத்திரிக்கையில் ஆதியும் அந்தமாக அனைத்து பணிகளும் பாரதியே செய்து வந்தார். எனினும் பத்திரிகையின் ஆசிரியராக **என்.ஸ்ரீநிவாசன்** என்பார் பெயர் தான் குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் வெளியாகிய கட்டுரைகள் ஆங்கிலேயர்களைச் சினத்திற்கு உள்ளாகியது. இந்தியா பத்திரிகையின் ஆசிரியரைக் கைது செய்ய அரசு உத்தரவு பிறப்பித்தது. பாரதி அதிகாரப்பூர்வ ஆசிரியராக இல்லாததால் ஆசிரியர் ஸ்ரீநிவாசன் கைது செய்யப்பட்டார்.

மிக விரைவில் ஆங்கிலேயர்களின் கணை பாரதியை நோக்கி வீசப்படும் என்பதை அறிந்து கொண்ட அவரது நண்பர்கள் சுதந்திரப் பறவையாய் குழந்தை மனதுடன் இருக்கும் பாரதியார் சிறை கொடுமைகளைத் தாங்க இயலாது என்பதால் அவரை வற்புறுத்திப் புதுச்சேரிக்கு அனுப்பி வைக்கின்றார்கள். பாரதியை சிறையில் அடைப்பதால் அவரது எழுத்துக்கள் முடக்கப்படும் என்பதை உணர்ந்து வழக்கறிஞர் **துரைசாமி அய்யர்** பிரெஞ்சு ஆளுகையின் கீழ் உள்ள புதுச்சேரிக்குப் பாரதியை அனுப்பி வைக்கின்றார்

பாரதியார் புதுச்சேரி சென்ற சில நாட்களுக்குப் பிறகு, இந்தியா பத்திரிக்கையின் உரிமையாளர் **ந.திருமாலாசாரியார்** அங்கு வந்து சேர்கிறார். புதுச்சேரியில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து பத்திரிக்கை அலுவலகம் தொடங்கப்படுகிறது. அங்கிருந்து இந்தியா பத்திரிகை புதிய கனலுடன் மீண்டும் புறப்பட்டது.

மண்டையம் ஸ்ரீநிவாசாச்சாரியார்:

மண்டையம் ஐயங்கார் என்பது ஐயங்கார்களின் உட்பிரிவாகும். கர்நாடகாவின்

பல்வேறு பகுதிகளில் குடியேறி வாழ்ந்தவர்கள்ஆவார்கள். இவர்களின் தமிழ் மண்டையம் தமிழ் என்ற வீட்டு வழக்காகக் கருதப்படுகிறது. இராமானுசரையும் மணவாளமாமுனிகளையும் தம் குல குருவாகக்கொண்டவர்கள் ஆவார்கள். மண்டையம் திருமலாச்சாரியார் உரிமையாளராக இருந்து தொடங்கிய பத்திரிக்கை தான் இந்தியா. இந்தியா பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றியவர் திருமலாச்சாரியாரின் உறவினர் மண்டையம் ஸ்ரீநிவாசாரியார் ஆவார். மண்டையம் குடும்பத்தினரின் இந்தியா பத்திரிக்கையில் பணியாற்ற வந்தார் பாரதியார். இந்தியா பத்திரிகையின் குறிக்கோளாக **“சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம்”** எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தியா இதழின் துணை இதழாக **பாலபாரதம்** அல்லது **யங் இந்தியா** இதழ் தொடங்கப்பட்டது.

அதன் ஆசிரியராக பாரதியே பொறுப்பேற்றுக் கொள்கிறார். பாரதி குடியிருந்த ஈஸ்வரன் தர்மராஜா கோயில் வீதியில் தான் குடியிருந்த 22 ஆம் எண் **இல்லத்திற்குப்பாலபாரத மந்திரம்** என்று பெயரிட்டுள்ளார்

யதுகிரி:

பாரதியாரின் குடும்பத்திற்கு உறுதுணையாக மண்டையம் ஸ்ரீநிவாசாரியாரின் குடும்பம் இருந்தது. இரு குடும்பங்களும் புதுவையில் அடைக்கலம் புகுந்து இருந்த வேளையில் இரண்டு குடும்பங்களுக்கு உற்ற துணையாக வ.வே.சு.அய்யரின் குடும்பம் வந்து சேர்ந்தது. வ.வே.சு.அய்யரின் மனைவி திருமதி பாக்கியலட்சுமி அம்மாள் ‘“பாரதியாரின் மனைவி செல்லமாள் எங்களுக்குப்பழக்கமான பிறகு ஸ்ரீநிவாசாச்சாரியார், அய்யர் மூன்று வீட்டுக்காரர்களும் ஒரே குடும்பம் போல பழகினோம் நாங்கள் எல்லோரும் அநேகமாய் தினமும் கடற்கரைக்குப் போவோம் பாரதி அங்கு கடலையும் வானத்தையும் கண்டு தம்மை மறந்து பாட ஆரம்பித்து விடுவார்’” என்று கூறியுள்ளார்

மண்டையம் ஸ்ரீநிவாசாச்சாரியாரின் மூத்த புதல்வி தான் **யதுகிரி** அம்மாள் ஆவார். பாரதியின் பேரன்புக்குரியவராக இவர் இருந்துள்ளார். பாரதியுடன் பழகிய பல்வேறு பெரியோர்களும் தமது நினைவுகளை நூலாக்கம் செய்துள்ளனர். எத்துணை ஆவணங்கள், நூல்கள் வெளிவந்தாலும் யதுகிரி அம்மாளின் “பாரதி சில நினைவுகள்” நூலுக்கு ஈடாகாது. **யதுகிரி** பாரதிக்கும் செல்லம்மாவுக்கு இடையில் பேசும் பொற்சித்திரமாய் பிள்ளைக் கனியமுதாய்த் தித்திருக்கின்றார். யுகக் கவிஞன் ஒருவன் குடும்பத் தலைவனாய் நிகழ்த்திய செயல்களை உடனிருந்து கண்டு எழுதிய இந்நூல் எங்கும் கிட்டாத தேவலோக பாரிஜாதம் ஆகும்.

1912 முதல் 1918 வரையில் நடந்த நிகழ்வுகளைப் ‘“பாரதி சில நினைவுகள்’” என்னும் தனது நூலில் நினைவு கூறுகின்றார். 1954 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்நூலை சென்னை அமுதநிலையம் லிமிடெட் வெளியிட்டுள்ளது. பாரதியின் தோழரும் தன் தந்தையுமாகிய மண்டையம் ஸ்ரீநிவாசாச்சாரியார் அவர்களுக்குத் தன் நூலை காணிக்கையாகப் பணிவுடன் சமர்ப்பித்துள்ளார் .நூல் வெளியாவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு ஆகஸ்டு மாதத்தில் ‘“பாரதி நினைவு தினத்தன்று நூல் வெளிவந்து விடும்’” என்று கூறிவிட்டு நிறைவுடன் அவரது உயிர் பிரிந்துள்ளது.

யதுகிரியின் காணிக்கை:

வாழ்நாள் முழுவதும் தன்னைப் பாரதியின் மகளாக கருதி வாழ்ந்து வந்துள்ளார் **யதுகிரி** அம்மாள் தனது நூலில் அதனை ‘“சுமார் 40 வருடங்களுக்கு முன் புதுச்சேரியில் பாரதியின் சிஷ்யையாகவும் அபிமான புத்திரியாகவும் இருக்கும் பாக்கியம் எனக்கு இருந்தது. இதை சொல்லிக் கொள்வதில் எனக்கு இப்போதும் என்னை அறியாமல் ஒரு பெருமிதம் உண்டாகிறது’” என்று கூறுகின்றார். தற்காலத்தில் எத்தனையோ பெரும் பாடகர்கள் மேடைகளில் பாரதியின் பாடலைப் பாடினாலும் தான் கேட்ட பாரதியின் குரலுக்கு இணையான கம்பீரமும் தன்மயமான உணர்ச்சி பெருக்கம் எவருக்கும் இருக்காது என்கிறார். பாரதியார் **யதுகிரி**யின் வீட்டுக்கு வந்தவுடன்ஒரு செம்பு நிறையத் தண்ணீரும்

வெற்றிலைப் பாக்கும் தவறாமல் தன் காணிக்கையாக ஒவ்வொரு நாளும் அவருக்கு செலுத்தி வந்ததாகக் குறிப்பிடுகிறார். ஆயினும் உண்மையில் பாரதியின் பாடல்கள் எழுந்த கணங்கள் ஒவ்வொன்றையும் சித்திரம் போல எழுதி நூலாக்கம் செய்து உலகிற்கு வழங்கியுள்ளமை தமிழுக்கு காணிக்கையாக நமக்குக் கிடைத்துள்ளது எனலாம்.

பாரதியின் பாடல்கள் பிறந்த கதை:

யதுகிரி அம்மாள் பாரதி சில நினைவுகள் என்ற தனது நூலில் பாரதியின் கவிதைகள் எழுந்த பின்னணியை காட்சிப்படுத்துகிறார். அதுமட்டுமின்றி அந்த பாடலின் மெட்டுகள் எனப்படும் பண்கள் எங்கிருந்து விளைந்தன என்ற செய்தியையும் காட்டுகின்றார். விட்டு விடுதலையாகி என்ற பாடல் பிறந்த கதையைக் கூறும் போது '"இதோ பார் **யதுகிரி** நான் பார்க்கிறேனோ இல்லையோ நீ கட்டாயம் பார்ப்பாய்; இந்த சின்ன சின்ன பாட்டுக்கள் எல்லோராலும் புகழப்படுவதையும் துதிக்கப்படுவதையும் பார்க்கவே போகிறாய் இன்னும் தமிழ் உலகம் கண் திறக்கவில்லை. பிறந்தாலும் குழந்தை பருவத்தில் கவிழ்ந்து, இருக்கிறது. இப்படி சொல்லிவிட்டு '"இந்தா பாட்டு எழுதிய காகிதம்" என்று என்னிடம் காகிதத்தைக் கொடுத்து விட்டு ஒரு முறை பாடியும் காண்பித்தார்" என்று கூறுகின்றார்.

பாரதியின் பாடல் பிறந்தவுடன் கேட்கின்ற பெருமையுடைய இவர் அவரது பாடல்களை மனனம் செய்யும் வழக்கமும் உடையவராவார். ஒருவேளை பாடல் எழுதிய காகிதம் காணமல் போனாலும் **யதுகிரி**யின் மனனத்தில் மீட்டு விடலாம் போலும். பாரதி இல்லத்திற்கு வந்த நெல் குத்தும் பெண்ணின் நெல் குத்துப் பாட்டில் கவனம் செலுத்தி *"மனதில் உறுதி வேண்டும்'"* என்ற பாடலை எழுதியதையும் அதற்கு அந்த பெண்மணி பாதி தன்னை கேலி செய்கிறார் என்று நினைத்துக் கொண்டு கோபித்துக் கொள்ளவும் செல்லமா அவரை சமாதானம் செய்து அனுப்புகின்ற காட்சியையும் பதிவு செய்கின்றார்.

புதுச்சேரியில் வியாழக்கிழமைகளில் கடற்கரையில் உள்ள டூப்ளேக்ஸ் சிலை முன்பு பாண்டு வாத்தியார் வாசிக்கின்ற வழக்கம் இருந்துள்ளது. குழந்தைகள் தங்கம்மா, **யதுகிரி**யும் மனைவி செல்லமா சூழ பாரதி கடற்கரைக்குச் செல்கிறார். தாங்கள் கேட்ட பாண்டு வாத்திய அமைப்பில் நவராத்திரிக்கு முப்பெரும் தேவியர் மேல் பாடல் பாடி தருமாறு மூவரும் கேட்கின்றனர். பாரதியாரும் பிள்ளை பிராயத்திலே என்று தொடங்கும் *'"மூன்று காதல்'"* என்னும் பாடலை **சரஸ்வதி மனோகரி, ஸ்ரீராகம், புன்னாக வராளி** ஆகிய மூன்று ராகங்களில் பாடுகின்றார்.

யதுகிரி அம்மாளின் தம்பி இறந்த போது மண்டையும் ஸ்ரீநிவாசாச்சாரியாரும் அவரது மனைவியும் இடிந்து போய்விடுகிறார்கள். குழந்தை இளந்த துக்கத்திலிருந்து குடும்பத்தை மீட்பதற்குச் செல்லமாகவும் பாரதியும் அரும்பாடு படுகின்றார்கள். அப்போது **'"கேட்பன"** என்ற தலைப்பில் **'நல்லதோர் வீணை செய்தே'** என்ற பாடலைப் பாடி வழிபட்டதாக அவர் பாடியதாக **யதுகிரி**யம்மாள் குறிப்பிடுகின்றார்.

பாஞ்சாலி சபதம்:

ஒரு முறை பாஞ்சாலி சபதம் முதல் பாகத்தை மறுமதிப்பு செய்ய எண்ணுகிறார் பாரயார். மறுபதிப்பு செய்வதற்கு ஒரு பிரதி கூட இல்லாமல் அனைவருக்கும் அள்ளிக் கொடுத்துவிட்டார். ஒரு பிரதியும் மிஞ்சவில்லை. கையெழுத்து மூலமும் அகப்படவில்லை. நேராக யதுகிரியின் வீட்டிற்கு வருகிறார் பாரதியார். சிறுமி யதுரியிடம் பாரதிக்கு பாஞ்சாலி சபதம் நூலைத் தருமாறு வேண்டுகிறார் அந்த நிகழ்வுகளை அவரது சொல்லிலேயே கேட்கலாம்

"பாரதி என்னை கூப்பிட்டார். மாடிக்குப் போனேன்.

யதுகிரி உன்னிடம் பாஞ்சாலி சபதம் இருக்கிறதா? என்று கேட்டார்.

இருக்கிறது. ஆனால் அதை ஒருவருக்கும் தர மாட்டேன். ஆதி பர்வம் புத்தகத்தை யார் வீட்டிலோ வைத்து விட்டீர். திரும்ப வரவே இல்லை இதைத் தரமாட்டேன் என்றேன்.

ஆதி பர்வம் புதிதாகத் தந்து விடுகிறேன். நீ சமய சஞ்சீவி அம்மா. இதைக்காட்டிலும் முதல் தரமான புத்தகம் தருகிறேன். பாஞ்சாலி சபதத்தை கொடு என்று பாரதியார் மனம் குளிரப் பேசினார்.

அலமாரியில் இருந்து புத்தகத்தைக் கொண்டு வந்து கொடுத்தேன். அதன் அட்டை அழுக்காகி விடாமல் மேலே காகிதம் போட்டு ஜாக்கிரதையாக வைத்திருந்ததைக் கண்டு பாரதி வியந்தார்.

இது பாரதிக்கு வேண்டுமாம் கொடு. மறுபடியும் அச்சடித்து புது புத்தகம் வரும்போது அதில் புதிதாக ஒரு பிரதி கொடுத்து விடுவார் என்று என் தகப்பனார் சொன்னார். ஆனால் எனக்குப் புத்தகத்தைக் கொடுக்க மனம் வரவே இல்லை. புது புத்தகம் வேண்டாம் எனக்கு இந்த புத்தகம் தான் வேண்டும் வேலை முடிந்ததும் திருப்பி கொடுத்துவிடுங்கள் என்றேன். சரி என்றார் பாரதி ஆனால் அந்த புத்தகம் திரும்பி வரவே இல்லை .

அதன் முதல் பக்கத்தில் சௌபாக்கியவதி **யதுகிரி** தேவிக்கு அன்புடன் கொடுத்தேன் சி.சுப்பிரமணிய பாரதி என்று அவர் கைப்பட எழுதியிருந்தார் பாரதியார். எந்த புத்தகம் அச்சிடட்டும் அது இங்கிலீஷாக இருந்தாலும் எனக்கு ஒரு பிரதி கொடுத்து விடுவார் .

யதுகிரி அம்மாள் திருமணம்:

பாரதி தன் மகளின் திருமணத்தை நடத்துவது போலவே **யதுகிரி**யின் திருமணத்திற்குப் பணிபுரிந்துள்ளார். **யதுகிரி** அம்மாளின் திருமணக் கச்சேரியும் பாரதியாரால் நிகழ்த்தப் பெற்றுள்ளது.

“என் கல்யாணத்திற்கு முதல் நாள் இரவு 2 மணிக்கு என் தந்தைக்கு மார்வலி அதிகமாகிவிட்டது. இரவெல்லாம் ஏதேதோ வைத்தியங்கள் நடந்தன. காலையில் பாரதியார் அம்பு என்னும் பிரெஞ்சு வைத்தியரையும் கலவை சங்கர செட்டியாரையும் அழைத்து வந்தார். வைத்தியர் ஏதோ மருந்து எழுதி கொடுத்தார் பாரதியாரே கடைக்குச் சென்று வாங்கி வந்தார்.

மாங்கல்ய தாரணம் ஆனவுடன் எல்லோரையும் காட்டிலும் பெரியவரும் மகாவித்வானுமான காரைக்கால் சுவாமியை நமஸ்கரித்தோம். இரண்டாவது பாரதியார் மூன்றாவது ஐயர் பிறகு ஏனைய பந்துகளை நமஸ்கரித்தோம். ஐந்து நாட்களும் கல்யாணத்தில் பாரதியாரும் செல்லமாவும் வஞ்சனை இல்லாமல் ஓடி ஆடி அனைத்தையும் கவனித்தார்கள்.

முதல் நாள் முகூர்த்தம் ஊஞ்சல் இவைகள் கழிந்தது. இரண்டாவது தினம் விலைமதிக்க முடியாத பாரதியாரின் தேசிய கீதம். பாரதியார் தேவர்மிர்தமாகப் பாடினார்”

என்று உரைக்கின்றார்.

நிறைவுரை :

யதுகிரி அம்மாளுக்கு திருமணமாகி இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தன. பின்னர் பிறந்த ஆண் குழந்தை இறந்து விடுகிறது. இது குறித்து வருந்தும் போதெல்லாம் பாரதியார்

. “இரண்டும் பெண் குழந்தைகள். கையில் வந்த பிள்ளைக் குழந்தையோ போய்விட்டது” என்று சலித்துக் கொள்வதைப் பாரதி கேட்டுவிட்டால் போதும்; “பெண் குழந்தைகளுக்குத்தான் வாத்ஸல்யம் அதிகம், **யதுகிரி**. புதுச்சேரியில் விளையாடின நீ என்னை இன்னும் அப்படியே காண்கிறாய். ஆனால் உன் அண்ணன் சாமிக்கு சம்சாரக் கவலை; உன்னைப்போல என்னிடம் பேச ஒழிவதில்லை” என்பார்” என்கிறார். பாரதியார் இறுதி கணங்களிலும் **யதுகிரி**யை மறக்கவில்லை என்பதை பாரதியாரின் மனைவி செல்லம்மாவும் பதிவு செய்கின்றார்.

‘“நான் மைசூரில் இருந்தேன். என் தாயிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில், “பாரதியார் இறந்துவிட்டார்!” என்ற செய்தி இருந்தது. முதலில் நான் நம்பவில்லை. மறுபடியும் என் தகப்பனாரே விவரமாக எழுதியிருந்தார்.

விதி முடிந்துவிட்டது! தமிழ்நாட்டின் அதிருஷ்டம் அவ்வளவுதான்!

1923-ம் வருஷம் நான் மறுபடி சென்னை வந்திருந்தேன். செல்லம்மா, தங்கம்மா, சகுந்தலா

மூவரும் என்னை பார்க்க வந்திருந்தார்கள். அவர்களைக் காண எனக்கு வருத்தமாயிருந்தது.

*செல்லம்மா, "**யதுகிரி**, அவர் பிராணன் போகும்முன்கூட, 'செல்லம்மா, **யதுகிரி** எங்கே இருக்கிறாள்?' என விசாரித்தார். நீ மைசூரில் இருப்பதாகச் சொன்னேன். 'எவ்வளவு குழந்தைகள்?' என்று கேட்டார். 'நம்மைப்போல இரண்டு பெண்கள்' என்றேன். உன்னைப் பார்க்க வேண்டும்போல இருப்பதாக சொல்லிவிட்டு, 'அவள் இப்போது எங்கே வருவாள்? எங்காவது நன்றாக இருக்கட்டும்... காலை சமைத்து விடு, எட்டு மணிக்கெல்லாம் ஆபீசுக்கு போகவேணும்" என்றார். இதெல்லாம் சொன்ன ஒரு மணி நேரத்துக்கெல்லாம் உயிர் போய்விட்டது! என்ன செய்வேன்! அதுவும் ஒரு கூத்தாகிவிட்டது...! என்றார்" என்று தனது நூலில் **யதுகிரி** அம்மாள் குறிப்பிடுகின்றார்.*

யதுகிரி அம்மாளும் தன் வாழ் முழுவதும் பேணி வந்த பாரதி நினைவுகளை நூலாக எழுதி நூல் வெளியீட்டு விழாவிற்கான பணிகளையும் செய்து முடித்தார். மனநிறைவுடன் தனது நூல் வெளிவருகின்ற பாரதி நினைவு நாளுக்கு முன்பாகவே உயிர் துறந்து **பாரதியின் திருவடியில் பாரதி திருமகளாய்த் தஞ்சமடைகிறார்.**

கூவம்

#வாயத் தொறந்தாலே....

#கூவம்

சென்னை எந்த நதிக்கரையில் அமைந்துள்ளது? சிறந்த பொது அறிவு கேள்வி...விடை. கூவம். வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு நதியை நாம் பாழ்படுத்திவிட்டு, சீ..அசிங்கம்னு அதுமேல பழியைப் போட்டுத் தப்பித்துக்கொள்கிறோம். திருவள்ளூர் மாவட்டம் கூவம் கிராமத்தில், திருபுவன மாதேவி பேரேரியிலிருந்து தொடங்கும் நதி, நேப்பியர் பாலத்திற்கு கீழே நுழைந்து புனித ஜார்ஜ் கோட்டைக்கருகில் கடலில் கலக்கிறது. அது யாரு திருபுவனமாதேவின்னா..வங்க கடலை ஏரியாக்கி, காகித கப்பல் மாதிரி ஆயிரக்கணக்கில் கப்பல்கள் விட்டு சீன, கிழக்காசிய நாட்டுப் படைகளுடன், பொம்மைகளோடு விளையாடுவது போன்று விளையாடிய முதலாம் இராஜேந்திரச் சோழனின் மனைவி. கூவம் ஊருக்கு மதுராந்தக நல்லூர் என்று, இராஜேந்திரனின் இயற்பெயரும் ஏரிக்கு அவரின் தேவியின் பெயரும் வழங்கப்பட்டது.

சரி வரலாறுக்கு..சாரி, கதைக்கு வருவோம். பறக்கும் கோட்டைகளை கொண்ட தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் மூன்று அசுர சகோதரர்களை (திரிபுரர்) அழிப்பதற்காக சிவபெருமான் திருவிற்கோலம் எடுத்து திரிபுர அரசர்களின் தேர் ஏர்க்காலை (தேர்க்கால் அச்சு) உடைத்து, வதைத்தாராம். இச்செயலே ஊருக்குப் பெயராக வழங்கப்பட்டது. கூரம், கூவரம் என்றால் தேர்க்கால் அச்சு. இதுவே கூவம் என பிற்காலத்தில் மருவியது. திருஞான சம்பந்தர், இவ்வூரினை, 'கொந்துலா மலர்ப்பொழிற் கூகம் மேவினான்' என்றும், சிவப்பிரகாசர், 'குன்றவிற் கோலத்தெம்மான் கூவரம் கருதியுள்ளம்' எனவும் சிறப்பிக்கின்றனர். அதனால் இறைவன் திருவிற்கோல நாதர், திரிபுராந்தகர் எனவும், இறைவி திரிபுராந்தக தேவி எனவும் வழங்கப்படுகின்றனர்.

பழந்தமிழ் இலக்கியங்களில் இக்கோலம் பற்றிய செய்திகள் உண்டு. பரிபாடலில் இறைவன் முப்புரம் எரித்த விரிசடைக் கடவுள் எனவும், புறநானூற்றில் திரிபுரம் எரித்தவரும் நஞ்சுண்டவரும் சந்திரனைச் சூடியவருமான சிவன் என்றும் கூறப்படுகிறது. கலித்தொகையிலும் சிலப்பதிகாரத்திலும் திரிபுரமெரித்த வரலாறு உள்ளது. தேவாரப் திருப்பதிகங்கள் திரிபுரம் எரித்த செயல், அதற்கான காரணம், வில்,நாண், தேர், தேவர்களுக்கும் அடியவர்களுக்கும் அருளியது பற்றிக் கூறுகின்றன.

சிவபெருமான், கடைச்சங்கத்தில் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் என்ற பெயரில் புலவராய் இருந்து தமிழ் ஆய்ந்ததாக இறையனார் களவியல் உரை கூறுகிறது.

பல்லவ பாண்டிய மன்னர்களின் செப்பேடுகளும் கல்வெட்டுக்களும் (கி.பி.7-9 நூற்றாண்டு) இக்கோலத்தைக் கூறுகின்றன. இரண்டாம் பராந்தகன் "ஆற்றலில் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளான சிவபெருமானுக்குச் சமமானவன்" என்று சாசனச் செய்தி குறிப்பிடுகின்றது.

கலை வடிவங்களில் மாமல்லபுர சிற்பம் வடக்குச்சுவர், கொடித்தூண், காஞ்சி கைலாசநாத கோயில் சிற்பம், வடக்குச்சுவர், சோழர்கால கோயில்களின் தேவகோட்டங்கள், நாயக்கர் காலத்தில் தூண்கள் என்பவற்றில் காணலாம்.



மூசா @ மு.ச.சதீஷ்குமார்
தலைமைச்செயலக அலுவலர்
சென்னை



கொடும்பாளூர் விமானத்தில் திரிபுர தகனக் காட்சி, தஞ்சைக்கோயில் கருவறையின் மேல் நிலையில் திரிபுராந்தகர் புராண வரலாற்றுத் தொடர் சிற்பம், சிதம்பரக் கோயில் கலைக்கோபுரங்களில் திரிபுராந்தகர் தேவியுடன் வில்லேந்தி நிற்கும் கோலம் என பல இடங்களில் இறைவனின் திருவிற்கோலத்தை காணலாம்.

திருநல்லம் கோணேரிராசபுரம் கோயிலுக்கு செம்பியன் மாதேவி திரிபுராந்தகரையும் தேவியையும் செப்புத்திருமேனியாக வழிபாட்டிற்காகத் தானமளித்திருக்கிறார்.

ஆனால், கூவத்தில் மட்டும்தான் இறைவன் மூலவராக காட்சியளிக்கிறார்.

கூவத்து இறைவனை திருஞானசம்பந்தர்,

"உருவின் ஆர்உமையொடு மொன்றி நின்றதோர்

திருவினான் வளர்சடைத் திங்கள் கங்கையான்

வெகுவினார் தொழ வெகுண்டு நோக்கிய

செருவினானுறை விடந்திருவிற் கோலமே"

எனப் பாடுகிறார். சிவபெருமான் திரிபுரத்தை அழித்த செயலை

"நெடுநகர்ப்புரங்கள் மூன்றையும் சிதைத்தவன்"

"...ஒரு சரத்தினால் வெற்றிகொள்

அவுணர்கள் புரங்கள் வெந்தற"

"...புரங்கள் வெந்தறச்

செகுத்தவன் உறைவிடங் திருவிற்கோலமே"

எனப் போற்றியுள்ளார்.

கூவத்தில் சமணமும், புத்தமும் தழைத்தோங்கியிருந்திருக்கிறது.

"சீர்மையில் சமனெடு சீவரக்கையார்

நீர்மையில் உரைகள் கொள்ளாத நேசர்க்குப்

பார்மலி பெருஞ்செல்வம் பரிந்து நல்கிடும்

சீர்மையினானிடந் திருவிற்கோலமே"

அதன் தாக்கத்தினை குறைத்திடவே சம்பந்தர், கூவத்தின் மீது பல பதிகங்களை பாடியுள்ளார் என்பதனை மேற்சொன்ன பதிகம் மூலம் யூகிக்கலாம்.

திருக்கூவப் புராணம், இரட்டைப் புலவர்கள் பாடிய பதிகங்கள் போன்றவையும் கூவத்தின் வரலாற்றை பறைசாற்றுகின்றன.

கோயிலின் கருவறை அர்த்தமண்டபத்துடன் கிழக்கு நோக்கியுள்ளது. கருவறையின் அடித்தளம் சதுரமாகவும், விமானம் தூங்கானை மாட வடிவமைப்பிலும் உள்ளது. கஜபிருஷ்டம் (தூங்கானை மாடம்) னாலே, கோச்செங்கணான் வந்துடறார். அவர் காலத்திலோ, அவருக்கு பின்னோ கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், இரண்டாம் இராஜேந்திரனின் ஐந்தாமாண்டு (கி.பி.1057) கல்வெட்டு, ஜயங்கொண்ட சோழ மண்டலத்தில், சோழ வித்யாதரச் சதுர்வேதி மங்கலம் எனப்படும் கோட்டூர் சபைக்கு சொந்தமான நிலங்களை விற்று,

திருபுவனமாதேவி பேரேரியிலிருந்து வாய்க்கால் வெட்டிய தகவலைச் சொல்லுகிறது. இந்த பெயரைக் கொண்டு கோயில் முதலாம் இராஜேந்திரனால் கற்றளியாக மாற்றப்பட்டிருக்கலாம் என தொல்லியல் துறை கருதுகிறது. சம்பந்தர் கி.பி.ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். அவரால் பாடப்பெற்ற தலமாகிய இது, கோச்செங்கணான் காலத்தில் செங்கல்லால் கட்டப்பட்டு, முதலாம் இராஜேந்திரன் காலத்தில் கற்றளியாக மாற்றப்பட்டிருக்க வேண்டும்.

கோயிலில் மொத்தம் 32 கல்வெட்டுகள் உள்ளன. கி.பி.1065 இல், வீர இராஜேந்திரனின் கல்வெட்டில், மணவிற் கோட்டத்தில் (தற்போதைய மணவூர்) உள்ள மதுராந்தக நல்லூர் (கூவம்) மற்றம் நரசிங்கமங்கலம் ஆகிய இரண்டு கிராம சபைகளுக்கிடையே இருந்த நிலத்தகராறு குறித்துச் சொல்கிறது. கி.பி.1090 இல், முதலாம் குலோத்துங்கன் காலத்தில் இத்தகராறு தீர்த்து வைக்கப்பட்டு, சம்பந்தபட்ட நிலம் கூவத்து இறைவனுக்கு தானமாக வழங்கப்பட்டதை ஒரு கல்வெட்டுச் சொல்கிறது.

திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்கனின் பதினைந்தாம் ஆட்சியாண்டில், மணவிற்கோட்டத்து, பழையனூர் நாட்டில் பழையனூர் ஊரைச் சார்ந்த கச்சிக்கடம்பன் தழுவக் குழைந்தான் உய்யவந்தான் என்னும் செம்பியன் விழுப்பரையன் இக்கோயிலில் விளக்கெரிக்க தானமளித்த கல்வெட்டு ஒன்று உள்ளது.

இரண்டாம் குலோத்துங்கனின் எட்டாம் ஆட்சியாண்டில், இவ்வூருக்கு தியாக சமுத்திர நல்லூர் எனப் பெயர் வழங்கப்பட்டது. தியாக சமுத்திரன், இரண்டாம் குலோத்துங்கனின் தந்தை விக்கிரமச் சோழனின் மற்றொரு பெயராகும். இதே பெயர், பிற்கால தெலுங்கு சோழ அரசன் விஜய கண்ட கோபாலன் காலத்திலும் தொடர்ந்திருக்கிறது. பாண்டியன் மாறவர்மன் குலசேகரன் தன்பெயரால் "குலசேகர சந்தி" என்ற நிவந்தத்தினை வழங்கியுள்ளான். கி.பி.17 ஆம் நூற்றாண்டில், விஜய நகர அரசும், கோல்கொண்டா சுல்தானும் தானங்கள் வழங்கியுள்ளனர்.

கோயிலின் பங்குனி உத்திர விழாவிற்கு, அபிஷேகப்பால் பிஞ்சிவாக்கத்திலிருந்தும், அபிஷேக நீர் பேரம்பாக்கம் குமரஞ்சேரியிலிருந்தும் வருகிறது. ஊரின் உருத்திராட்சை மரம் சிறப்பு வாய்ந்தது.

கூவத்து இறைவன் **தீண்டாத் திருமேனியன்** என்றும் புகழப்படுகிறார். மழை வெள்ளக்காலங்களில், இறைவன் மீது வெண்ணிறப்படர்வு தோன்றுமாம். யுத்த காலங்களில், செந்நிறப் படர்வு தோன்றுமாம். இதனால், சம்பந்தர் இறைவனை **"ஐயன் நல் அதிசயன்"** எனவும், **"வண்ண வண்ணவான்"** எனவும் அழைத்தார்.

இவ்ளோ நேரம், கூவத்தோட கலர் கலரான வரலாற பார்த்தோம். இவ்ளோ சிறப்பு மிக்க கூவத்துக்கு இப்போ ஒரே நிறம், ஒரே மணம்..ப்பா...

-மூசா

மீம்ஸ் வழவில் இலக்கியம்





வே.பார்த்திபன்

ஆற்றுப்படை


திருச்சிராப்பள்ளி

Introvert காதலன்

அது ஒரு அடர்ந்த பாலைநிலம், வைகறை வானில் மின்னும் கோங்க மரப்பூகக்கள் குடைகளைப் போல பூத்துள்ளன. அந்த நிலத்திலே ஒரு காதல் ஜோடி,யாரும் அறியாமல் தனியே நடக்கிறது.

இந்த அத்துவானக் காட்டில், வழிப்போக்கரை மடக்கி பொருளீட்டும் எயினக்குடியினர் வேறு,வில்லும் அம்புமாய் வரும் ஒலி வேறு கேட்கிறது.அக்காதலன் அம்மறக்குடியினரை விரட்டுகிறான். இவ்வளவு வீரம் நிறைந்தவன், அவ்வழியே தன் காதலியின் குடும்பத்தினர் வருகின்றனர் என்று அறிந்தவுடன்,காதலியை தனியே விட்டுவிட்டு காட்டில் பதுங்கிக்கொள்கிறான்.

உன்னைப் பார்த்தாலே நீ,ஓடிய காட்சிதான் நினைவில் வருகிறது. என தன் தோழியின் காதலனை ஏசுகிறாள்,தலைவியின் தோழி.



இடுபிணம் தின்னும் இடாகினி

சிலம்பில் மாலதி எனும் பெண் தனது கணவனின் முதல் மனைவியின் குழந்தை அழுததைக் கண்டு தூக்கி எடுத்து பால் ஊட்டுவாள். அந்தக் குழந்தை அதீத பால்குடித்து மூச்சுத் திணறி இறந்துவிடும். குழந்தையை பெற்றெடுத்த அவளது சக்கலத்தி இவளை ஏசிவாடுவாள்.

''என் பிள்ளையை உயிருடன் கொண்டு வந்து தா'' என் அவள் கூற, மாலதி அக்குழந்தையுடன் சுடுகாட்டுக்கு செல்வாள். அங்கு இடாகினிப் பேய் வந்து அவளிடமிருந்து குழந்தையைப் பறித்துக் கொண்டு போய்விடும். அப்போது பாசண்டச் சாத்தான் எனும் தெய்வம் இடாகினியிடமிருந்து குழந்தையைப் பறித்து அதற்கு உயிருண்டாக்கிக் கொடுத்ததாய் சிலம்பு கூறுகிறது.

மேலும் ,காந்த்திறம் உரைத்த காதையில் இடாகினிப் பேய்

"சுடுகாட்டுக் கோட்டத்துத் தூங்கிருளில் சென்றாங்கு

இடுபிணந் தின்னும் இடாகினிப் பேய்வாங்கி

மடியகத்து இட்டாள் மகவை''

என்ற வரிகளில் இடாகினி என்பவள் ஒரு பிணம் தின்னிப் பேய் என்பது தெளிவாகிறது.

சிலம்பு கூறும், பாசாண்ட சாத்தன் இன்று அய்யனாராகவும், கொற்றவை துர்க்கையாகவும் மாறியிருக்க வாய்ப்பு அதிகம்.

இடாகினிப்பேய் போன்ற இந்த சுடுமண் சிற்பம்,சிலப்பதிகாரத்தில் கண்ணகி நடந்து சென்ற பெருவழிப்பாதை.



பேய் மகளிர்

தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியனின் போர்க்களத்தில், பேய்கள் எவ்வாறு துணங்கை கூத்து ஆடியதென இப்பாடல் கூறுகிறது.

பிணமாகிய களிறுகளைக் குவித்து, அதனின் கொழுப்பை எடுத்துப் பேய்க்கூட்டம் வாயில் அதவியது.

பின்னர் தோளில் கை கோத்துக்கொண்டு ஒன்றன்மேல் ஒன்று விழுந்து தூண் போல் நின்று போர்க்களத்தில் துணங்கைக் கூத்து ஆடியது.புலவரின் கற்பனையோ அல்லது மனப்பிரம்மையோ என்றே இப்பாடலை எண்ணத் தோன்றுகிறது.

அடுத்தடுத்த வரிகள் இன்னும் உச்சமாய் உள்ளது.

துணங்கைக் கூத்து ஆடியது. ஆண்களின் தலைகளைக் கல்லாக வைத்து அடுப்புக் கூட்டியது. அரசர்களின் குருதியை உலைநீராக ஊற்றியது. அரசர்களின் சினத்தைத் தீயாக மூட்டியது. வலிமை மிக்க அவர்களின் கைகளை முறித்துத் துடுப்பாக்கிக்கொண்டு சோற்றைத் துளாவியது. பிணக் கறி போட்டுச் சோறு சமைத்தது.

படத்திலுள்ள இசக்கியின் சிலை கேரளத்திலுள்ள நேப்பியர் மியூசியமில் கண்டது.



பேய் வரும் நேரம்

பேய்கள் நள்ளிரவு வாக்கில் பிறகுதான் உலவத் தொடங்கும். என்பது நம்மிடையே இருக்கும் பொதுவான (மூட) நம்பிக்கை. ஆனால், பேய்கள் மாலையிலேயே தங்கள் உலாவைத் தொடங்கி விடுவதாக இந்த நற்றிணை பாடல் கூறுகிறது.

பாழடைந்த மன்றங்களில் வாழ்கின்ற இப்பேய்கள் வேனிற்காலத்துகாய்ந்த முருங்கைக்காயை போன்ற விரல்களை உடையதாம். பழைமைச் சிறப்புடைய ஊரிடத்தே தெய்வத்தின் முன் மாலை நேரத்தில் பூவும் நெல்லும் தூவி வணங்கி வழிபட்டுப் பலிச்சோறிடுவது ஊரார் பழக்கம். இப்பலிச்சோற்றை உண்பதற்காகத் தாம் உறையும் மன்றத்தை நீங்கிப் புறப்படும் பேய்களிடம் ஊர் மக்களுக்கு அச்சம் இருந்தது. ஆண் அணைப்பில் இருந்தபோதும் பெண்கள் இப்பேய்களுக்கு அஞ்சியதாகப் இப்பாடல் சொல்கிறது.



வில்லாளியின் வெட்கம்

அகநானூற்றின் பாடல்கள் சங்ககால மறவர்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் அன்றைய நிகழ்வுகளை நிறைய எடுத்துக் காட்டுகிறது.


போர்த்தொழிலில் அனுபவ அறிவுடைய மறவர்கள் வில்லேந்தியவர்கள், அவர்கள் வடித்த கூரம்புகளைக் கொண்டவர்கள். அவர்கள் அன்று புரிந்தது கொடுத் தொழில்தான் என்றாலும் கொன்றவர்களைக் கற்பதுக்கையி லிட்டு முடிய கருணையாளர்கள். அவர்களிடம் ஒரு விசித்திரப் பழக்கம் இருந்தது. யாரையேனும் அல்லது எதையேனும் குறிபார்த்து வில்லை வளைத்து அம்பினைத் தொடுத்து எய்யும்போது ஒருவேளை குறித்த இலக்குத் தப்பிவிடுமாயின், அதாவது, குறி தவறிப்போகுமாயின் இம்மறவர்கள் மிக வருந்தி அம்பினைத் தொடுத்த கைவிரலை வாயால் கவ்விக் கொள்வாராம். இது வெட்கத்தால் விளைந்த வேதனைப் பழக்கம் போலும்.இன்றும் வாயில் விரல் வைத்தவாறு வெட்கப் படுபவர்கள் இருக்கத்தானே செய்கிறார்கள்.



ஒவ்வாள் அமலை

போரில் வெற்றி பெற்ற மன்னரும் அவர்தம் வீரர்களும் பட்ட மன்னனின் உடலைச் சூழ நின்று வாளுயர்த்தி வீர முழக்கமிட்டு ஆடும் ஒள்வாள் அமலை குழுஆடலாகும். தொல் காப்பியத்தில் குறிக்கப்படும் புறஞ்சார்ந்த இவ்வாடல் சங்கப் போர்க்களங்களிலும் நிகழ்த்தப்பட்டது.

பறவைக் காவலராக விளங்கிய "பெரும்படை அதிகனை" மிஞிலி வென்று மகிழ்ந் தாடிய ஒள்வாள் அமலையைப் பரணர் குறிப்பிடுகிறார். அறியாமையால் தம் மீது படையெடுத்து வந்த பல்வேறு அரசர்களைப் "பொருது வென்ற ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்" அக்களங் களில் வாளுயர்த்தி அமலையாடியமையை நச்செள்ளையார் குறித்துள்ளார்.



சங்ககால கள்வண்டி

இன்றைய காலகட்டத்தில் மதுவை நாடி நாம் செல்வதுண்டு, ஆனால் சங்ககாலத்தில் உழைப்பாளர்கள் இருக்கும் இடத்திற்கே அவர்கள் உழைத்த களைப்பு தீர கள்வண்டி சென்றதனை பரணர் கூறுகின்றார்.

களிப்பூட்டவும் அவர்கள் இருந்த இடத்திலேயே விரும்பும்போதெல்லாம் கள் அருந்த வாய்ப்பாகக் கள்வண்டி யொன்று சுற்றிச்சுற்றி வந்தது. பயணத்தின்போது வண்டியின் சக்கரங்கள் சேற்றில் சிக்கினால், கரும்புகளைச் சக்கரங்களின் கீழடுக்கில் வண்டியை இயங்கச்செய்து இருந்த இடத்திலேயே விரும்பியபோதெல்லாம் மீண்டும் மீண்டும் கள்ளருந்தி நெல்லரிந்து குவித்தனர் அம்மருதநில மக்கள்.




கதவில் பதித்த பற்கள்

சண்டையிடும்போது ஒரு பேச்சுக்கு "உன் பல்லை உடைக்கிறேன்டா" என நாம் கூக்குரலிடுவோம். ஆனால் உண்மையிலேயே எதிரி மன்னரின் பற்களை பிடுங்கி தன் கோட்டைக் கதவில் அதனை பதித்த இரு சம்பவங்களை சங்க இலக்கியம் கூறுகிறது.

முதலாவதாய், எழினி எனும் குறுந்தலைவன், யானைகளை பிடிக்கும் பெருங்குழிகளை வெட்டி, அவற்றை பிடிக்கும் வேட்டைக்கு சோழன் அழைத்தும் வராமல் போகிறான்.இதனால் கோவம் கொண்ட சோழன் மத்தி எனும் மற்றொரு தலைவனை ஏவி, அவனை போரில் வெல்கிறான். அந்த மத்தியோ, எழினியின் பற்களை மொத்தமாய் பிடுங்கி வெண்மணி எனும் ஊரிலுள்ள வாயிற்கதவில் பதிக்கிறான். அத்துடன் அருகேயுள்ள நீர்த்துறையில் ஒரு நினைவுக்கல்லையும் நாட்டுகிறான். (அந்த கல் இந்நேரம் எங்கு இருக்கிறதோ?)

இதே போன்று நற்றிணையும் ஒரு தகவல் அளிக்கிறது, சேரனான பொறையன் மூவன் எனும் பகையரசனை வென்று,தனது தொண்டி நகரில் உள்ள கோட்டை கதவில் எதிரிகளை எச்சரிக்கும் வண்ணம் மூவனின் பற்களை பதிக்கிறார்.



வாழ்த்துகள் திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம்

திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தின் மற்றொரு முயற்சி திருவண்ணாமலை மாவட்டத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில், கோயில்களில் வரலாற்றுக் தகவல்கள் அடங்கிய பலகைகள் வைக்கப்பட்டு வருகிறது. அந்த வரிசையில் தற்போது திருவண்ணாமலை வேடியப்பன் கோயில், தேவிகாபுரம் திருகாமேஸ்வரர் கோயில், நெடுங்குன்றம் ராமச்சந்திர பெருமாள் கோயில், காஞ்சி கரைகண்டீஸ்வரர் கோயில், வீரசம்பனூர் பச்சையம்மன் கோயில் ஆகிய இடங்களில் தகவல் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

தமிழகமெங்கும் இது போன்ற வரலாற்றுக் குறிப்புகள் கொண்டு தகவல்கள் வைக்கப்படவேண்டும். எல்லா கோயில்களிலும் வெறும் புராணக்கதைகள் கொண்ட தகவல்களே உள்ளன. அரசும் தனியார் அமைப்புகளும் இதுபோல செய்யலாம். கோயிலுக்கு வருபவர்களுக்கு ஒரு கூடுதல் வசதி. வரலாற்றைக் கடத்தும் ஒரு பணியே இது.

மேலும் திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தின் கோரிக்கையின் படி தமிழ்நாடு தொல்லியல் துறை சாத்தனூர் மல்லிகாபுரம் நடுகற்கள் தொகுப்பு உள்ள இடத்தை சீர் செய்து வேலியிட்டு பாதுகாத்துள்ளது. அங்கும் நடுகற்களை பற்றிய வரலாற்றுக் குறிப்பு தகவல் பலகை வைக்கப்பட்டுள்ளது. தமிழக தொல்லியல் துறைக்கு நன்றி.

இந்த தகவல்பலகை வைக்க நிதிஉதவி புரிந்த பேரா.வேல.நெடுஞ்செழியன், சரவணன், தேவிகாபுரம் நெடுங்குன்றம் திருக்கோயில் மன்றம், முத்துவேலன், காஞ்சி அச்சுதன். ஆகியோர்களுக்கு நன்றி.

இன்னும் பரப்புவோம்...

சபா.

#Tchr #HeroStones #InformationBoard #templeoftamilnadu #திருவண்ணாமலைமாவட்டவரலாற்றுஆய்வுநடுவம்







அருள்மிகு இராமச்சந்திர பெருமாள் கோயில்
நெடுங்குன்றம், திருவண்ணாமலை மாவட்டம்.

திருக்கோவில் வரலாறு

திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு வட்டத்தில் அமைந்துள்ள அழகிய நெடுங்குன்றம் கிராமத்தில் வரலாற்றுப் புகழ்மிக்க இருபெரும் கோயில்கள் அமைந்துள்ளன. ஊரின் நடுவே 2 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள அருள்மிகு இராமச்சந்திர பெருமாள்கோயில் கி.பி 15 ஆம் நூற்றாண்டில் விஜயநகர மன்னர்களால் கட்டப்பெற்றது. கல்வெட்டுகளில் இவ்வூர் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து படைவீடு ராஜ்ஜியத்து குழைப்பலூர் நாட்டு முருக மங்கலப்பற்று / பல்குன்றக் கோட்டத்து மேல்குன்ற நாட்டு நெடுங்குன்றம் என்று குறிப்பிடுகிறது. இவ்வூரில் 10 கல்வெட்டுகள் படியெடுக்கப் பட்டுள்ளன. அவற்றில் 2 கல்வெட்டுகள் தீர்காசலேஸ்வரர் கோயிலிலும் 6 கல்வெட்டுகள் இராமச்சந்திர பெருமாள் கோயிலிலும் மற்றவை ஊரின் பிறபகுதியில் உள்ளன. இக்கல்வெட்டுகளில் விஜயநகர காலத்து மன்னர்கள் கிருஷ்ண தேவராயர், அச்சுத தேவ மகாராயர், வேங்கடபதி மகாராயர் காலத்தில் கோயில் வளர்ச்சிக்காகவும் வழிபாட்டிற் காகவும் நிலம், பொன், பணம் தானமாக வழங்கியுள்ள செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் இக்கல்வெட்டுகளில் சோணாத்திரி அய்யன் என்பவர் இவ்வூரில் கோயில் நிர்வாகம் செய்தது பற்றியும் சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. திருவண்ணாமலை ராஜகோபுரம் கட்டிய தஞ்சை நாயக்கர்களில் முதல் மன்னனான செவ்வப்ப நாயக்கரின் பிறந்த இடம் நெடுங்குன்றம் என்றும் வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

இக்கோயில் இரு மதில்சுவர்களும், அவற்றில் கிழக்கு நோக்கி இரு கோபுரங்களும் கொண்டுள்ளது. 105 அடி உயர ஆறு நிலை ராஜகோபுரம், உள்மதிலில் கிளி கோபுரம் எனப்படும் 65 அடி உயர ஐந்து நிலை கோபுரம், இரு மதில் சுவர்களுக்கு உள்ளே இரு அகன்ற திருச்சுற்றுகளும் கருவறையைச் சுற்றி ஒரு குறுகிய திருச்சுற்றுமாக மூன்று திருச்சுற்றுகள் உள்ளன. வெளித் திருச்சுற்றில் தெற்கில் 16 கால் ஊஞ்சல் மண்டபமும், வடக்கே கல்யாண மண்டபமும் உள்ளன. வடமேற்கில் கிழக்கு நோக்கிய செங்கமல வல்லி தாயார் சந்நிதி அமைந்துள்ளது. நடு திருச்சுற்றில் தென்மேற்குப் பகுதியில் சக்கரத்தாழ்வார் சந்நிதியும் வடக்குப் பகுதியில் வைகானசர் சந்நிதியும் உள்ளன. கருவறைக்கு வெளியே இருபுறமும் பெரிய அழகிய துவாரபாலகர்கள் அமைக்கப் பட்டுள்ளது. மூலவரான ஸ்ரீ ராமபிரான் தன் திருக்கரங்களில் கோதண்டம் ஏந்தி, ஆயுதங்கள் ஏதுமின்றி அமர்ந்த நிலையில் வலது கை சின் முத்திரையுடன் திருமார்பில் வைத்தபடி கண்களை மூடிய வண்ணம் யோக நிலையில் காட்சி தருகிறார். எதிரே அனுமன் பிரம்ம சூத்திரம் படித்தபடி காட்சி தருவது இன்னும் சிறப்பானது. கருவறையின் வெளிச்சுவர் தாங்குதள உறுப்புகள், தேவகோட்டம், கோட்டபஞ்சரம், கும்பபஞ்சரம், போன்ற சுவர் உறுப்புகள், கூரை உறுப்புகளுடன் அழகுற அமைந்திருப்பது இக்கோயிலின் தனிச்சிறப்பு ஆகும். தாயார் சந்நிதி முன்மண்டபம், ஊஞ்சல் மண்டபம், கல்யாண மண்டபம், மூலவர் சந்நிதி முன் மண்டபம், நடு திருச்சுற்றின் தென்கிழக்கு பகுதியில் உள்ள மண்டபம் ஆகிய மண்டபங்களின் தூண்களில் அழகிய நுட்பமான புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. இந்த திருக்கோயில் வைகானச ஆகமத்தின் அடிப்படையில் இயங்குகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் அமையப்பெற்ற மிகப்பெரிய பெருமாள் கோயில் என்ற பெருமையும், நெடுங்குன்றநாதர் என்று அழைக்கப்படும் தீர்க்காசலேஸ்வரர் கோயில், விஜயநகர கலைச் சிற்பங்கள், வீரர்கள் நினைவாக வைத்த நடுகற்கள், மண்டபங்களும் ஆங்கிலேயகால பீரங்கிகள் என வரலாற்றுச் சின்னங்கள் ஒருங்கே அமையப்பெற்ற கலைப் பெட்டகமாக நெடுங்குன்றம் திகழ்கிறது.

ஆக்கம்: திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம்

www.yaadhumooray.com 9080480924 tvmchr@gmail.com yaadhumooray

நிதி உதவி:

....

நெடுங்குன்றம்



சோழர் வரலாற்றின் திருப்புமுனைக் கல்வெட்டு
வேடியப்பன் கோவில், திருவண்ணாமலை.

கல்வெட்டுச் செய்தி

சோழஅரசன் முதலாம் பராந்தகனின் 21வது ஆட்சி யாண்டில் (பொ.ஆ.928) எழுதப்பட்டுள்ள கல்வெட்டு வரலாற்றுக்கு பல புதிய தகவல்களைத் தருகிறது. இக்கல்வெட்டில் முதலாம் பராந்தகனுக்கும் அவரின் மனைவியும் வயிரமேக வாணகோ அரையரின் மகளுமான செம்பியன் மாதேவியின் திருவயிற்றில் பிறந்தவர் கண்டராதித்த சோழர் என்று கண்டாரதித்தர் பிறப்பு பற்றி இக்கல்வெட்டு கூறுகிறது. மேலும் இக்கல்வெட்டு அண்ணாமலையாருக்கு மதிய உணவு பூஜை படையலின் போது இருபது காபாலிக துறவிகளுக்கும் உணவு கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காக கண்டராதித்த சோழர் வைச்சபூண்டி என்ற ஊர் முழுவதையும் துறவிகளுக்கு கொடுத்துள்ளார் என்ற செய்தியையும் தெரிவிக்கிறது. இதிலிருந்து சைவத்தின் ஒரு பிரிவாக விளங்கிய காபாலிகம், காளாமுகம் ஆகியவை அண்ணா நாட்டின் ஒரு பிரிவான திருவண்ணாமலையில் முதலாம் பராந்தகன் காலத்தில் அரசு ஆதரவு பெற்று சிறப்புடன் இருந்தது என்பதை அறியலாம். முதலாம் பராந்தகசோழருக்கு இருமுடி சோழன் என்ற பட்டம் இருந்தது என்பதையும் இக்கல்வெட்டால் அறிகிறோம்.

மேலும் முன்புறமுள்ள வேடியப்பன் சிலையின் கீழ் நான்கு வரிக் கல்வெட்டு சிதைந்த நிலையில் உள்ளது. அக்கல்வெட்டு கம்பவர்மனின் இருபதாவது ஆட்சியாண்டில் பொ.ஆ870ல் ஏதோ ஒரு நிகழ்வில் இறந்தவர்க்காக இந்நடுகல் எடுப்பிக்க பட்டதை குறிப்பிடுகிறது. கோயிலுக்கு எதிரே உள்ள சிற்பத்தில் "ஸ்ரீமாஹேஸ்வரநம்பி" என்று எழுதப்பட்டுள்ளது.

கல்வெட்டு வாசகம்

1. ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரை கொ
2. ண்ட கோப்பரகேசரி பந்
3. மற்க்கு யாண்டு 21 ஆவது
4. அண்ணா நா ட்டு திருவண்ணா
5. மலை மஹாதேவர் மத்யான
6. ம் அமிது செயும்போது உ
7. ண்பதாக ஸ்ரீ பராந்தகன் இ
8. ருமுடி சோழன் மஹாதேவி
9. வயிரமேக வாணகோவரை
10. யர் மகளார் செம்பியன் ம
11. ஹாதேவியார் திருவயிற்றில்
12. பிறந்த ஸ்ரீ கண்டராதிச்சன் இ
13. ருபதின்மர் கபாலிகர் நெயிட்டி
14. காக்கும் அவகளுக்கு ஆசார்யபராயுள்
15. ள வல்லக் கொன்றை ஸோமீஸ்வர க
16. ங்காள படாரருடை சிஸ்யர் வாஜஸபதிவ
17. க்காணி படாரர் முதலிகளார் அவருடைய சி
18. ஸ்யப்ரசிஸ்யர் ஆள்வதாக பொன்னும்பு
19. கவுமடங்க குடுத்(வூர்) வைச்ச பூண்டி
20. சந்திராதித்தவல் ஆள்வதாக கபா.
21. லத்தட்டி குடுத்தேன் வல்லகொன்றை
22. ஸ்ரீஸபூடாரர்க்கு இவ்வூர்

கீழுள்ள கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. கம்ப பர்மர்க்கு
3. இருபத்தாவது புதநாட்
4. பாடி நாட்டு

எதிரேயுள்ள கல்வெட்டு

1. ஸ்ரீமாஹேஸ்வர நம்பி

A Historical Herostone and inscription of Tiruvannamalai

The inscription denotes the birth of Kandarathitha Cholan and its mentioned the donation of a village Vaichapoondi for feeding of food to the 20 Kabaligas and saint Guru Kangala Padarar and his Sisyas. This inscription erected on the 21st regnal year of Paranthaga-I in Tiruvannamalai in Anna Nadu which comprising the area of Tiruvannamalai region. In front of this inscription a figurine of a hero who died in a battle in the period of 20th regnal year of Kampa varma pallavan in Pudunatpadi a division of this region. A small sculpture of two human figure found in front of the temple and on this a inscription denotes the name of " Sri Maheswara Nambi" probably the devotees of the temple.

ஆக்கம்: திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம்

www.yaadhumooray.com 9080480924 tvmchr@gmail.com yaadhumooray


நிதி உதவி: முனைவர் வே.நெடுஞ்செழியன்

திருவண்ணாமலை






அருள்மிகு பெரியநாயகி உடனுறை
ஸ்ரீகரைகண்டேஸ்வரர் திருக்கோயில்
திருக்கோவில் வரலாறு


அருள்மிகு திருகாமீஸ்வரர் உடனுறை
கோகிலாம்பாள் திருக்கோயில்
தேவிகாபுரம், திருவண்ணாமலை மாவட்டம்.
திருக்காமீஸ்வரர் கோயில் தொடர்பான தச்சூர் கல்வெட்டு
ஆரணி வட்டம் தச்சூர் கிராமம் செய்யாற்றின் தென்கரையில் உள்ள நிலத்தில் நடப்பட்டுள்ள பலகைக் கல்லில் 15 ஆம் நூற்றாண்டில் (பொது ஆண்டு 1496) விஜயநகர பேரரசின் நரசிம்ம தேவமகாராயர் குமாரர் நரசிம்மராயர் என்கிற திம்மையதேவ மகாராயர் என்ற மன்னனின் ஆட்சிக்காலத்தில் இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது.
இதில் தேவிகாபுரம் மலை அடிவாரத்தில் உள்ள திருக்காமீஸ்வரர் திருக்கோயில் இறைவனைப் பிரதிஷ்டை செய்தவர் செல்லதேவ நாயக்கரின் மகன் கிருதுராகுத்தர் என்றும் இவர் கெங்கரசர் என்ற கன்னடிய பிராமணரை பூசை செய்ய நியமித்து அவரிடம் இறைவன் பெயரால் திருநாமத்துக்காணியாக நிலம் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது.
கல்வெட்டு வாசகம்
ஆக்கம்:
திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம்
www.yaadhumooray.com 9080480924 tvmchr@gmail.com yaadhumooray


சாத்தனூர் நடுகற்கள் - மல்லிகாபுரம்
HEROSTONES OF SATHANUR - MALLIGAPURAM
The Ancient hero stones from 7th to 10th century of Pallava and Chola period are situated at Malligapuram in Sathanur Village, Thandarampattu taluk of Tiruvannamalai district. Out of 5 herostones 3 herostones are engraved in Tamil Vattezhuthu and another one in Tamil Script. All these hero stones are erected in the memory of hero's who fought for safeguard of their cattle from enemies. All these hero stones are very important in history and culture of Tamilnadu as these valuable inscription text and period.
ஆணையர்
தமிழ் நாடு தொல்லியல் துறை
Commissioner
Tamil Nadu State Archaeology Department


அருள்மிகு பச்சையம்மன் சமேத
மன்னார்சாமி திருக்கோயில்
வீரசம்பனூர், திருவண்ணாமலை மாவட்டம்.
கல்வெட்டுச் செய்தி
திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு வட்டம் வீரசம்பனூர் கிராமத்தில் காட்டில் உள்ள பச்சையம்மன் மன்னார்சாமி கோயில் உள் மண்டபத்தின் மேற்பகுதியில் கி.பி. 1829 ஆம் ஆண்டு வெட்டப்பட்ட கல்வெட்டு உள்ளது. இதில் சாலிவாகன சகாப்தம் 1751 விரோதிவருடம், ஆடி மாதம் 31, பொ.ஆ.1829 இல் கீழ்கரிக் காத்தூர் கிராமத்தைச் சேர்ந்த வாணியராமி செட்டியார் குமாரர் ராகவசெட்டியார் என்பவர் வீரசம்பனூர் கிராமத்தில் அகிலாண்ட கோடி பிரம்மாண்டநாயகி பச்சையம்மன் சமேத மன்னார்சாமி கோயிலை கட்டிய செய்தி பொறிக்கப்பட்டுள்ளது.
கல்வெட்டு வாசகம்
திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம்

தொல்லியல் செய்திகள்

கிள்ளனூரில் 13-ஆம் நூற்றாண்டு நடுகல் கல்வெட்டுகள் கண்டெடுப்பு

புதுக்கோட்டை, ஜூன் 17: புதுக்கோட்டை அருகே ஊரணிக் கரையில், 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 3 நடுகல் தூண் கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கிள்ளனூர் கிராமத்தில் உள்ள பூவன் ஊரணிக் கரையில் எழுத்துகள் பொறிக்கப்பட்ட கல் தூண்கள் இருப்பதாக கிள்ளனூரைச் சேர்ந்த கார்த்திகேயன் என்பவர் அளித்த தகவலை அடுத்து தொல்லியல் ஆர்வலர்கள் பேரா. சுப. முத்தழகன், முருகபிரசாத், நாராயண மூர்த்தி, ராகுல் பிரசாத் ஆகியோரைக் கொண்ட குழுவினர் நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வு குறித்து பேராசிரியர் சுப. முத்தழகன் கூறியது:

பூவன் ஊரணிக் கரையில் இருந்த 3 நடுகல் தூண் கல்வெட்டுகள் இருந்தன. அவற்றில் இரு தூண்கள் பாதியாக உடைந்த நிலையிலும், ஒரு தூண் முழுமையாகவும் உள்ளன. இந்த தூண்கள் முதலில் ஊரணி கரையில் நடப்பட்டு இருந்ததாக உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.



கிள்ளனூர் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட நடுகல் தூண் கல்வெட்டுகள்.

உடைந்த தூண்கள் இரண்டும் 2.5 அடி உயரமும், 1 அடி அகலமும் கொண்டதாக உள்ளன. அவற்றில் ஒரு தூணில், 'சோறன் சோழன் ஆன இளஞ்சிங்க பேரையன்' என்றும், மற்றொரு தூணில் 'சோறன் ஆன தெங்குல தரையன்' என்றும் நடுகல் வீரர்களின் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன.

முழுமையாக உள்ள மூன்றாவது தூண் 6 அடி உயரமும் 1 அடி அகலமும் கொண்டதாக உள்ளது. இந்தத் தூணில் 'திருவன் மாயியான வளநாடன்' என்று எழுதப்பட்டுள்ளது.

இந்தக் கல்வெட்டுகளின் எழுத்தமைதியைக் கருத்தில் கொண்டு இவை கிபி 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இந்தத் தூண்களின் தலைப்பகுதி வட்ட வடிவிலும், கழுத்துப் பகுதியில் வரைந்த கோடுகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இதுபோன்ற நடுகல் வீரர்களின் பெயர்கள் பொறித்த நடுகல் தூண்கள் செவ்வலூர், நெருஞ்சிக்குடி, வாழைக்குறிச்சி, கொன்னையூர், திருநல்லூர், சாரணக்குடி கிராமங்களில் கிடைக்கப் பெற்றுள்ளன என்றார் முத்தழகன்.

2 தினமணி மதுரை ★ தேனி/திண்டுக்க

பழனி அருகே 16-ஆம் நூற்றாண்டு கல்வெட்டு, சிற்பங்கள்

பழனி, ஜூன் 20: பழனியை அடுத்த காளிப்பட்டியில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு, சிற்பங்கள் கண்டறியப்பட்டன.

காளிப்பட்டியில் உள்ள செங்குளத்தில் தொல்லியல் ஆய்வாளர் நாராயணமூர்த்தி, குழுவினர் தொல்லியல் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, செங்குளத்தின் வடக்குக் கரையோரம் சிதைந்த நிலையில் மதகு கண்டறியப்பட்டது. அதில் குளத்தில் இருந்து பாசனத்துக்காக தண்ணீரை வெளியேற்றும் குமுழித் தூம்பு ஒன்றும் உடைந்த நிலையில் கண்டறியப்பட்டது. இந்தத் தூணில் கல்வெட்டு பொறிக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து தொல்லியல் ஆய்வாளர் நாராயணமூர்த்தி கூறியதாவது:

இந்தக் கல்வெட்டு கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. பகவக் குடும்பன் என்பவர் ஆடி மாதம் 30-ம் தேதி இந்தக் குளத்தை புதிதாக வெட்டி, மதகு அமைத்துக் கொடுத்த செய்தியை இது தெரிவிக்கிறது. அந்தக் காலத்தில் மிகுந்த செல்வாக்குடனும், ஆளுமையுடனும் பகவக்குடும்பன் விளங்கினார் என்பதை செவி வழிச் செய்தியாக உள்ளூர்வாசிகள் மூலம் அறிய முடிகிறது. இவர் தனது யானை மீது ஊர்வலம் வரும் வழக்கம் உள்ளவர் என்றும் இவரது யானை நீர் அருந்தும் தொட்டி இன்றும் 'யானைத் தொட்டி' என்ற பெயரில் ஊருக்கு அருகே உள்ளது என்பதன் மூலம் அவரது செல்வாக்கை அறிய முடிகிறது.



காளிப்பட்டி செங்குளக்கரையில் கண்டறியப்பட்ட 16-ஆம் நூற்றாண்டு கல்வெட்டு. (வலது) சிற்பங்களுடன் கூடிய கல்வெட்டு.

பகவக் குடும்பனும், அவரது மனைவி மஞ்சம்மாளும் குமுழித் தூணில் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளனர். பகவக் குடும்பனின் இடது கையில் உள்ள நீர்க்கண்டி எனும் தண்டு அவர் ஒரு நீராணிக்கமாக விளங்கினார் என்பதைக் காட்டுகிறது. மஞ்சம்மாளின் சிற்பத்தில் உள்ள அணிகலன்கள் அவர்களது செல்வச் செழிப்பைக் காட்டுகின்றன.

நல்லதங்காள் ஓடையிலிருந்து ஒரு கிளை வாய்க்காலை வெட்டி, அதை அவர் புதிதாக வெட்டிய குளத்தில் பகவக் குடும்பன் இணைத்திருக்கிறார்.

இவ்வாறு சேகரிக்கப்படும் தண்ணீர் குமுழி மதகின் மூலமாக அருகில் உள்ள நிலங்களுக்கு பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். புதிதாக ஒரு குளம் வெட்டி மதகு, குமுழி அமைப்பது மிகுந்த பொருள் செலவை ஏற்படுத்தும் நிலையில், தாம் பெற்ற செல்வத்தை பொது நல நோக்கத்துக்காக அவர் செலவிட்டது இதன்மூலம் தெரியவருகிறது.

உற்பத்தி மற்றும் வடிவ

சதிக்கல் கல்வெட்டு கண்டுபிடிப்பு

விழுப்புரம், ஜூன் 16– ரிஷிவந்தியம் அடுத்த ஆவிரியூரில் கல்வெட்டுடன் கூடிய சதிக்கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ரிஷிவந்தியம் அடுத்த ஆவிரியூர் சிவன் கோவில் பகுதியில், கல்வெட்டுடன் கூடிய சதிக்கல் இருப்பதாக அப்பகுதியினர் கொடுத்த தகவலின்பேரில், விழுப்புரம் அரசு கலைக் கல்லூரி பேராசிரியர் ரமேஷ், தொல்லியல் மாணவர்கள் மோகன்ராஜ், தனித்தமிழன், நேரு உள்ளிட்டோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

அங்கு, சிவன் கோவில் கற்களுடன், 5 அடி உயரம் கொண்ட ஒரு தூணில், சிற்பங்களுடன் கல்வெட்டு செதுக்கப்பட்டிருந்தது. அந்த கல்வெட்டில், பிற்கால பாண்டிய மன்னன் வீரபாண்டியனின் 14வது ஆட்சி ஆண்டில், துலுக்கர் (துருக்கியர்) சண்டையில், அடாதெல்லா ராவுத்தர் என்பவர் இறந்ததையும், இதனால் அவருடைய மனைவி மல்லணதேவி, இவ்வூரில் தீப்பாய்ந்து இறந்தாள் என்பதையும், அந்த சதி கல்வெட்டு குறிப்பிடுகிறது.



ஆவிரியூர் சிவன் கோவில் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுடன் கூடிய சதிக்கல்.

அலாவுதீன் கில்ஜி மன்னரின் படைத்தளபதி மாலிக்காபூர், தமிழ்நாட்டின் மீது படை எடுத்து வந்தபோது, அதனை எதிர்த்து சண்டையிட்டு இவ்வீரன் இறந்துள்ளார் என்று, கல்வெட்டு தகவல் குறிப்பிடுகிறது.

சதிக்கல் வெட்டு தூணின் மேல் பகுதியில் சூரியன், சந்திரன் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளது. இடதுபுறம் அடாதெல்லா ராவுத்தர் நின்ற நிலையில், வலது கையில் நீண்ட வாளை வைத்துள்ளார். வலது புறம் அவரது மனைவி மல்லணதேவி உள்ளார்.

இருவருக்கும் நடுவில், சிவலிங்கம் காணப்படுகிறது. இத்தூணில் நடுகல்லும், சதிக்கல்லும் சேர்ந்தவாறு உள்ளதாக, பேராசிரியர் ரமேஷ் தெரிவித்தார்.

இந்து தமிழ் திசை

தமிழால் இணைவோம்

ராமநாதபுரம் பதிப்பு • சனி, ஜூன் 22, 2024

துரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி •

வானிலை ஆய்வு மையமாக இருந்த பெருங்கற்கால நினைவு சின்னங்கள்

லண்டன் – காளையார்கோவிலை ஒப்பீடு செய்யும் ஆய்வாளர்







தொல்லியல் ஆய்வாளர்

ஆயக்குடி அருகே

கி.பி. 16-ம் நூற்றாண்டு கல்வெட்டு கண்டுபிடிப்பு

ஆயக்குடி, ஜூன்.21-

ஆயக்குடி அருகே காளிப்பட்டியில் செங்குளம் உள்ளது. இந்த குளத்தின் மதகு பகுதியில், குமுழி தூணில் பழமையான கல்வெட்டு மற்றும் சிற்பங்கள் 2 உள்ளன. இதுபற்றி பழனியை சேர்ந்த தொல்லியல் ஆய்வாளர் நாராயணமூர்த்தி ஆய்வு செய்தார். இதுபற்றி அவர் கூறியதாவது:-



காளிப்பட்டி செங்குளத்தின் வடக்கு பகுதி கரையோரம் மதகில் இருந்து நீர் வெளியேறும் பகுதியான குமுழித்தூணில் கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டு உள்ளது. அது கி.பி.16-ம் நூற்றாண்டு காலத்தை சேர்ந்தது. இது 11 வரிகளில் எழுதப்பட்டு இருந்தது. இந்த கல்வெட்டில் பகவக்குடும்பன் என்பவர், ஆடி மாதம் 30-ந்தேதி புதிதாக குளம் வெட்டி மதகு அமைத்து கொடுத்தார் என்ற செய்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கல்வெட்டு அருகில் பகவக்குடும்பன், அவரது மனைவி மஞ்சம்மாள் ஆகியோரின் உருவங்களும் சிற்பமாக உள்ளது. இந்த பகவக்குடும்பன் யானை மீது ஊர்வலமாக வரும் வழக்கம் உள்ளவர் என்றும், இவரது யானை நீர் அருந்த தொட்டி கட்டி உள்ளதாகவும் செவிவழி செய்திகள் உள்ளன. இந்த செங்குளத்துக்கு நீராதாரமாக நல்லதங்காள் ஓடை உள்ளது. இந்த ஓடையில் இருந்து கிளை வாய்க்கால் வெட்டி அதை குளத்துடன் இணைத்து இருக்கிறார். அவ்வாறு சேமித்த நீரை பயன்படுத்தி பாசன வசதி ஏற்படுத்தி கொடுத்திருக்கிறார் என்பதை அறிய முடிகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

அருணை தமிழ்

ARUNAI THAMIZH

தமிழர்களின் அடையாளம்

Volume-1 Issue: 143 24-06-2024 Monday Pages:6 Price: Rs.6/-

திருப்பத்தூர் அருகே 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட தானக் கல்வெட்டுக் கண்டெடுப்பு





கங்கை கொண்ட சோழபுரத்தில் காணாமல் போன பெரு வழிகள்

வரலாற்றுத் தடம்

கங்கை கொண்ட சோழபுரம், இராஜேந்திர சோழன் உருவாக்கிய தலைநகரம். கங்கையின் வெற்றிக்குப் பிறகு உருவாக்கிய நகரம்.

அங்கு இரண்டு கோட்டை மதில்கள் இருந்துள்ளன. ஒன்றின் பெயர் இராஜேந்திர சோழன் மதில். இன்னொன்றின் பெயர் உள்படை வீட்டு மதில். வீர ராஜேந்திரன் (ராஜேந்திரனின் மகன்களில் ஒருவர்) காலத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டில், இங்குள்ள அரண்மையின் பெயர் 'சோழ கேரளன் திருமாளிகை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இராஜேந்திர சோழனின் பெயர்களில் ஒன்றுதான் சோழ கேரளன்.

ஆதிபூமி, கிழைச் சோபானம், மாவலி வானாதிராஜன் பள்ளிக்கட்டில் என அரண்மனைப் பகுதிகளுக்குப் பெயராக இருந்துள்ளது. முதல் குலோத்துங்கன் கல்வெட்டு இங்குள்ள மாளிகையின் பெயரை 'கங்கைகொண்ட சோழன்' மாளிகை என்று குறிப்பிடுகிறது.

கங்கை கொண்ட சோழபுரத்திற்கு வருவதற்கு இராஜராஜன் பெருவழி, இராஜேந்திர சோழன் பெருவழி, விளாங்குடையான் பெருவழி, கூழை யானை போன பெருவழி போன்ற வழிகள் இருந்துள்ளன. வேம்பு குடி வாயில் என்று ஒரு வாயிலுக்குப் பெயர் இருந்துள்ளது.

குலோத்துங்க சோழன் காலத்தில், மதில் சுவர் ஒன்றும், கோட்டைச் சுவர் ஒன்றும் கட்டப்பட்டுள்ளன. அதற்குக் குலோத்துங்க சோழன் திருமதில் என்ற பெயர் இருந்துள்ளது.

இராஜேந்திர சோழன் காலத்தில், மும்முடி சோழப் பெருந்தெரு, முடிகொண்ட சோழன் மாளிகை ஆகிய வணிகத் தலங்கள் இருந்துள்ளன.


மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில், தரணி சிந்தாமணி பெருந்தெரு என்ற வணிகப் பகுதி இருந்துள்ளதைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

இராஜேந்திர சோழன் கங்கைப் பகுதிகளை வென்ற பிறகு, அந்த நாட்டு அரசர்களின் தலையில் கங்கை நீரைக் குடங்களில் கொண்டு வந்தார்.

கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அருகில் ஓர் ஏரியை உருவாக்கி அதற்குச் சோழ கங்கை என்று பெயரிட்டார். கங்கை நீரை அந்த ஏரியில் ஊற்றினார். இன்று அந்த ஏரி, பொன்னேரி என்று அழைக்கப்படுகிறது.

இவ்வளவு சிறப்புடன் விளங்கிய கங்கைகொண்ட சோழபுரம், பதின்மூன்றாம் நூற்றாண்டில் பாண்டியர், மாலிக்காபூர் படையெடுப்புகளினால் முற்றிலும் அழிந்தது.

அப்பகுதி மக்கள், கோட்டைச் சுவர்களின் கற்களைப் பெயர்த்தெடுத்துத் தங்கள் சொந்தப் பயன்பாட்டிற்கு எடுத்துச் சென்றதாக, தமிழக அரசு தொல்லியல் துறை வெளியிட்டுள்ள 'கங்கைகொண்ட சோழபுரம் வரலாறு' என்னும் நூல் குறிப்பிடுகிறது.



16 • Dinakaran • Madurai • 25.6.2024 தினகரன் ராமநாத

5 ஆயிரம் ஆண்டுக்கு முன்பே நாம் இருவர்; நமக்கு இருவர்!



ஆரணியில் பராமரிப்பின்றி அழியும் அரண்மனை

புதுப்பித்து பாரம்பரிய சின்னமாக்குமா அரசு?



2

தர்மபுரி மாவட்ட பெரும்பாலை அகழாய்வில் ஆய்வாளர்களை கவர்ந்த பானை குறியீடுகள்



கீழடி 10ம் கட்ட அகழாய்வில் கிடைத்த 'தமிழி' பானை ஓடு

கீழடி, ஜூன் 27–

கீழடியில் 10ம் கட்ட அகழாய்வு கடந்த 18ம் தேதி துவங்கியது. தொல்லியல் துறை கீழடி அகழாய்வு தள இயக்குனர் ரமேஷ், இணை இயக்குனர் அஜய் தலைமையில் 13 தொழிலாளர்கள் அகழாய்வு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுவரை பாசி மற்றும் கண்ணாடி மணிகள் உள்ளிட்ட 27 பொருட்கள் கிடைத்த நிலையில், தற்போது 'தா' என்ற 'தமிழி' எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக இன்னும் எழுத்துகள் இருக்கும் என நம்பப்படுகிறது. ஏற்கனவே ஐந்தாம் கட்ட அகழாய்வின் போது, அதிகபட்சமாக 13 எழுத்துகளை கொண்ட பானை ஓடு கண்டெடுக்கப்பட்ட நிலையில், மீண்டும் தமிழி எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடு கண்டறியப்பட்டுள்ளது.

■ கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடு.



கல்வெட்டு நூலாக்கம் ரூ.3.50 கோடியில் திட்டம்

சென்னை, ஜூன் 27–

சட்டசபையில் அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்ட அறிவிப்புகள்:

- தமிழகத்தில் உள்ள கல்வெட்டுகளை படித்து நூலாக கொண்டு வரும் சிறப்பு திட்டம், 3.50 கோடி ரூபாயில் மேற்கொள்ளப்படும்
- புதிதாக அறிவிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட சின்னங்கள், 4 கோடி ரூபாயில் மேம்படுத்தப்படும்
- மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையில், 2.80 கோடி ரூபாயில் மின்னொளியுடன் கூடிய சிற்ப காட்சிக் கூடம் அமைக்கப்படும்
- தஞ்சை மாவட்டத்தில் உள்ள மனோரா நினைவுச் சின்னம், 2.75 கோடியில் மேம்படுத்தப்படும்
- தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னங்களை பராமரிக்க, ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் நிதி 2 கோடி ரூபாயிலிருந்து, 3 கோடி ரூபாயாக உயர்த்தப்படும்
- ராமநாதபுரம் மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட தொல் பொருட்களைக் கொண்டு அருங்காட்சியகம் அமைக்கப்படும்
- செங்கல்பட்டு விராலூர், ஒணம்பாக்கம் சமண சிற்பங்கள், கோவை திருமலையம்பாளையம் பாறை ஓவியங்கள், தஞ்சை ஒரத்தநாடு முக்தாம்பாள் சத்திரம், திருப்பூர் தாராபுரம் கல் இசை மண்டபம். ஊத்துக்குளி நந்தவனக் கிணறு, ராணிப்பேட்டை ராஜா ராணி மண்டபம், தர்மபுரி ஆதனூர் கல் வட்டம், ராமநாதபுரம் ராசசிங்கமங்கலம் ஆறுமுகம் கோட்டை, நெல்லை பணகுடி கல் மண்டபம் ஆகியவை பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்படும்.



அரிய நாணயங்களை பாதுகாப்பது குறித்து மாணவர்களுக்கு பயிற்சி



சுடுமண் பெண் தலை பொம்மை விஜயகரிசல்குளத்தில் கண்டெடுப்பு

சிவகாசி, ஜூன் 25–

விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே வெம்பக்கோட்டை விஜய கரிசல்குளம் 3ம் கட்ட அகழாய்வில், மூன்றாம் கட்ட அகழாய்வில் முதற்கட்டமாக மூன்று பள்ளங்கள் தோண்டப்பட்டன.

இதுவரை உடைந்த நிலையில் சுடுமண் உருவ பொம்மை, கண்ணாடி மணிகள் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று அகழாய்வில், சுடுமண்ணால் ஆன பெண் தலை பொம்மை கண்டெடுக்கப்பட்டது.

அமைச்சர் தங்கம் தென்னரசு, 'அந்த சுடுமண் பெண் தலை பொம்மை 30.7 மி.மீ., உயரம், 25.6 மி.மீ., அகலமும் கொண்டதாக இருந்தது' என, எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அகழாய்வு இயக்குனர் பாஸ்கர் பொன்னுச்சாமி, "ஏற்கனவே நடந்த இரண்டு கட்ட அகழாய்வுகளில் சிறிய அளவிலான சுடுமண் உருவ பொம்மை கண்டறியப்பட்டது.

"தற்போது பெரிய உருவ பொம்மை கண்டறியப்பட்டுள்ளது. இந்த உருவ பொம்மை குந்தம் என்ற சிகை அலங்காரத்தில் காணப்படுகிறது. முன்னோர்கள் கலைக்கு மட்டும் அல்லாமல் சிகைக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் என இதிலிருந்து தெரிகிறது," என்றார்.

அதுபோல, சிவகங்கை மாவட்டம், கீழடி 10ம் கட்ட அகழாய்வில் பாசி, கண்ணாடி மணிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனவே, இப்பகுதியில் குடியிருப்பு இருந்திருக்க வாய்ப்புள்ளது என, கீழடி அகழாய்வு தள இயக்குனர் ரமேஷ், இணை இயக்குனர் அஜய் கூறினர்.

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அருகே சென்னானூர் மலையடிவாரம் அருகே நேற்று 53 செ.மீ., ஆழ அகழாய்வு குழியில், உடைந்த நிலையில் கற்காலக் கருவி கிடைத்துள்ளது. அது, விவசாயக் கருவியாக இருக்கக் கூடும் என கூறப்படுகிறது.

■ விஜயகரிசல்குளம் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட சுடுமண்ணால் ஆன பெண் தலைப்பகுதி.



பழங்கால விஷ்ணு சிலை அகழாய்வில் கண்டுபிடிப்பு

www.aatrupadai.com

தொல்லியல் ஆர்வலரும், சிறந்த புகைப்படக் கலைஞரும்,
உலக வரலாற்றினை எளிய முறையில் அனைவருக்கும்
சென்றடையும் வண்ணம் எடுத்துக் கூறிய "கதை சொல்லி"
புதுக்கோட்டையை சேர்ந்த அன்பர் திரு.ஆனந்தன் சன்னாசி
அவர்கள் கடந்த 01.07.2024 அன்று இயற்கை
எய்தினார்.அண்ணாருக்கு நம் ஆற்றுப்படை ஆழ்ந்த
இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றது

